www.tamilarangam.net

சரிநிகர்
'SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


அடுத்த இதழ்
ஜனவரி
15 ல்

இதழ் - 137 டிச.18 - ஜன.14, 1998 விலை ரூபா 10.00

## களுத்துறை :
## சிறைப் படுகொலைகள் !



## தமிழ்க்கட்சிகள் :
## நக்கித் தேய்ந்த நாக்கு




## ஜெயின் அறிக்கை :
## குப்பைக் கூடைக்கு !

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக
வாழ்வமிந்த நாட்டிலே''
-பாரதி

**ஆசிரியர் குழு**

ச. பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம். கே. எம். ஷகீப்
அரவிந்தன்
சி. செ. ராஜா
சிவகுருநாதன்
சேரன்

**வடிவமைப்பு**
ஏ. எம். றஷ்மி

**வெளியிடுபவர்**
ச. பாலகிருஷ்ணன்,
இல. 18/02, அலோ சாலை,
கொழும்பு 03.

**அச்சுப் பதிப்பு**
பிறின்ற் இன்,
இல. 07, கெகடிய இடம்,
சிறிமல் உயன,
இரத்மலானை.

**ஆண்டுச் சந்தா விபரம்**
இலங்கை ரூபா 300/=

வெளிநாடு US $ 50
(தபாற்செலவு உட்பட)
காசுக் கட்டளை / காசோலை
யாவும்
MIRJE என்ற பெயருக்கு
எழுதப்படல் வேண்டும்.

எல்லாத்தொடர்புகளுக்கும்
**ஆசிரியர்
சரிநிகர்,
இல. 04, ஜயரத்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு 05.**

தொலைபேசி : 593615, 584380.
தொலை மடல் : 594229.

E-mail : sari@sri.lanka.net

முன்னைய பிரதிகள்
வேண்டுவோர் எழுதுக.
கைவசம் உள்ள பிரதிகள்
அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்துக்கென
அனுப்பப்படும் படைப்புகள்
திருப்பி அனுப்பப்பட
மாட்டாது.

படைப்புக்களை தாளின் ஒரு
பக்கத்தில் தட்டச்சுச் செய்தோ
அல்லது தெளிவான
கையெழுத்தில் பிரதி செய்தோ
அனுப்பி வைக்கவும்.


## சபாஷ் அப்படித்தான்!

அண்மையில் யாழ் நகரில் உள்ள அரச திணைக்களமொன்றில் இரவு நேரக்காவல் கடமையிலீடுபட்டிருந்த காவலாளிகளை அணுகிய சிலர் நாங்கள் புலிகள், இந்தாருங்கள் இந்தக் கிரனைட்டை அருகிலுள்ள காவலரணில் நிற்கும் இராணுவத்தினர் மீது வீசுங்கள் என்றனர். அத்துடன் எவ்வழியால் போய் எப்படி வீசுவது எனப் பாதையையும் சொல்லிக் கொடுத்தனராம்.

ஆனால், அங்கு காவல் கடமையிலீடுபட்டிருந்த காவலாளிகள் இதற்குச் சம்மதிக்கவில்லை. இராணுவம் தான் எமக்குப் பாதுகாப்பளிக்கிறது. இராணுவம் இல்லாவிட்டால் நாங்கள் நிம்மதியாக வாழ முடியாது என்றனராம். பந்தவர்களும் விடவில்லை. கிரனைட்டை வீசுமாறு வற்புறுத்தினர். இப்படியாக சிறிது நேரம் வாக்குவாதப்பட்ட பின்னர் வந்தவர்கள் திரும்பிச் சென்று விட்டனர். சிறிது நேரம் கழித்து அங்கு வந்த படையினர் நாங்கள் தான் சற்றுமுன்பு வந்தோம் இப்படித்தான் சொல்ல வேண்டும் என முதுகில் தட்டிவிட்டுச் சென்றனராம்.

-பரமர்

# புளொட் பதில் என்ன?

டிசம்பர் 5ம்திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு கோட்டை பாராளுமன்றத்திற்கு முன்பாகவுள்ள வெளியில் புளொட் உபதலைவர் மாணிக்கதாசன் தலைமையில் உண்ணாவிரதம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

வவுனியாவிலிருந்தும், மட்டக்களப்பிலிருந்தும் கூட்டி வரப்பட்ட நூற்றுக்கணக்கானோர் இவ்வுண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

முதலில் உண்ணாவிரதிகளுக்கும், பொலிசாருக்கும் இடையில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்பட்ட போதும் பின்னர் சுமுகமாகவே உண்ணாவிரதம் நடைபெற்றது.

பகல் பன்னிரெண்டு மணியளவில் வாசுதேவ நாணயக்கார எம்.பி. மாணிக்கதாசனுக்கு பழரசம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

இவ்வுண்ணாவிரத்தில் சித்தார்த்தன், சண்முகநாதன் ஆகிய புளொட் பாராளுமன்ற உறுப்பினர்களும, திருமலை நகரசபைத்தலைவர் சூரியமூர்த்தி, மோர்ஜ் அமைப்பின் முக்கியஸ்தர் கந்தசாமி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவ்வுண்ணாவிரத்தை பாராளுமன்றம் முன்பாக நடத்துவதற்கு சித்தார்த்தன் எம்.பி அனுமதி கேட்டபோது அரச மட்டத்தினர் முதலில் மறுத்ததாகவும் பின்னர் வேண்டாவெறுப்பாக அமைதியாக நடத்துங்கள், குழப்பி விடாதீர்கள் என கேட்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

வடக்கே காணாமல் போனோருக்காகவும், தொடரும் கண்மூடித்தனமான கைதுகள், சித்திரவதை போன்ற தமிழ் மக்கள் மீதான அரசின் நடவடிக்கைகளுக்கெதிராகவுமே தாம் இந்த உண்ணாவிரதப்போராட்டங்களை நடத்தி வருவதாக புளொட் கூறுகிறது.




அப்படியாயின் தமிழ் மக்களைக் கண்மூடித்தனமாக கைது செய்வதற்கும், காட்டுமிராண்டித்தனமான முறையில் சித்திரவதை செய்வதற்கும், கொன்றொழிப்பதற்கும் வழிசெய்யும் அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக கைதூக்கும் போதெல்லாம் புளொட் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாருடைய பிரதிநிதியாய் கை தூக்குகிறார்கள் என்ற கேள்விக்கு அவர்களின் பதில் என்னவாக இருக்கப் போகிறது? இதுவும் 'நான் நோகாமல் அடிக்கிறேன் நீ ஓயாமல் அழு சமாச்சாரமோ?'

# காணாமல் போனோரைத் தேடி

டிசம்பர் 10ம்திகதி சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முனனிட்டு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாகவும், லிப்டன் சந்தியிலும் இரண்டு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக நடைபெற்ற ஆர்பாட்டத்தை மகேஸ்வரி வேலாயுதம் தலைமையிலான மனித கௌரவத்திற்கான மன்றம் ஒழுங்கு செய்திருந்தது.

இதில் வடக்கில் காணாமல் போனோர் கைதானோர் பாதுகாவலர் சங்கம், மோர்ஜ், விபவி, இன்போர்ம், தேசிய சமாதானப்பேரவை, எம்.டி.டி.ஆர்., உலக ஒத்துழைப்பு மன்றம் பல அரசியல் கட்சிகள் உட்பட வேறு பல அமைப்புகளும் கலந்து கொண்டன.

மும்மொழிகளிலும் எழுதப்பட்ட பதாதைககளும் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய வண்ணம் ஆர்பாட்டத்தில் கலந்து கொண்ட நூற்றுக் கணக்கான கோஷங்களை எழுப்பினர்.
எங்கள் பிள்ளைகள் எங்கே..., யுத்தத்தை நிறுத்து..., பாஸ் கெடுபிடிகளைத் தளர்த்து, தமிழர்களை சுதந்திரமாக நடமாடவிடு... என்ற கோஷங்கள் எழுந்தன.

ஆர்ப்பாட்டத்தின் முன்னணியில் நவசமசமாஜக்கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்தின, புளொட் உப தலைவர் மாணிக்கதாசன், ஆளுங்கட்சி பா.உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டர்.
லிப்டன் சந்தியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை பெருந்தோட்டப் பகுதி சிவில் அமைப்புகளின் ஒன்றியம் பெருந்தோட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், பெருந்தோட்ட பிரதேசங்களுக்கான கூட்டுச் செயலகம் என்பன ஒழுங்கு செய்திருந்தன.
இவ்வார்ப்பாட்டத்திலும் ஆயிரக் கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர். 'வாக்குரிமை மட்டும் போதாது அடிப்படை. உரிமைகளையும் தா!', 'எமக்கு அடையாள அட்டை வழங்க ஏன் தயக்கம்', 'காரணமின்றி கைது செய்யாதே' என்பன போன்ற கோஷங்களை எழுப்பினார்.
லிப்டன் சந்தியிலும், கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலும் நடந்த சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டிய இரண்டு ஆர்ப்பாட்டங்களிலும் தமிழ் மக்களே பெரும்பாலும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

## புலிகளின்
# மனம் விட்டு ஒரு மடல்!

யாழ்ப்பாணத்தில் புலிகள் மனம் விட்டு ஒரு மடல் என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்றை விநியோகித்துள்ளனர். புலிகள் யாழ் மண்ணை விட்டகன்றதன் உண்மையான நோக்கங்களையும், காரணங்களையும் உங்களோடு மனம்விட்டு கதைக்க விரும்புகிறோம். அதற்கான இராணுவத் தேவையும், பரிமாணமும் விசாலமாக இருக்கின்றன. ஆயினும் காலகதியில் எங்கள் படை நகர்வின் உண்மையான அர்த்தத்தை உங்களாலேயே புரிந்து கொள்ளும் அளவிற்கு மாற்றங்கள் ஏற்படும்.'' இவ்வாறு இந்தத் துண்டு பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

அத்துண்டுப்பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது பாரிய படைக்கல சக்தியோடு பெரும் சேனையென புலிப்படை இருளோடு இருளாக ஊர்வரும். சில யுவதிகள், இளைஞர்கள் இராணுவ காவலரண்களிலும், முகாம்களிலும் நின்று நட்பு பாராட்டுவது வேதனைக்குரியது. யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் களவுகளை புலிகளே செய்கிறார்கள் எனப் பிரச்சாரம் செய்து வருகிறது இராணுவம். எதிரியின் இந்நடவடிக்கைக்கு வலு சேர்க்க கொச்சைத் தனமாக் இழிவான செயற்பாட்டில் இறங்குபவர்களை எச்சரிக்க வேண்டியவர்கள் ஆகிறோம். மக்களின் சொத்துக்களை சூறையாடி எம்மீது பழியைப் போட்டு ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை அடிக்கும் இராணுவமும், துரோகக் கும்பலும் விரைவில் இதற்கான விளைவைச் சந்தித்தே ஆவார்கள் எனவும் அந்தத்துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மு.கா. தேசிய அமைப்பாளர்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசிய அமைப்பாளராக முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரான பசீர் சேகுதாவூத் அவர்களை நியமிக்கவிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. அண்மையில் முஸ்லிம் காங்கிரசின் தலைவரான எம்.எச். எம்.அஷ்ரஃப் அவர்களை பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அவர்களின் அதிருப்தியாளர்கள் அடங்கிய குழுவொன்று காலியிலுள்ள ''ஹாபர் இன் ஹோட்டலில்'' சந்தித்து இது பற்றி கலந்துரையாடியுள்ளது. இந்த சந்திப்புக்கு பஸீர் சேகுதாவூத் அவர்கள்தான் தலைமை தாங்கியுள்ளார்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அவர்களின் செல்வாக்கினை விடவும் முஸ்லிம் காாங்கிரசின் செல்வாக்கு மிகவும் மந்த நிலையிலேயே காணப்படுவதால் கட்சியை புனரமைப்புச் செய்யவேண்டிய அவசியம் முஸ்லிம் காங்கிரசுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் புனரமைப்பு வேலைகளை தளத்தில் நின்று செய்யக்கூடியவர் பசீர் சேகுதாவூத் அவர்கள்தான் என்று முஸ்லிம் காங்கிரஸ் கருதுவதால் அவருக்கு தேசிய அமைப்பாளர் பதவி வழங்கப்படவிருக்கின்றது.

இதேவேளை ஹிஸ்புல்லாஹ் அவர்களின் காத்தான்குடி அதிருப்தியாளர்களில் முக்கியமான ஒருவருக்கு காத்தான்குடி அமைப்பாளர் பதவி வழங்கப்படவிருப்பதாகவும் தெரிய வருகின்றது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அவர்களை சந்தித்த ஹிஸ்புல்லாவின் அதிருப்தியாளர் குழுவினர் பிரதியமைச்சரின் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் பல விடயங்களை எடுத்துக்கூறியதாகவும் தெரியவருகின்றது.

ஆதில்

# சுலைமா லெப்பை அல்ல சும்மா லெப்பை

மாளிக்கைக்காடு ஜி.எம்.எம். எஸ்ஸில் குடிநீர் விநியோகத்தில் ஈடுபட்ட சுலைமா லெப்பை என்பவருக்கு ரூ.325 கொடுப்பனவு உள்ளது. இருவாரத்துள் வந்து பெற்றுச் செல்லவும் என வலயக்கல்வி (கல்முனை) காரியாலயத்தில் இருந்து கடிதம் வந்தது.

கடிதத்திகதி 19.05.1997 இல. கமு/எம்/சீஏ 1997 காசோலை இலக்கம்: 732970 திகதி 31.12.1995 ஆனால் ஜி.எம்.எம்.எஸ். என்ற பாடசாலை மாளிகைக்காட்டில் எந்த மூலை முடுக்கிலும் இல்லை. மற்றது மாளிக்கைக்காட்டில் உள்ள உப பாடசாலைகளிலும் சுலைமா லெப்பை என்ற பெயருடைய ஒருவர் இல்லை.

அப்படியெனில் என்ன நடந்தது...? வலயத்தில் நடைபெறும் பண மோசடிக்கு இது ஓர் உதாரணம். கடிதம் கிடைக்கப் பெற்ற அதிபர் இவ்விடயத்தை அம்பாறை கச்சேரி எண்பார்வை அத்தியட்சகருக்கு அனுப்பியுள்ளார். இவ்வாறு ஏற்கெனவே சில கல்வியதிகாரிகள், அதிபர்கள், சிக்கியது பலருக்கு தெரியாத விடயம்.

# தடம் மாறுகிறது!

மாத்தளை தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஹப்புஆராச்சியின் பொலிஸ் வாகனத்தை அவரது மகன் வேறு ஒரு சாரதியுடன் அனுமதியில்லாமல் எடுத்துக்கொண்டு கொபேகனே நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் நிக்கவெரட்டிய, மாகோ பிரதான பாதையில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த தமிழ் மாணவர்களான ராமன் ரஞ்சித் (13), கந்தசாமி சுதாகர்(16) ஆகியோரை மோதியதால் இரண்டாமவரின் நிலையும், வாகனத்தில் வந்த மகனான ஏ.எம்.சி ஹப்புஆராச்சியின் (21) நிலையும் கவலைக்கிடமாக உள்ளது. இந்த விபத்து கடந்த நவ. 2ம்திகதி முற்பகல் 10.15மணியளவில் நடைபெற்றது.

இந்த வாகனத்தைச் செலுத்தி வந்தவர் அந்த வாகனத்தின் சாரதி இல்லையெனவும், ஆர்.பி.சி. 9935 பி. இந்திக நளீன் பெரேரா எனும் பெயருடைய இவர், விபத்து நடந்த இடத்திலிருந்து தப்பியோடி விட்டதாகவும் அறியக்

→4

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல்:

# தமிழ்க் கட்சிகளின் தேய்ந்த நாக்கு!

"பெப்ரவரி 4ம்திகதியளவில் நாம் யாழ்ப்பாணத்தை இணைத்து விடுவோம்... புலிகளைத் தோற்கடித்தபின் நான் பிரபாகரனுடன் கைகுலுக்குவேன்...''

பாதுகாப்பு பிரதியமைச்சர் ரத்வத்தை அவர்களது இந்த அறிவிப்பை கடந்த வார ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்திருந்தன. அடிக்கடி காலக்கெடு விதிப்பதில் மருமகள் சந்திரிகாவிற்கு சற்றும் சளைக்காத மாமன் அனுருத்த ரத்வத்தை. பெப்ரவரி மாதத்துள் புலிகளை அடக்கி விடலாம் என்றும், தாம் வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருப்பதாகவும், அமைச்சர் அறிவித்திருக்கிறார். கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் கனகராயன்குளத்தில் அடிப்பட்ட நோவு மாற முன்னரே அமைச்சரால் இவ்வளவு உறுதியாக பேசமுடிகிறது என்றால், அவரது சித்தத்தின் தெளிவு பற்றி யாருக்கும் சந்தேகம் வருவது இயல்பே.

ஆனாலும், அவர் சொல்கிறார். 'ஒரு யுத்தத்தில் இழப்புகள் தவிர்க்கப்பட முடியாததே. யுத்தம் என்றாலேயே காயங்கள் இருக்கத்தான் செய்யும். நானோ, இராணுவமோ இதையிட்டுக் கவலைப்படவில்லை. எந்தவிலை கொடுத்தாவது நாம் யாழ்ப்பாணத்தை மீளவும் இணைத்தே தீருவோம்.

அமைச்சர் இதை மட்டும் தெரிவிக்கவில்லை. இன்னுமொரு விடயத்தையும் தெரிவித்திருக்கிறார். அதுதான், 'யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் மக்களால் ஆளப்படுவதை விரும்புகிறார்கள். அங்கே தேர்தல் ஒன்றை சுமுகமாக நடத்த முடியும். அதை விரைவில் அரசாங்கம் செய்யவுளளது' என்பதாகும். அமைச்சரின் இந்தக் கதைகளை அமைச்சரின் புதுமனைவியும் கூட நம்பியிருக்க மாட்டார் என்பது வெளிப்படை. அரசாங்கத்தின் அமைச்சரவையோ, ஏன் ஜனாதிபதியோ கூட, இதனை நம்பப்போவதில்லை. ஒரு காலமும் யுத்தம் செய்யாதிருந்த இலங்கைப் படையில் சாதாரண கேர்ணலாக இருந்த அமைச்சருக்கு மேஜராகவும், ஜெனரலாகவும் பதவியைக் கொடுத்தது இந்த அரசாங்கம். யுத்தம் செய்த அனுபவமே இல்லாமல் யுத்தத்தை நடாத்திக்காட்டுகிற ஆசை அவருக்கு. மாமாவின் ஆசைக்கு மருமகள் கொடுத்த பதவி இந்த பாதுகாப்பு பிரதியமைச்சர் பதவி. அந்தப்பதவியில் இருந்தபடி அவர் விரும்பியபடி செய்கிறார். தான் செய்ததாக நிறைய விஷயங்களைச் சொல்கிறார். சொல்லி விட்டுப் போகட்டும் என்று யாரும் அவரைப் பொருட்படுத்துவதில்லை.

ஆனாலும், அவரது வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுக்கவும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் தான் நமது மதிப்பிற்குரிய தமிழ்க்கட்சிகள்.

யாழ் மாவட்ட, கிளிநொச்சி மாவட்ட மக்கள் தம்மைத்தாமே ஆளுவதற்காக உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்த வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்று அமைச்சர் சொன்னதை வரிக்கு வரி நம்புகிறார்கள் அவர்கள்.

கடந்த வாரம் திடீரென்று தேர்தல் ஆணையாளர் யாழ் மாவட்டத்திலுள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒன்றுக்குமாக மொத்தம் 18 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

டிச. 23ம்திகதிக்கு முன்பாக வேட்பாளர் பட்டியல் தாக்கல் செய்யும்படி அவர் தெரிவித்தார். கடந்த ஆண்டு ஜனாதிபதி இந்தத் தேர்தல்களை நடாத்தப் போவதாக அறிவித்தபோது தமிழ்க் கட்சிகள் எல்லாம் ஏகோபித்த குரலில் 'வேண்டாம், அங்கே தேர்தல் நடத்தக்கூடிய சூழல் இல்லை. மக்கள் அகதிமுகாம்களிலும், தெருவோரங்களிலும் இருக்கையில் அங்கே ஒரு தேர்தலா...?'' என்று ஒப்பாரி வைத்தனர். ஜனாதிபதியிடம் தேர்தலை பின்போடும்படி கோரினர். ஜனாதிபதி அவர்களும் மனமிரங்கி ஒப்புக் கொண்டார்.

ஆனால் இந்தத் தடவை தேர்தல் ஆணையாளர் இதை அறிவித்தபோது ஐ.தே.க. மட்டுமே அங்கே தேர்தல் நடாத்தப்படும் சூழல் இல்லையென்று அறிவித்தது. த.வி.கூ.வும் வெளிப்படையாக அவ்வாறு சொன்ன போதும் உள்ளூர தேர்தல் நடப்பதையே விரும்பியது. தன்னுடைய கட்சி சார்பில் தேர்தலுக்குரிய வேட்பாளர் பட்டியலை அது அவசர அவசரமாகத் தயார் செய்தது. இப்போது கூட்டணியின் சார்பில் திருமதி யோகேஸ்வரன், மாவை சேனாதிராசா ஆகியோர் தேர்தலில் நிற்கப் போகிறார்கள் என்பது வெளிப்படையாகிவிட்டது.

இவர்களை விட முன்னணியில் நின்று பட்டியல் தயாரிக்கும் இயக்கங்கள் புளொட்டும் ஈ.பி.டி.பியும். ஏற்கெனவே வன்னி,யாழ்,திருமலை அனுபவங்கள் அவர்களுக்கு இந்த உத்தியோகங்களின் ருஷியை நன்றாகவே தெரிவித்திருக்கின்றன.

ஈ.பி.ஆர்.எல்.எப்பும் இப்போது தேர்தலுக்கு கிளம்பி அதற்கான வேலைகளில் ஈடுபட்டு வருவதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. ஆக, மொத்தத்தில் எல்லாக் கட்சிகளும் (அ.இ.த.கா.கட்சி தவிர)கச்சை கட்டிக் கொண்டு களத்தில் தயாராக இறங்கி விட்டன.

கையில் ஆயுதம் வைத்துக்கொண்டு திரியும் மற்ற இயக்கங்களிடம் இருந்து ஆயுதங்களைப் பறிக்க வேண்டும் அப்போதுதான் பயமின்றி தேர்தலில் நிற்கலாம் என்று த.வி.கூ. அரற்றுகிறது. ஆனால், பாவம் யாரும்அதற்குச் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை.



நரேசுவதய்யான்:

இந்த நிலையைப் பார்க்கும் போது சில அடிப்படையான கேள்விகள் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

1. கடந்த ஆண்டைவிட இன்று யாழ் மாவட்ட, கிளிநொச்சி மாவட்ட நிலைமைகள் எவ்வளவு தூரத்திற்கு முன்னேற்றமடைந்துள்ளன. ஒரு தேர்தலை நடாத்துமளவுக்கு அங்கு சுமுக நிலை எப்போது ஏற்பட்டது? அதற்கு இந்த தமிழ்க்கட்சிகள் கூறும் சாட்சியங்கள் என்ன?

2.இந்த அரசாங்கம் டிசம்பரில் தான் கொண்டு வரப்போவதாகத் தெரிவித்த அரசியல் திருத்த யோசனைகளை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளில் இறங்காமல், அதற்காகப் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடாத்தவோ சர்வஜன வாக்கெடுப்புக்கோ போகாமல், அவசரமாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை நோக்கி ஓடுவது ஏன்?

→5



## கேள்வியும் பதிலும்

2 ஜனவரி 1997

தேர்தல் ஆணையாளர்,
தேர்தல் செயலகம்,
சரண மாவத்த,
ராஜகிரிய.

ஐயா,

### தேர்தல் இடாப்புக்கள்

யாழ்ப்பாணம் வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களின் தேர்தல் இடாப்புக்கள் சம்பந்தமான கீழ்வரும் தகவல்களை தங்களால் இயன்றளவு விரைவாக எனக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. மேற்குறிப்பட்ட தேர்தல் மாவட்டங்கட்கான தேர்தல் இடாப்புக்கள் வழமைபோல 1990, 1991, 1992, 1993,1994,1995,1996 ஆகிய ஆண்டுகளின் ஜுன் மாதங்களில் திருத்தப்பட்டனவா?

2. அவ்வாறு திருத்தப்பட்டிருப்பின் அவை அந்தந்த ஆண்டுகளில் எந்தெந்த அரசியல் கட்சிகளின் உதவியுடன் திருத்தப்பட்டன?

3. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மேற்குறிப்பிட்ட ஆண்டுக்கான இந்தத் திருத்திய தேர்தல் இடாப்புகளை கொழும்பில் எங்கே பரிசீலனைக்காகப் பார்க்க முடியும்?

4. மேற்குறிப்பிட்ட இடாப்புகளை கொள்வனவு செய்வதற்கு எனக்கு முடியுமா?

இந்தத் தகவல்கள் மிகவும் அவசரத் தேவை காரணமாக கோரப்படுவதால் தங்களது விரைவான பதிலை எதிர்பார்க்கிறேன்.

நன்றி

குமார் பொன்னம்பலம்
பொதுச் செயலாளர்
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி.

**இதற்கான பதில்**:

பொதுச் செலாளர்,
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி,
15,இராணி வீதி,
கொழும்பு -03

ஐயா,

### தேர்தல் இடாப்புகள்:

உங்கள் 02.01.1997 திகதியிடப்பட்ட மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான கடிதத்திற்கான பதிலை இங்கே தருகிறேன்.

**கேள்வி இல.1**.

தேர்தல் இடாப்பு திருத்தம் - 1990.

யாழ்ப்பாணம், வன்னி மட்டக்களப்பு மாவட்டங்களில் திருத்த வேலைகளைத் தொடர முடியாமல் போயின. வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீண்டும் ஆரம்பமான சுமுகமற்ற சூழ்நிலையினால் திருத்த வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்தன. திருமலையிலும் அம்பாறையிலுமுள்ள ஒரு சில பகுதிகளைத் தவிர.

1991 கணக்கிடல்கள் திருமலை, மட்டக்களப்பு, வன்னி மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டன. ஆயினும் தொடர்ச்சியான வன்முறையும், ஆயுதப்படைகளது நடவடிக்கைகளதும் காரணமாக யாழ் மாவட்டத்தில் வேலைகளைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது.

1992 வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவிய சிவில் சுமுகமின்மை காரணமாக கணக்கிடல் வேலைகள் குழம்பிப் போயின. பின்னர் ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கணக்கிடல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

1994 சிவில் சுமுகமின்மை வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து கணக்கிடல் வேலைகள் குழம்பி வந்தது. ஆயினும், வாக்காளர்களுக்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள வசதிகள் இருந்தன.

1995 திரும்பவும் வன்முறை வெடித்ததும், ஆயுதப்படையினரின் நடவடிக்கைகள் ஆரம்பமானதும், யாழ் மாவட்ட வேலைகளை தொடர்வதில் இருந்து தடை செய்தன.

1996 திரும்பவும் வன்முறை வெடித்ததும், ஆயுதப்படையினரின் நடவடிக்கைகள் ஆரம்பமானதும், யாழ் மாவட்ட வேலைகளை தொடர்வதில் இருந்து தடை செய்தன.

**கேள்வி 2**.

1990; அரசியல் கட்சிகளின் எந்தப்பிரதிநிதிகளும் திருத்தவேலைகளில் பங்கு கொள்ளவில்லை.

1991:அரசியல் கட்சிகளின் எந்தப்பிரதிநிதிகளும் திருத்தவேலைகளில் பங்கு கொள்ளவில்லை.

1992: திருமலை மாவட்டத்தில் ஐ.தே.க. , ஸ்ரீ.ல.சு.க.,

1993: வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஐ.தே.க.

1994: இல்லை.

1995: மட்டக்களப்பு மாவட்டத்தில் - ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க.

திருமலை மாவட்டத்தில் - ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க.

1996: வன்னி மாவட்டத்தில் , ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க.

திருமலை: ஐ.தே.க.

**கேள்வி. 3. இல்லை.**

**கேள்வி. 4. இல்லை.**

உங்கள் உண்மையுள்ள
தயானந்த திசாநாயக்கா.
தேர்தல் ஆணையாளர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மட்டு: குண்டு வெடிப்புக்கள்: சூத்திரதாரிகள் யார்?

மட்டக்களப்புப் பகுதியில் தொடர்ந்து, இடம் பெற்று வரும் குண்டுவெடிப்புக்கள் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கின்றன. 90ம் ஆண்டு காலப் பகுதியில் மட்டக்களப்பில் நகர்ப்பகுதியிலும் புறநகர்பகுதியிலும் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொது மக்கள் அநாமதேயமாக பல்விதமான பாணியில் கொல்லப்பட்ட நிகழ்வுகளின் காலம் தாண்டிய பரிமாண வளர்ச்சியாகவே இந்த அநாமதேயக் குண்டு வெடிப்புக்கள் மூலம் தமிழ் மக்கள் கொல்லப் படுகின்றனரா என்று எண்ணத் தோன்றுகின்றது. இவ்வாறு எண்ணுவதற்கு 90ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவப் புலனாய்வுத்துறை உயரதிகாரியாய் இருந்தவர் தான் இன்று மட்டக்களப்புக்கு பிரிகேடியராக வந்திருப்பவர் என்பது ஒரு காரணமாக இருப்பதும், இதுவரையும் நடந்த குண்டு வெடிப்புக்களில் பொது மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதும், காரணங்களாக இருக்கின்றன. இத்தொடர்ச்சியான குண்டு வெடிப்புக்களை இராணுவக்கண்ணோட்டத்தில் பார்க்கின்ற போது மேலும் பல காரணங்கள் குறிப்பிடக் கூடியதாக உள்ளது.

1. இராணுவ அடிமட்டத்தில் யுத்தம் தொடர்பாக உளவியல் ரீதியாக ஏற்பட்டுள்ள தாக்கம்.
2. வடபகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவம் சந்தித்து வருகின்ற இராணுவ உயிரிழப்புக்களுக்குப் பதிலடியாக தமிழ் பிரதேசத்தின் பிறிதொரு இடத்தில் தமிழ் மக்களை புலியென்ற போர்வையில் புலிப்பாணியில் அநாமதேய குண்டுவெடிப்புக்கள் மூலம் அழித்தொழித்தல்.
3. இக்குண்டு வெடிப்புக்களைக் காரணம் காட்டி, தமது கட்டுப்பாட்டிலுள்ள இராணுவ மையங்களிலும், தமிழ் மக்களினதும் பாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்கின்ற வகையில் புலிகள் ஊடுருவி விட்டதாகக் காட்டுவதன் மூலம் யுத்த நெருக்கடி நிறைந்த பிரதேசமான வடபகுதிக்கு இராணுவ நடவடிக்கைக்காக தாம் இடமாற்றம் பெற்றுச் செல்லாமல் தமது உயிரை தக்க வைக்கவும் இது இடம் பெறலாம்.

   வடபகுதிக்கு இடமாற்றப்பட்ட இராணுவ வீரர்கள் தப்பியோடுவது, தமிழ் பொலிசார் கடமைக்கு செல்லாதது போன்றன கவனத்திற்கொள்ளப்பட வேண்டியவை.
4. தொடர்ச்சியான குண்டுவெடிப்புக்கள் மூலம், புலிகள் தான் மக்களைத் தாக்குகின்றார்கள் எனறு பிரச்சாரப்படுத்தி புலிகளிடம் இருந்து தமிழ் மக்களை அந்நியப்படுத்தல்.
5. உலக அரங்குகளின் கண்டனத்துக்கு புலிகளை உட்படுத்துவதன் மூலம் புலிகளைப் பயங்கரவாதிகள் என உறுதிப்படுத்தல்.
6. பண்டிகைக் காலமாகையால் சனநெரிசல் அதிகளவில் இருப்பதால் அடிக்கடி நிகழ்கின்ற குண்டு வெடிப்புக்கள் மூலம் மக்களின் நடமாட்டத்தைக் குறைக்கமுடியும் இது தமது இராணுவ ஆட்பற்றாக் குறைப்பிரச்சனையை நிவர்த்தி செய்யும்.

தொடர்ந்து நடந்து முடிந்த குண்டு வெடிப்புக்கள் அனைத்தும் இக்காரணங்களை ஊர்ஜிதப்படுத்தும் வகையிலேயே நடந்தேறியுள்ளன.

**களுதாவளையில் நடந்த சம்பவம்:**

மட்டக்களப்பில் இருந்து புறப்பட்டு அக்கரைப்பற்று நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸில் ஆரையம்பதியில் வைத்து விசேட அதிரடிப் படையினர் ஏறியுள்ளனர். களுதாவளைப் பிள்ளையார் கோயிலடியை பஸ் அண்மித்ததும் பின்கதவு வழியில் நின்று கொண்டிருந்த இரு படையினரில் ஒருவர் ஏதோ ஒரு பொருளை பின் இருக்கையின் கீழ் வைத்து விட்டு இருவரும் முன் பகுதிக்கு சென்று இரண்டு, மூன்று நிமிடங்களில் பாரிய சத்தத்துடன் குண்டு வெடித்தது. இச்சம்பவம் அனைத்தையும் அவதானித்துக் கொண்டிருந்த ஒரு பெண் தற்போது ஊனமான நிலையில் இருக்கின்றார். இவரது இருக்கையின் கீழேயே அந்தப்பொருள் வைக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பெண் தனது உயிருக்குப் பயந்து எதையும் வெளியில் சொல்ல முடியாத நிலையில் உள்ளார்.

இதேபாணியிலேயே மட்டக்களப்பு நகரில் ஓட்டோவில் வெடித்த குண்டும் இருக்கின்றது. இந்த ஓட்டோ மட்டக்களப்பு பாலமீன் மடுவில் இருந்து இரு பொலிசாரினால் அரசடிச் சந்திவரைக்கும் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றது. அரசடிச் சந்தியில் இருந்து மீண்டும் ஏறிய இரு பொலிசார் ஓட்டோ தரிப்பிடம் வரைக்கும் வந்துள்ளனர். இதன் பின்னரே இவ்வோட்டோ தபால்காரர் சதீசினால் வாடகைக்கு அமர்த்தப்பட்டு சிறிது நேரத்தில் ஓட்டோக்குள் இருந்த குண்டு வெடித்தது. (ஓட்டோ தரிப்பிடத்துக்கும் குண்டு வெடித்ததற்கும் இடையிலுள்ள தூரம் கிட்டத்தட்ட 300யார்)

குண்டு வெடித்த ஸ்தலத்திலேயே தபால் ஊழியர் சதீஸ் இரண்டு கால்களும் சிதறி உயிரிழந்தார். சாரதி பேர்னாட் வீதிச்சோதனை கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார். அவரது நெற்றியிலும் மார்பிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டுள்ளன. இதே போன்று மட்டுநகர் பொதுச்சந்தையில் வெடித்த குண்டு தொடர்பாக இராணுவத்தினர் 'சந்தைக்கு பொருட்கள் வாங்கச் சென்றவர்கள் மீதே புலிகள் குண்டு வீசினார்கள்' என்று கூறினர். ஆனால் மடித்து வைக்கப்பட்ட சாக்கில் இருந்தே குண்டு வெடித்தது எனப் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றார்கள்.

பொது மக்கள் பிரயாணம் செய்யும் வாகனங்களில் படையினர் பிரயாணம் செய்யக் கூடாது என்று அன்றிலிருந்து இன்று வரை தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகள் கோரிக்கைகள் விட்டார்கள். பாராளுமன்றத்தில் பேசினார்கள். நடந்தது தான் என்ன? தமிழ் மக்களின் உயிர்கள் காவு கொள்ளப் படுகின்றன. மனித உரிமைகள் மீறப் படுகின்றன. இதற்கு ஒரு தீர்வு கிடைக்கும் வரையுமாவது பாராளுமன்றத்துக்கு வெளியில் நிற்க அவர்கள் தயாராக இல்லை. அவர்கள் தங்கள் பதவிகளை தக்க வைப்பதில் தான் குறியாக இருக்கிறார்கள்.



| காலம் | இடம் | சம்பவம் | விளைவு |
|---|---|---|---|
| 05.12.95 | புதுக்குடியிருப்பு | பொதுமக்கள் வந்துகொண்டிருந்த வாகனங்களுக்கு எஸ்.டி.எப். சுட்டது. | 12 பேர் இறந்தது. 15பேர் காயம் |
| 8.12.96 | களுவன்கேணி | பிரயாணிகள் சென்ற வாகனத்தில் இராணுவத்தினர் சென்றபோது புலி என நினைத்து இராணுவம் தாக்குதல் | 16 பொது மக்கள் காயம் |
| 13.7.97 | ஒந்தாச்சிமடம் | பிராயணிகள் வாகனத்தில் எஸ்.டி.எப். சென்றபோது புலிகள் தாக்கியது. | 2 பொதுமக்கள் காயம் |
| 24.10.97 | ஒந்தாச்சிமடம் | பிரயாணிகள் சென்ற பஸ் கன்னிவெடித் தாக்குதலுக்குள்ளானது. | 8 பிரயாணிகள் காயம் |
| 3.12.97 | களுதாவளை | பிராயணிகள் சென்ற பஸ்ஸில் எஸ்.டி.எப். சென்று கொண்டிருந்த வேளையில் கைக்குண்டு வெடித்தது. | 32 பிரயாணிகள் காயம். 2 பிரயாணிகள் இறந்தனர். ஒரு பெண் கால் இழந்தார். |
| 4.12.97 | காத்தான்குடி | தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தடியில் குண்டு வெடித்தது. | |
| 9.12.97 | மட்டக்களப்பு | மட்டுநகர் பொதுச்சந்தையில் குண்டு வெடித்தது. | 51 பொது மக்கள் காயம், 5 பேர் இறந்தனர் |
| 11.12.97 | மட்டக்களப்பு | மட்டுநகரில் ஓட்டோவில் குண்டு வெடித்தது | 2 பொது மக்கள் இறந்தனர். |
| 12.12.97 | மட்டக்களப்பு | மட்டுநகர் பொதுச்சந்தையில் சைக்கிள் பாக்கில் இருந்த சைக்கிளில் இருந்த குண்டு வெடிப்பு. | |

- ராஜபுத்ரன் -

## பத்தாயிரம் பொக்கற்றில்?

கோறளை மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையில் அதன் செயலாளரால் நிதி மோசடி ஒன்றுசெய்யப் பட்டுள்ளதாக தெரியவருகின்றது. அதாவது மாஞ்சோலை சனசமூக நிலையத்திற்கு தளபாட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அவர்களினால் 40,000 ரூபா பணம் ஒதுக்கப்பட்டிருந்தது. இதற்குரிய தளபாட உபகரணங்களை கொள்வனவு செய்து கொடுக்குமாறு ஓட்டமாவடி பிரதேச செயலகம் பிரதேச சபையை வேண்டியிருந்தது.

பிரதேச சபையின் செயலாளரால் காத்தான்குடியிலுள்ள தளபாடக் கடையொன்றில் இருந்து சுமார் 38,500 ரூபா பெறுமதியான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு அதற்குரிய பற்றுச்சீட்டுப் பெறப்பட்டிருந்தது. தளபாட உபகாரணங்கள் மாஞ்சோலை சனசமூக நிலையத்தை வந்து சேர்ந்த போது அதன் நிர்வாகிகள் இதன் பெறுமதி 38,500 ரூபாவாக இருக்க முடியாது என பிரதேச சபையின் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். ஆனால் செயலாளர் மறுத்து விட்டார்.

பின்னர் சனசமூக நிலைய உறுப்பினர்கள் கொள்வனவு செய்யப்பட்ட கடையை அணுகிய போது உண்மையாக ரூபா 28,500/=க்கு கொள்வனவு செய்யப்பட்டு 38,500/= ரூபாவுக்கு மோசடித்தனமான முறையில் பற்றுச் சீட்டுப் பெறப்பட்டிருந்தது. 40,000 ரூபா பணத்தில் 10,000/= ரூபாவை மோசடி செய்த செயலாளர் தற்போதும் பதவியில் உள்ளார். இதனை அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தபோது 10,000 ரூபாவை செயலாளரிடமிருந்து அறவிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இப்படியொரு ஊழல் பேர் வழிக்கான தண்டனை இதுதானா? என பொது மக்கள் வினவுகின்றார்.

**-ஆதில்**

2→

## தடம்...

கிடைத்துள்ளது. வாகனத்தின் நட்டம் ஒரு இலட்சம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

ஒரு பொலிஸ் பிரிவின் வாகனத்தை வேறு ஒரு பகுதிக்கு கொண்டு செல்ல வேண்டுமானால் அப்பகுதியின் பிரதிப் பொலிஸ் மாஅதிபரின் அனுமதியைப் பெறவேண்டும். ஆனால் மகன் எவ்வித அனுமதியும் இல்லாமல் வாகனத்தை எடுத்துச் சென்றுள்ளமை அறியக்கிடைத்துள்ளது.

தற்போது தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஹப்புஆராச்சி தான் அலுவல் நிமித்தம் வாகனத்தை ஏற்று, தன் பணிக்காக வெளியில் சென்றதாக கதை சோடிப்பதாக தெரிகிறது. வாகனத்தையும் நிக்கவெரட்டிய பொலிஸார் ஒளித்துவைத்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்றபடியால்லா இந்நிலை.

***தமிழ்த்துறையன்***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ரகசியப் பேரங்கள்!

'தனியார் மயப்படுத்தல்' என்ற சொல்லை முதலில் இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர் ஜே.ஆர்.

இயங்காத, ஊழல் மலிந்தோ தவறான முகாமைத்துவம் காரணமாகவோ நஷ்டமேற்பட்ட அரசு சார்பு நிறுவனங்களை தனியாருக்கு விற்பதன் மூலம் அவற்றை 'இயங்க' வைக்கலாம் என்பது அன்றைய கோட்பாடாக இருந்தது.

இந்தக் கோட்பாட்டின் கீழ் பல தோட்டங்கள் தனியாருக்கு விற்கப்பட்டன; விற்கப்படும் முயற்சிகள் நடந்தன. இந்த முயற்சிகட்கு பலத்த எதிர்ப்பும் இருந்தது. குறிப்பாக அந்தந்த நிறுவனங்களின் ஊழியர்களிடமிருந்து இந்த எதிர்ப்பு வந்தது.

பிறகு பிரேமதாச பதவிக்கு வந்தார். தனியார் மயமாக்கலை அவர் இல்லாதொழித்தார். பதிலாக அவர் 'மக்கள் மயமாக்கல்' என்ற ஒரு திட்டத்தை அறிவித்தார். இதன்படி இத்தகைய நிறுவனங்கள் மக்களுக்கு விற்கப்படுகின்றன என்று கூறப்பட்டது. இந்த அடிப்படையில் நிறுவன 'ஊழியர்களே நிறுவனத்தின் உரிமையாளர்கள்' என்ற புகழ்பெற்ற வாசகத்துடன் அதே தனியார் மயப்படுத்தலை அவர் தொடர்ந்தார்.

இந்த அழகான பதாகையின் கீழ் 'இயங்காத' நிறுவனங்கள் அல்ல, மாறாக லாபகரமாக இயங்கிய நிறுவனங்களே விலை போயின.

மக்களின் பெயரால் தனியாரின் கைக்கு லாபகரமான அரச நிறுவனங்கள் பல கைமாறின. இந்த கைமாறல்களின் போது கோடிஸ்வரர்கள் ஆனவர்களில் ஒருவர் தான் ஹரி ஜெயவர்த்தன. இலங்கை வடிசாலைக் கூட்டுத்தாபனம் முதல் லக்ஸ்பிறே பால் மாவை விற்பனை செய்த லங்கா மில்க் பூட் நிறுவனம் வரை பல நிறுவனங்களை பிரேமதாச காலத்தில் வாங்கிய 'மக்களில்' ஒருவர் இவர்.

இவர் இன்றைய ஜனாதிபதியால் எயர் லங்கா நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளது யாருக்கும் தெரியாததல்ல.

மிக அண்மையில் இவருக்குச் சொந்தமான ஸ்டாசன் நிறுவனத்தின் வரி ஏய்ப்புகள் பற்றிப் பரவலாக பத்திரிகைகள் எழுதியிருந்தன. எயர் லங்கா விற்குள் இவர் செய்யும் நடவடிக்கைகளும் விமர்சிக்கப்பட்டன.

கோடிக்கணக்கான வரியேய்ப்புக்கு இவரது நிறுவனம் காரணம் என தகவல்கள் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தன. ஆயினும், அவர் பதவி விலகுமாறு கோரப்படவில்லை. ஆனால், எயர் லங்கா இன்று எமிரேட்ஸ் நிறுவனத்திற்கு விலை போகிறதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எமிரேட்ஸ் நிறுவனம் எயர் லங்காவின் பங்குகளின் 40%த்தை வாங்குவதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்து ரகசிய ரகசியமாக அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முடிந்து விட்டதாக தெரியவருகிறது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, இலங்கை தொலைத் தொடர்புச் சேவை என்பவற்றின் வரிசையில் இப்போது எயர் லங்கா. பெறுமதியை விட குறைந்த விலைக்கே முன்னைய நிறுவனங்கள் அனைத்தும் விற்கப்பட்டன; விற்கும் முயற்சி எடுக்கப்பட்டது. எயர் லங்கா எப்படியோ ?

இந்த அரசாங்கம் பதவிக்கு வருகையில் அறிவித்த முக்கிய கோட்பாடுகளில் ஒன்று வெளிப்படைத்தன்மை. ஆனால் இன்று வரை அது வெளிப்படையாகச் செய்ததாக ஒன்றையும் கூறமுடியாது.



பிரபாகரனுடனான பேச்சுவார்த்தை முதல் எயர் லங்கா பேரம் வரை எல்லாம் ரகசியமாகவே நடந்து முடிந்துள்ளன.

வெளிப்படையாக செய்வது ஒன்றேயொன்றுதான்.

வடக்கு கிழக்கு ம்க்கள் மீதான யுத்தம்!

## தமிழ்க்...

3. ஏற்கெனவே திருமலை மாநகர சபை அதிகாரத்தைக் கையிலே வைத்திருந்தும்(ரெலோ) ஒரு சந்தையைத் திறப்பதற்கும் கூட அதிகாரமற்று இருக்கும் ஒரு நிலையில் இந்த சபைகளுக்குப் போட்டியிடுவதால், புதிதாக எதை இந்தக் கட்சிகள் சாதிக்கப் போகின்றன?

4. இந்தத் தேர்தலை நடாத்துவதற்கு அவசியமான அடிப்படை திருத்தப்பட்ட வாக்காளர் இடாப்புகள் தயாரிக்கப்பட்டோ தேர்தல் முறைப்படி நடப்பதற்கான பாதுகாப்பு ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டோ இருக்கின்றனவா என்பது பற்றி பேசாமல் முண்டியடிப்பது ஏன்? (பார்க்க கடிதமும் பதிலும்)

அதுவும் ஏற்கெனவே கிழக்கில் நடந்த தேர்தலில் நடந்த தேர்தல் கால முறைகேடுகள் அம்பலத்துக்கு வந்துள்ள இன்றைய நிலையில் மௌனமாக இதை ஏற்றுக்கொண்டது ஏன்?

5. தேர்தலை நடாத்துவதன் மூலமாக அங்கு சுமுகமான நிலை இருப்பதாக உலகுக்கு காட்டவே அரசாங்கம் முயல்கிறது. அங்கு தேர்தலில் இறங்குவது மிகவும் ஆபத்தான ஒன்றாகும் என்றெல்லாம் கூறிக் கொண்டு ஆயினும், அரசாங்கம் தேர்தலை நடாத்த முன்வந்துள்ளதால், நாம் அதில் இறங்க முடிவு செய்துள்ளோம் என்று (புளொட் சித்தார்த்தன்) கூறுவது யாரை ஏமாற்ற?

இந்தக் கேள்விகளைக் கேட்கும் போதே இவற்றிற்கான விடைகள் வெளிப்படையாகத் தெரிகின்றன. தமிழ் மக்களின் நலனை காக்கும் நோக்குடன் செயற்படுவதாக கூறும் இந்தத் தமிழ் கட்சிகள் எதுவும் அந்த மக்களது நலனிலோ அல்லது உரிமையிலோ உள்ள அக்கறை காரணமாக இந்தத் தேர்தலில் நிற்கவில்லை. உண்மையில் அப்படி ஏதாவது அவர்கட்கு இருந்திருக்குமானால், இந்தத் தேர்தலை நிராகரித்திருப்பார்கள்; முதலில் பிரச்சினைகளைத் தீர்ப்பதாக கூறும் உனது திட்டத்தை நடைமுறைக்குக் கொணடு வா பிறகு தேர்தலை நடாத்தலாம் என்று கூறியிருப்பார்கள். ஆனால் இவர்களோவென்றால் அரசாங்கத்தின் பிரசாரத்திற்கு, அங்கு நிலைமை சுமுகமாகி விட்டது என்ற பிரசாரத்திற்கு ஏஜென்டுகளாக செயல்படுபவர்களாகவே அவர்கள் உள்ளனர். இந்த அரசாங்கம் - தான் மாபெரும் இமாலயச் சாதனையைச் சாதித்து விட்டதாகக் கூறிக் கொண்டு தனது தீர்வுத் திட்டத்தை அறிவித்தது. அதை எந்தப் பயனும் அற்ற ஒரு திட்டம். இது தமிழ் மக்களது அபிலாஷைகளை தீர்க்க முயலவில்லையென்று கூறி ஆச்சரியப்படும் விதத்தில் அனேகமாக எல்லாக் கட்சிகளுமே நிராகரித்தன. ஆனால் தேர்தல் என்று வந்தவுடன் அவைகளால் அப்படி ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியவில்லை. ஏன் என்றால் இது பதவியுடன் சம்பந்தப்பட்டது. உடனடியாக இவர்களுக்கு சில அதிகாரங்களை தமது சொந்த வயிறுகளை நிரப்புவதற்கான அதிகாரங்களைத் தரக் கூடியது இது. அரசாங்கம் தேர்தலை வைக்காவிட்டால் பேசாமல் இருந்து விடலாம். ஆனால் வைத்தால் பங்கு பற்றாமல் இருந்து விடமுடியாது.

தமிழ்க் கட்சிகளுக்கு நக்கி, நக்கி தேய்ந்த நாக்கு. அந்த நாக்கால் அவர்கள் எதையும் சொல்வார்கள். அங்கு தேர்தல் நடாத்தும் சூழல் இல்லையென்பார்கள். தேர்தல் நடாத்தினால் பங்கு பற்றுவோம் என்பார்கள். அரசாங்கத்தின் தீர்வுப்பொதியை எதிர்ப்போம் என்பார்கள். இல்லை அதைத்தான் நாம் நடைமுறைப்படுத்துவோம் என்று அரசாங்கம் இறங்கினால், அதைத்தாமே முன்னின்று நடைமுறைப்படுத்தப் போவதாகவும் கூறுவார்கள்.

அவர்கள் நாக்குக்கு கூச்சமில்லை. மானரோசமுமில்லை. தமது வயிற்றுப் பிழைப்புக்கு வசதியென்றால் அது எந்தப் பக்கமும் சாயும். தமிழ் மக்களை விலை கூறி விற்கவும் அது தயங்கப் போவதில்லை.

ஆக, இந்தத் தமிழ்க் கட்சிகளின் நாக்கை நம்பித் தான் இலங்கை தமிழ் மக்களின் தலைவிதி இருக்கிறதென்றால் அதன் தலைவிதியைப் பற்றி எதைச் சொல்ல.

பாரதி கவிதை வரி ஒன்று ஞாபகம் வருகிறது.

''விதியே விதியே தமிழ்ச் சாதியை என்செயக் கருதி இருக்கின்றாயடா?''

## மெல்லத் தமிழினி...

### உயிர் வாழும் உரிமை ஆமைகளுக்கு மட்டும் தான் !

டிசம்பர் 10ம்திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம். வாய்கிழியக் கத்துகின்ற பல்வேறு விடயங்களில் இன்றெல்லாம் இலங்கையில் மனித உரிமைகளும் ஒரு விடயமாகி விட்டது. ஆளும் அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் முதல், எதிர்க் கட்சிகள் வரை இதைப் பற்றி பேசாதவர்கள் இல்லை.

மனித உரிமைகட்காக பேசாத பேச்சாளர்களும் எழுதாத எழுத்தாளர்களும் இல்லையென்று சொல்லும் அளவிற்கு இது முக்கிய விடயமாகி விட்டது. ஆனால் மனிதரை மனிதராக மதிப்பதே மனித உரிமைகளுள், முக்கியமாக மனித உரிமை என்பது இவர்களில் பலருக்கு ஞாபகம் இருப்பதில்லை. கடந்த டிசெ.10ம் திகதி மனித உரிமைகள் தினத்தன்று நடந்த ஒரு சம்பவம் இது.

கொட்டாஞ்சேனையினூடாக மட்டக்குளி நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் வண்டி நிறுத்தப்படுகின்றது. சீருடை அணிந்தவர்கள் பயணம் செய்து கொண்டிருந்த பயணிகள் அனைவரையும் இறங்கும்படி கட்டளையிடுகிறார்கள்.

இறங்கியவர்களில் தமிழர்கள் என அடையாளம் காணப்பட்டவர்கள் தவிர மற்றையவர்கள் பஸ்ஸில் முதலில் ஏற்றப்படுகிறார்கள். பிறகு தடுத்து வைக்கப்பட்டவர்கள் மீது விசாரணை தொடர்கிறது.

பிறந்த ஊர்...?

எங்கே போகிறாய்...?

எங்கிருந்து வருகிறாய்...?

சோதித்தது இராணுவம். சிங்கள மொழியில் கூட மரியாதையாக உரையாடத் தெரியாத சிங்கள இராணுவம்.

சோதிக்கப்பட்ட விதமும், விசாரிக்கப்பட்ட முறையும் எரிச்சலையும், ஆத்திரத்தையும் தவிர வேறெதையும் எவருக்கும் ஏற்படுத்தியிருக்க முடியாது. பாதுகாப்புக் காரணங்களுக்காக சோதிப்பவர்கள் தேசிய அடையாள அட்டை, பொலிஸ் நிலையப் பதிவு துண்டு, வேலை செய்யும் இட அடையாள அட்டை என்பவற்றைப் பார்த்தால் போதாது என்றால் பயண முடிச்சுகளையும், உடலையும் சோதித்து விட்டுப் போகட்டும். ஆனால், எங்கே போகிறாய்? எங்கிருந்து வருகிறாய்? அங்கு ஏன் போகிறாய் என்று, கேட்க இவர்களுக்கு எந்தச் சட்டம் உரிமை வழங்குகிறது?

ஒருவர் தான் இந்த நாட்டுப்பிரஜை என்பதை உறுதிப்படுத்த தேசியஅடையாள அட்டையும், இருக்கும் பிரதேசத்தை உறுதி செய்ய பொலிஸ் பதிவு துண்டும், இருக்கும்போது அவரை எதற்காக ஒரு குற்றவாளியை விசாரிப்பது போல் விசாரிக்க வேண்டும். இந்த நாட்டில் ஒரு பிரஜைக்கு தான் விரும்பிய இடத்திற்குப் போய் வர உரிமை கிடையாதா...? அதுவும் தமிழ் இனத்தை சேர்ந்தவர் என்றால், அவருக்கு அந்த உரிமை நிச்சயமாக இல்லையா?
அவர் பிறந்த இடம் வடக்கு கிழக்காக அல்லது மலையகமாக இருந்து விட்டால், அவர் இங்கே ஒரு அந்நியர் - ஒரு புலி தானா?

இதுதான் பாதுகாப்பு படைகட்கு வழங்கப்பட்டுள்ள அறிவித்தல் என்றால், மனித உரிமைகளைப்பற்றி பேசுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது. உண்மையில் மனித உரிமைகள் எல்லாம் பெரிய விடயங்கள். இங்கெல்லாம் அது பேச்சுக்குத் தான். ஒரு முறை பல்கலைக்கழக விரிவுரையாளாரான எனது நண்பர் ஒருவர் சொன்ன விடயம் ஞாபகத்துக்கு வருகிறது.

'இலங்கை அரசியல் சட்டத்தில் மனிதர்கள் உயிர் வாழ்வதற்கான உரிமை எழுதப்பட்டிருக்கவில்லை' என்று சொன்னார் அவர்.

இந்த நாட்டில் 'ஆமைகளின் உயிரை பாதுகாக்கத் தான் சட்டம் இருக்கிறது' என்று முன்பொரு முறை ஒரு தமிழ் சஞ்சிகை எழுதியதும், ஞாபகம் வருகிறது.

இந்த லட்சணத்தில் மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுகிறது இங்கே!

### பரதேசிகளுக்கு இடமில்லை!

மனித உரிமைகள் தினத்தையொட்டி மோர்ஜஜும் இலங்கை மன்றக்கல்லூரியும் சேர்ந்து ஒழுங்கு செய்திருந்த நிகழ்ச்சி ஒன்றிற்கு போன சரிநிகர் அலுவலக நண்பர்கள் தமிழர்கள் என்பதற்காக நிகழ்ச்சி மண்டபத்துள் அனுதிமதிக்கப்படவில்லை.

மோர்ஜ்ஜின் ஸ்தாபக உறுப்பினரும், அதன் முக்கியஸ்தருமான கந்தசாமி அவர்கள் தன்னை மோர்ஜ உறுப்பினர் என்று கூறியும் கூட -மண்டபத்திற்கு நிதியமைச்சர் ஜி.எல். பீரிஸ் அவர்கள் வருவதாக இருந்ததால் - என்றாலும், நீ தமிழன் தானே என்று கூறி உள்ளே அனுமதிக்க மறுத்து விட்டார்கள் பாதுகாப்பு அதிகாரிகள்.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபம் உள்நாட்டவர்க்கும் சர்வதேசத்தவர்க்கும் தான். தமிழர்களைப்போல் பரதேசிகளுக்கு அல்ல என்று நினைத்தார்களோ என்னவோ அவர்கள் விடவேயில்லை. இது இன்றைய இலங்கையின் மனித உரிமையின் அழகிற்கு நல்ல உதாரணம்.

வாழ்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு!

வாழ்க அதன் புரட்சிகர அரசாங்கம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 97இல்
# காணாமல் போனோர்!

யாழ் குடாநாட்டை புலிகளிடமிருந்து அரசபடையினர் கைப்பற்றியதிற்கு பின்னரான 18 மாதகால இடைவெளியில் 685க்கு மேற்பட்டவர்கள் அரச படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளார்கள்.

கடந்தவாரம் வெளியான சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கையில் குடாநாட்டில் அரசபடையினரால் கைதானோரில் 600க்கு மேற்பட்டோர் படை முகாம்களில் வைத்து சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம். அல்லது தடுப்பு முகாம்களில் வைத்துக் கொலை செய்யப்பட்டிருக்கலாமென தெரிவிக்கப்படுகிறது.

உலகநாடுகளையும் இதயமுள்ள மனிதர்களையும் இந்த அறிக்கை அதிர்ச்சியூட்ட வைத்திருக்கலாம். ஆனால் சிறீலங்கா அரசைப்பொறுத்த மட்டில் இந்த அறிக்கை அந்த சலனத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

இதேவேளை சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் நிர்ப்பந்தங்களினாலும் நெருக்குதல்களினாலும் சிறீலங்கா அரசின் பாதுகாப்பு படையதிகாரிகளைக் கொண்டியங்கிய விசாரணைக் குழுவின் அறிக்கை ஒன்றுக்கொன்று முரணான தகவல்களைக் கொடுக்கிறது.

அதுவும் அந்த அறிக்கையில் 180பேரின் பெயர்கள் தான் காணாமல் போனோரின் பட்டியலில் அடங்குகிறது. அதையும்விட அவ்வறிக்கையில் 60 பேரின் பெயர்கள் புதிய பெயர்கள் (காணாமல் போனோர் பட்டியலில் இல்லாத பெயர்கள்) எட்டு பேரின் பெயர்கள் இரண்டு தடவை உள்ளது. 30 பேரின் பெயர்கள் ஆரம்பகாலத்தில் பிடிபட்டு விடுபட்டவர்கள், 82 பேர் இதுவரை எங்கிருக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியாத பேர்கள். பாதுகாப்பு படைகளின் இந்த அறிக்கை திட்டமிட்டு தயாரிக்கப்பட்ட ஓர் அறிக்கை போலவே தென்படுகிறது.

குடாநாட்டில் ''காணாமல் போனோர், கைதானோர் பாதுகாவலர் சங்கம்'' ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரை சந்தித்துப்பேசுவதற்கு ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஊடாக பல தடவை முயற்சித்தும் சந்திரிகா சந்திக்காமல் தட்டிக் கழித்துக் கொண்டு செல்வதையே காணமுடிகிறது. இதன் மூலமும் நாம் பல உண்மைகளை உணரக்கூடியதாக உள்ளதல்லவா?

இன்னமும் யாழ் குடாநாட்டில் அரச படையினரால், கைதாகி காணாமல் போனோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்வதையே அவதானிக்க முடிகிறது.

1997 ஜனவரியில் இருந்து ஜூலை மாதம் வரை யாழ் குடாநாட்டில் இருந்து அரச படையினரால் கைதாகி, காணாமல் போனோரின் விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று மனித கௌரவத்திற்கான மன்றத்தினைச் சேர்ந்த மகேஸ்வரி வேலாயுதம் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. அதன் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பெயர் | வயது | கைது செய்யப் பட்ட திகதி | கைது செய்யப் பட்ட இடம் | கைது செய்த படைப்பிரிவு |
|---|---|---|---|---|
| 1. பாலசிங்கம் பரராஜசிங்கம் | 26 | 10.06.1997 | சித்தங்கேணி | வடலியடைப்பு |
| 2. கணேஷ் கருணாகரன் | 19 | 23.06.1997 | மாவடிச்சந்தி | மாவடி |
| 3. கணேஷ் ராமண்ணா | 17 | 08.02.1997 | வீடு (மானிப்பாய்) | கிளாவடி |
| 4. கணேஷ் சுபாகரன் | 22 | 26.02.1997 | ஜெகபதி தையல் நிலையம் | மானிப்பாய் |
| 5. ஐயாம்பிள்ளை நிருபன் | 20 | 28.01.1997 | இணுவில் சுற்றிவளைப்பு | இணுவில் |
| 6. ஜீவனய்யா மதியழகன் | 17 | 21.07.1997 | வீட்டில் | சுழிபுரம் |
| 7. கார்த்திகேசு எல்லாலளன் | 21 | 23.06.1997 | வீட்டில் | இணுவில் |
| 8. கதிரவேலு ஜிந்தன் | 18 | 28.02.1997 | மாவடி சுற்றிவளைப்பு | மாவடி |
| 9. மணியம் ராஜகுமார் | 24 | 15.05.1997 | மாவடி சுற்றிவளைப்பு | மாவடி |
| 10 மார்க்கண்டு நா்கேஷ்வரன் | 31 | 16.03.1997 | திருநெல்வேலி கொலணி | திருநெல்வேலி |
| 11. மார்க்கண்டு விஜயகுமார் | 26 | 04.04.1997 | மாவடி பிள்ளையார் சுற்றிவளைப்பு | சித்தங்கேணி |
| 12. முருகன் நகுலேஸ்வரன் | 24 | 04.04.1997 | தவபுரம் இராணுவ முகாம் | சித்தங்கேணி |
| 13. நாகமணி அன்னராசா | 28 | 05.05.1997 | வடலியடைப்பு | வடலியடைப்பு |
| 14. நவரத்தினம் யோகேஸ்வரன் | 18 | 28.02.1997 | சுற்றிவளைப்பு | மாவடி |
| 15. நவசி ஜெயசீலன் | 24 | 07.07.1997 | நுணாவில் | சாவகச்சேரி |
| 16. பரமேஸ்வரன் குமுதினி | 21 | 28.03.1997 | வீட்டில் | சங்கானை |
| 17. பரமேஸ்வரன் பரணிதரன் | 15 | 28.03.1997 | வீதிச்சோதனை | சித்தங்கேணி |
| 18. ராஜரட்னம் சேதுபதி | 26 | 17.06.1997 | சுழிபுரம் மேற்கு | பொன்னாலை |
| 19. ராசையா சசிநாதன் | 22 | 06.02.1997 | மானிப்பாய் சந்தையருகே | மானிப்பாய் |
| 20. ராசலிங்கம் அன்பழன் | 22 | 15.05.1997 | தவபுரம் சுற்றிவளைப்பு | கைதடி |
| 21. ராசரட்னம் கமலஹாசன் | 21 | 23.06.1997 | தாவடிமுகாமில் | தாவடி |
| 22. ராசதுரை சுதாகரன் | 16 | 23.06.1997 | தாவடி | தாவடி |
| 23. ரத்தினம் அருந்ததிநாதன் | 22 | 16.06.1997 | சாவகச்சேரி | சாவகச்சேரி |
| 24. ரத்தினம் கிருஷ்ணகுமார் | 23 | 04.04.1997 | மடத்துப்பிள்ளையார் கோவிலடி | சாவகச்சேரி |
| 25. செல்லம்மா சுபாஸ்கரன் | 24 | 06.03.1997 | மடத்துப்பிள்ளையார் கோவிலடி | சாவகச்சேரி |
| 26. செல்லன் தேவேந்திரன் | 23 | 04.04.1997 | மூளாய்காளிகோவிலடி | மாவடி |
| 27. சண்முகம் சற்குணராஜா | 31 | 01.04.1997 | மானிப்பாய் சந்தை | மானிப்பாய் |
| 28. சினந்தி சாந்தலிங்கம் | 19 | 11.06.1997 | மறவன்புலவு ஐய்யன்கோவிலடி | மறவன்புலவு |
| 29. சின்னத்தம்பி மகேஸ்வரன் | 20 | 05.07.1997 | மறவன்புலவு ஐய்யன்கோவிலடி | இணுவில் |
| 30. தம்பிராஜா விக்னராஜா | 27 | 26.05.1997 | வீட்டில் | சாவகச்சேரி |
| 31. தம்பித்துரை துரைராஜா | 41 | 25.06.1997 | வீட்டில் | கூளாவடி |
| 32. த. கோவிந்தசாமி | 48 | 11.04.1997 | பேக்கரி | சண்டிலிப்பாய் |
| 33. தியாகராஜா சிவகாந்தன் | 16 | 07.01.1997 | புத்தூர் பயணத்தில் | -- |
| 34. வேலு சின்னத்தம்பி | 46 | 27.06.1997 | மந்துவில் சுற்றிவளைப்பு | கருடாவில் |
| 35.வினாசித்தம்பி கணேசமூர்த்தி | 37 | 09.06.1997 | வீட்டில் | புன்னாலைக்கட்டுவன் |

# ஒன்றுக்கு மூன்று!

கொஞ்ச நாட்களுக்கு முன்பு அரசாங்க சார்பு தொடர்பு சாதன மொன்றைச் சேர்ந்த தொடர்பு சாதனவியலாளர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. செய்திகளையும், தகவல்களையும் வெளியிடுவதில் தொடர்பு சாதனங்கள் கையாளும் வழிமுறைகள் பற்றிப் பேச்சு வந்தது. 'தொடர்புசாதனவியலாளர்கள் உண்மையில் சுதந்திரமற்றவர்கள். அவர்கள் சுதந்திரமானவர்கள் என்று தம்மைக் கருதிக் கொண்டாலும் கூட உண்மை அதுவல்ல. அவர்கள் ஒன்றில் அரசாங்கத்துடன் அல்லது தனியார் துறையுடன் சம்பந்தப்பட்டு தொழில் புரிகிறார்கள். அவர்களது விருப்பங்களை, முடிவுகளை மீறி ஒருவர் சுதந்திரமாக இருக்க வாய்ப் பில்லை. நான் தனியார் நிறுவனங்களிலும், அரசாங்கத்துடனும் வேலை பார்த்திருக்கிறேன். இரண்டிலுமே பூரண சுதந்திரம் என்று எதுவும் கிடையாது' என்று அடித்துச் சொன்னார் அவர்.

அவர் சொன்ன சுவையான தகவல் இது:

'இப்போது யுத்தக் கள நிலவரங்களை அறிவிப்பதில் ஒரு விதிமுறையை பாதுகாப்பு அமைச்சு கையாள்கிறது. யுத்தத்தில் ஒரு படையினர் இறந்தால், மூன்று புலிகளும் இறந்ததாக சொல்ல வேண்டும் என்பது அந்த விதிமுறை. படையினரின் நம்பிக்கையை சிதறடிக்காமல் இருப்பதற்காக இப்படிச் சொல்லப்படுகிறது என்கிறார்கள். இது வெறும் பொய்யான ஒரு பிரமையை மக்களுக்கு ஊட்டிக் கொண்டிருக்கிறது... இதனால் இப்போதெல்லாம், யுத்தப் பகுதியிலிருந்து எத்தனை இராணுவம் செத்தது என்ற தகவல் நிருபர் ஒருவரால் அனுப்பப்பட்டால், நாமே உடனடியாக மூன்று மடங்கு புலிகள் செத்ததாகவும் செய்தியைத் தயார் செய்துவிடுகிறோம். பிறகு பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை வெளிவந்தபின் பார்த்தால் அது அநேகமாக நாம் போட்டபடியே இருக்கும். ஆக, ஒன்றுக்கு மூன்று என்ற விகிதப்படிதான் தொடர்புசாதனங்களின் அறிவிப்புக்கள் இருக்கின்றன' என்றார் அவர்.

அவர் கூறிய தகவல்கள் யாருக்கும் வியப்பை ஊட்டக் கூடியவை அல்ல. ஒருவகையில் எல்லோருக்கும் தெரிந்த தகவலும் கூடத்தான். அரசாங்கம் இப்படியான அதிகப்படியான எண்ணிக்கையில் புலிகள் கொல்லப் பட்டதாகவும், அவர்கள் முழுக்க முழுக்க பலவீனமடைந்துவிட்டதாகவும், பாதுகாப்புப் படைகள் மாபெரும் வெற்றியீட்டி வருவதாகவும் கூறிவருவது பற்றி யாரும் அறியாததல்ல. ஆனால் எமக்குத் தெரியாத விடயம் இந்த ஒன்றுக்கு மூன்று என்ற விகிதம் தான்...

கடந்தவாரம், ஜயசிக்குறு நடவடிக்கை புலிகளை வன்னிப் பகுதியில் பெருமளவுக்குப் பலவீனப்படுத்திவிட்டதாகவும், அவர்களால் அவர்களது மாவீரர் வாரத்தைச் சிறப்பாகக் கொண்டாட முடியாமல் உள்ளது என்றும், தமக்குக் கிடைத்த தகவல்கள் கூறுவதாக அரசாங்கப் பத்திரிகைகள் எழுதியிருந்தன. வன்னியில் மட்டுமல்லாமல் கிழக்கிலும் பெருமளவுக்கு அவர்களால் இதனைக் கொண்டாட முடியவில்லை என்று அவை குறிப்பிட்டிருந்தன. ஆனால் 28ம்திகதியன்று பிரபாகரனின் மாவீரர் வார செய்தி அனைத்துப் பத்திரிகைகளிலும் வெளிவந்திருந்தது. அவர்கள் வன்னியிலும், கிழக்கிலும் மட்டுமல்ல, மீட்கப்பட்ட பிரதேசமான குடாநாட்டிலேயே கோப்பாயிலேயே முன்னைய பாணியில் தீபம் ஏற்றி மாவீரர் வாரத்தைக் கொண்டாடியிருந்தார்கள்.

இலங்கையின் தொடர்பு சாதனத்துறையைச் சார்ந்த ஒரு முக்கிய பிரச்சினையாக இருப்பது, இந்த யுத்தம் பற்றிய செய்திகளைத் தருவதுதான். அவர்களிடையே உண்மையான தகவல்களைத் தெரிவிப்பதில் இருக்கும் அக்கறையைவிட தாம் சார்ந்திருக்கும் அரசியல் சார்பு நிலைக்கு ஏற்றவகையில் தகவலைத் தருவதில் போட்டா போட்டி நிலவுகிறது. ஒரு தமிழ் பத்திரிகையாளர் இப்படிச் சொன்னார். ''இறந்த இராணுவத்தினரின் தொகையை மற்றைய பத்திரிகைகளை விட ஒன்றாவது கூட்டிச் சொல்ல முடியாதா? சொல்ல வேண்டும் என்ற தவிப்பு தமிழ் பத்திரிகைக்கு இருக்கிறது. ஏனென்றால், அது தமிழ் வாசகர்கட்கான பத்திரிகை...''

சிங்களப்பத்திரிகைகள் உருவாக்கி வளர்த்து வரும் சிங்கள இனவாத கருத்தியல், புலிக்கெதிரான தகவல்களைக் கொஞ்சம் அதிகப்படியாகவே பாதுகாப்புப் படையினருக்குச் சாதகமாக எழுதப்படுவதை எதிர்பார்க்கிறது. அண்மையில் மார்க் செனவிரட்ன என்ற யுத்தக்கள கட்டுரையாளர் மிட்வீக் மிரர் பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றுக்குப் பதிலளித்து அப்பத்திரிகைக்கு கடிதம் எழுதியிருந்த வாசகர் ஒருவர் இவ்வாறு எழுதுவது யுத்தத்தைப் பலவீனப்படுத்துவதாகும் என்று குறிப்பிட்டிருந்தார். உண்மையில் அவர் குறிப்பிட்டது யுத்தம் பலவீனப் படுத்தப்படுவது பற்றி அல்ல. தமது 'தேசத்தை'க் காக்கும் பணியில் ஈடுபடும் படையினரை விமர்சிப்பது கூடாது. அவர்களின் நடவடிக்கைகள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவை என்பதில் இருந்து எழும் ஒன்றுதான் அது.

தமிழ் பத்திரிகைகளைப் பார்க்கும் ஒருவரிடம் இதற்கு நேரெதிரான ஒரு மனோ நிலையின் வெளிப்பாட்டைக் காணலாம்.

உண்மையில் நாடு இரண்டு தேசங்களாக இருக்கின்றது. அதன் சிந்தனைகளும் அணுகுமுறைகளும் அவ்வாறுதான் இருக்கின்றன என்பதற்கு இதை விட வேறு உதாரணம் தேவையில்லை.

பிரபாகரனின் மாவீரர் தினச்செய்தியை பத்திரிகைகள் வெளியிட்டிருந்த விதத்தை மட்டும் உற்று நோக்கினாலேயே போதும். இது புரிந்துவிடும்.

'அநேகமாக எல்லா சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும், அரசாங்கத்தின் தீர்வுப்பொதியை பிரபாகரன் நிராகரிக்கிறார்' என்று தெரிவித்திருந்தன. பிரபாகரனின் பேச்சின் சாரமாக அவர்களுக்குத் தோன்றியிருப்பது, யுத்தமே ஒரே வழி என்ற செய்திதான். ஆக, யுத்தத்தை தொடர்வதைத்தவிர வேறு வழியில்லை என்ற தமது முடிவுக்கு மேலும் வலுவூட்டும் ஒரு செய்தியாகவே இந்த மாவீரர் தின உரையும் அவர்களுக்கு.

தமிழ்ப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை, இந்த விடயத்தின் சாரப்பொருள் அது அல்ல. அது நாம் சமாதானத்துக்கு எதிரானவர்கள் அல்ல. திம்பு தீர்வுக்கு குறைவில்லாத ஒரு தீர்வு மூலம் உடன்பாடு காண நாம் தயாராகவே இருக்கிறோம். ஆனால் அரசாங்கம் தான் சமாதான அக்கறையற்று இருக்கிறது என்ற விடயம் தான் அவர்களது கவனத்திற்குரிய விடயமாக இருந்திருக்கிறது.

இதில் ஒரு புறம் யுத்த முனைப்புடன் யுத்தத்தை நடாத்திக்கொண்டிருக்கும் ஒரு தேசத்தின் உணர்வுகளையும், மறுபுறம் சமாதானத்துடன் வாழ விரும்புகிற ஒரு தேசத்தின் உணர்வுகளையும் தெளிவாக இனங்காண முடிகிறது!

இதுதான் இன்றைய யதார்த்தம்.

இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் சமாதானத்திற்காக எடுக்கப்படும் எந்த முயற்சிகளும் பயனளிக்கப்போவதில்லை. ஒன்றுக்கு மூன்று கணக்கு வெறுமனே 'கணக்கு விடுவதற்கான' ஒரு அறிவிப்பு மட்டும் அல்ல.

முழு நாட்டினதும் எதிர்கால சமாதான வாழ்வுக்கான நிச்சயம் குறித்த கேள்வியை எழுப்புகிற ஒரு அறிவிப்பும் கூட.

இதைச் சமாதானம் பற்றிப் பேசுபவர்கள் புரிந்து கொண்டால் உண்டு!

அரவிந்தன்

www.tamilarangam.net



# ஜெயின் கமிஷன் அறிக்கை:
# போக வேண்டிய இடம் குப்பைக் கூடை!

குல்டீப் நாயர்

ராஜிவ் காந்தி கொலை செய்யப்பட்டு ஒரு சில மாதங்களில் 'படுகொலை' (The Assasination) என்ற தலைப்பில் ஒரு புத்தகம் விற்பனைக்கு வந்திருந்தது. மிகச் சொற்பளவே விற்பனையானது என்ற போதும் நிறைய விஷயங்களை அது தெரிவித்திருந்தது. அந்தப் புத்தகம் ராஜிவ் காந்தியின் படுகொலை வரையான அதை நோக்கிய சம்பவங்களை புனைந்திருந்ததுடன் மீளுருவாக்கம் செய்திருந்தது. அந்தப்புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த நபர்களின் பெயர்கள் கற்பனைப் பெயர்களாக இருந்த போதும் அந்த மனிதர்களை நிஜமனிதர்களுடன் அடையாளங் காணமுடியும். ஜெயின் கொமிசன் அறிக்கையிலிருந்து பத்திரிகைகளில் எடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருந்த பகுதிகளைப் படித்த போது அந்த அறிக்கையானது ராஜிவ் கொலை பற்றி இந்தப் புத்தகம் தெரிவித்தவற்றைவிட சொற்பமான அளவே தெரிவித்துளளது என்று தெரிகிறது.

இந்தப்புத்தகம் சுவீடனைச் சேர்ந்த ஓலாஃப் பாம் என்பவரது கொலையுடன் ஆரம்பிக்கிறது. சந்திரசுவாமி என்ற சாமியாரை அது அறிமுகப்படுத்துவதுடன் ராஜிவ் கொலைக்கு நிறைய இடத்தை அது ஒதுக்கியுள்ளது. இது பொருத்தமானதும், அறிவார்த்தமுமான ஒரு மதிப்பீடாகும். ஆனால் இந்த ஜெயின் கொமிசன் அறிக்கையோ எதையும் புதிதாகப் பகிரங்கப்படுத்தவில்லை. பத்திரிகைகளைத் தொடர்ச்சியாகப் படிக்கும் எவரும் ஜெயின் கொமிசன் அறிக்கை தெரிவிக்கும் தகவல்கட்கு ஏற்கெனவே பரிச்சயமானவர்களாக இருப்பர். தீர்ப்பின் இடையே கூறப்படும் அவரது இந்த (இடைக்கால) அறிக்சையானது அரசியல் சார்புடையதாகவும், புதிதாக எதையும் தெரிவிக்காத ஒன்றாகவுமே உள்ளது.

ஆச்சரியம் என்னவென்றால், ஜெயின் கொமிசன் அறிக்கை அங்கு பாதுகாப்பு நடவடிக்கையில் ஒரு பலவீனம் இருந்ததென்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருப்பதாகும். அவர் இந்த விடயத்திற்காக அவ்வளவு அலட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை. பிரபலமான மனிதர்களை கொலை செய்வது என்பது ஒன்றும் சாதாரணமான விடயம் அல்ல. எங்கேயாவது யாராவது இதற்கு திட்டமிடத்தான் செய்கிறார்கள் உலகெங்கிலும் உள்ள எந்தவொரு அரசாங்கமும் இந்த விதமான தாக்குதல்களுக்கு போதியளவு பாதுகாப்பைக் கொடுக்க முடியாது. பல பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும், அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கெனடி சுட்டுக் கொல்லப்படார். பஞ்சாப்பின் முதல் அமைச்சர் டீன்ட் சிங் பஞ்சாப் அரசாங்கத்தின் பொலிஸ் படையின் இயக்குனர் நாயகமான சக்திவாய்ந்த கே.பி.எஸ். ஜில் பதவியிலிருக்கும் போதுதான் கொல்லப்பட்டார்.

உண்மையில் ஜெயின் ஆராய்ந்திருக்க வேண்டியது என்னவென்றால் விசேட பாதுகாப்புக்குழு (எஸ்.பி.ஜி.) சட்டத்தினால் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் முன்னாள் பிரதமரான ராஜிவ் காந்திக்கு வழங்கப்பட்டிருந்ததா என்பதாகும். ஆனால் அவரது அறிக்கையோ, வி.பி.சிங் பற்றிய சில அனுமானங்களையும், சந்திரசேகரின் பொறுப்பீனத்தையும் சுட்டிக் காட்ட முயல்வதுடன் அமைந்து விடுகிறது. இவர்கள் இருவருமே ராஜிவ் கொல்லப்படுவதற்கு நீண்டகாலத்திற்கு முன்பே பிரதமர்களாக இருந்திருக்கிறார்கள். மதிப்பிற்குரிய நீதிபதியான ஜெயின் சொல்வது என்னவென்றால், இந்த இருவரும் ராஜிவ் காந்தியை அரசியல் ரீதியாகத் தோற்கடிக்க முடியாமையால், இத்தகைய ஒரு வன்முறைச் சம்பவம் நடக்க அனுமதித்தார்கள் என்பதாகும். அவர் எழுதுகிறார்: *''கமிசனுடைய கவனத்திற்குரியதாக இருந்த மிகவும் பாரதூரமான ஒரு கேள்வி என்னவென்றால், வி.பி.சிங் அவர்கள் தமது சார்பு நிலைகாரணமாகவும், எதிர்ப்புணர்வு மற்றும் தவறான நடத்தைகள் காரணமாகவும், ராஜிவைப் பாதுகாத்திருக்கக்கூடிய பாதுகாப்புகளை வழங்காமல் இருந்திருக்கிறாரா என்பதாகும்.''*

எந்தவிதமான ஆதாரமும் அற்ற பெருமளவுக்கு தூண்டிவிடக்கூடிய இத்தகைய ஒரு அவதானிப்பை தாம் வெளியிடுவதை ஜெயின் அவர்கள் நியாயப்படுத்தக் கூடியவாரக இருக்கிறாரா? நீதியின் சிறப்புக்கு அணிசேர்க்கும் விதத்தில் மீண்டும் அதே வெற்று வார்த்தைகள் வருகின்றன. *''சந்திரசேகரது காலத்தில் நிலவிய சூழலுக்கேற்ற விதத்தில் தேவைப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் அதற்குரிய தன்மையுடனும் தரச்சிறப்புடனும் வழங்கப்படவில்லை.''*

ஒரு அரசாங்கம் தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிப்பதனை அதற்குக் கிடைக்கும் இரகசிய தகவல்களின் அடிப்படையிலேயே செய்கிறது. ராஜிவைப்பொறுத்தவரை விசேட பாதுகாப்பு குழுச் சட்டம் குறிப்பிட்ட தொகையை விட அதிகமானளவு நபர்கள் அவருக்கான பாதுகாப்பு நடவடிக்கைகட்காக வழங்கப்பட்டிருந்தார்கள். முன்னாள் பிரதம மந்திரியான சந்திரசேகர் ராஜிவ் காந்திக்கு அவர் பாதுகாப்பாக இருப்பது அவசியம் என்றும், அவரது உயிருக்கு ஆபத்திருப்பதாக தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் ஒருமுறைக்கு பலமுறை தெரிவித்திருக்கிறார். இந்த எச்சரிக்கைகளை ராஜிவ் காந்தி சட்டை செய்யவில்லை.

அப்படியானால் 'அதற்குரிய தன்மையுடனும் தரச்சிறப்புடனும்' என்று ஜெயின் அவர்கள் கருதுவது எதனை? தம்மைத்தாமே அழித்துக்கொள்ளவும் (கொலையாளிகள்) தயாராக இருக்கும் போது எந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் போதுமானவையாக இருக்க முடியாது. ராஜிவின் விடயத்தில் தனது உடம்பிலேயே குண்டைக் கட்டிக்கொண்ட ஒரு பெண் அவரை அணைத்திருக்கிறார். எந்தவகையில் 'அதற்குரிய தன்மையுடைய' ஒரு பாதுகாப்பு ஏற்பாடு இதைத்தவிர்த்திருக்க முடியும்? எல்லாவிதமான பாதுகாப்பையும் கொண்டிருந்தும் இந்திராகாந்தியால் தன்னுடைய சொந்த மெய்பாதுகாப்பாளர்களது குண்டுகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. இந்த அறிக்கையின் பகுதிகளில் எங்கேயும் ராஜிவுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டிய பாதுகாப்பு அவருக்குக் கிடைத்ததா இல்லையா என்பது பற்றி ஆராயப்படவில்லை. அப்படிச் செய்திருந்தால் ஜெயினுக்கு இந்த விடயத்தில் எந்தத் தவறையும் கண்டிருக்க முடியாது. அவர் ஒரு சிலருக்கு சந்தோசமூட்டுவதற்காக, தரவுகளை பெற முயல்வதற்குப் பதில் கதை புனைவதில் இறங்கியிருக்கிறார். சாதாரணமான ஒரு பத்திரிகை நிருபர் கூட தனது அவதானிப்புகளையிட்டு இதைவிட அதிகமான கவனம் செலுத்துபவராக இருந்திருப்பார்.

எந்தவித தயக்கமும் இன்றி ஜெயின் கூறுகிறார்: *''வி.பி.சிங் அவர்கள் ராஜிவின் குடும்பத்தை தான் பெரிதும் மதிக்கிறேன் என்று சொல்வதன் மூலம் வெறும் உதட்டளவிலான வருத்தத்தையே வெளிப்படுத்தியுள்ளார்''* வி.பி.சிங் அவர்களும் இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்று சொன்னால் ஒழிய ஒருவர் இத்தகைய ஒரு அறிவிப்பை வெளிப்படுத்துவது எப்படி? அது எந்தளவுக்கு இந்த விவகாரத்துடன் சம்பந்தப்பட்டதாக இருக்க முடியும்? மேலும் ஜெயின் நிதியமைச்சர் சிதம்பரத்தையும் குற்றம் சாட்டுகிறார்.

*''தமிழ் நாட்டில் ஜனாதிபதி ஆட்சியை கொண்டு வருவதற்கான அறிவிப்பின் போது பாராளுமன்றத்தில் அவர் பேசிய பேச்சில் இருந்த உள்ளடக்கத்தின் சாரத்தினை ஒப்பிடுகையில் (ராஜிவ் கொலை தொடர்பான) பேச்சு மென்மையானதாகவும், காரம் குறைந்ததாகவுமே இருந்தது''* என்று கூறுகிறார் ஜெயின். இந்த விடயமும் கூட நியாயப்படுத்தப்பட முடியாத ஒன்றாகும். கொமிசன் முன் (சாட்சியமளிக்கையில்) சிதம்பரம் தனது பாராளுமன்றப் பேச்சை உறுதி செய்திருந்தார். அவரது சாட்சியம் நேரடியாக, தான் அறிந்ததையும் கேள்விப்பட்டதையும் அடிப்படையாகக்கொண்டு அமைந்ததிருந்தது. அவருக்கு எந்த எழுத்து மூலமான ஆதாரங்களும் இருக்கவில்லை. அவரால் அப்படி ஒன்றைக் கண்டுபிடித்திருக்கவும் முடியாது. *'உண்மைக்கு முற்றிலும் புறம்பான விதத்தில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தான் நினைத்தபடி பேச அனுதிக்கப்படலாமா'* என்று கேட்கிறார் ஜெயின். ஒரு பொதுப்படையான கருத்து என்ற அடிப்படையில் இத்னை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் எது உண்மை? ஜெயினின் மறைமுகமான குற்றச்சாட்டுக்கள் உண்மைகளாகக் கொள்ளப்படவேண்டுமா?


தி.மு.க. புலிகளுடன் நெருக்கமாக இருந்தது என்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல. ஆனால் அது இலங்கைக்கு எதிராக புலிகளை ராஜிவின் அம்மாவான இந்திரா வாழ்த்திப் பராமரித்த காலத்தில் இருந்த ஒன்று. அவர் புலிகளைப் பயிற்றுவித்ததுடன் ஆயுதங்களும் வழங்கினார். இலங்கைப்படைகள் புலிகளை தாக்கி விரட்டிய போது இந்திய மணணில் அவர்கள் தங்கியிருக்கவும் அவர் வழி செய்தார். இந்த விடயத்தில் முதலமைச்சர் கருணாநிதி வெறும் தொடர்பாளர் தான். இந்திரா காந்தி அவர்கள் தான் வழங்குனர். ஜெயின் அவர்கள் *''தமிழ் தீவிரவாதிகளை தட்டிக் கொடுக்கக்கூடிய பொதுவான தமிழ் நாட்டு அரசியல் போக்கின் நிலையினையும் அவர்களது பலதரப்பட்ட குற்றவியல் மற்றும் தேசவிரோத நடவடிக்கைகளைச் சகித்துக்கொள்ளும் தன்மையையும்''* பற்றிப் பேசும் போது அவர் இந்திரா காந்தியினதும் ராஜிவ் காந்தியின் கால நினைவுகளை மீள நினைவு கூருகிறார். ராஜிவ் காநதி பிரபாகரனை டெல்லியில் சந்தித திருந்தார், கருணாநிதியின் முதலமைச்சர் பதவிக் காலத்தில் ராஜிவ் காந்தி எந்தப் பயமும் இன்றி தமிழ் நாட்டுக்கு பலதடவை வந்து போயிருக்கிறார். இரகசிய உளவுப் பிரிவு அதிகாரிகளோ அல்லது றோ உளவு நிறுவனமோ அவருக்கு ஒரு போதும் 'கருணாநிதிக்கு புலிகளுடன் தொடர்பிருக்கிறது. அவர் ஒரு மாதிரியான ஆள் எனவே அங்கு போகாதீர்கள்' என்று சொன்னது கிடையாது. ராஜிவின் கொலையைத்தொடர்ந்து மறுபுறம் 1991இல் கருணாநிதியுடன் நான் உரையாடியதை நினைத்துப் பார்க்கிறேன்...

சில மாதங்களுக்கு முன்னர் நான் லண்டனில் இந்தியத் தூதுவராக இருந்த வேளை அங்கு இலங்கையின் உயர் ஸ்தானிகராய் இருந்த டி.எஸ். ஆட்டிகல என்னைச்சந்தித்து, தமிழ்ப் பிரச்சினை தீர்வதற்காக கருணாநிதியின் ஒத்துழைப்பை எவ்வாறு பெறுவது என்பது பற்றிக் கதைத்தார். இதன்பின்னரேயே நான் கருணாநிதியைச் சந்தித்துக் கதைத்தேன். ஆனாலும் அவர் அது விடயத்தில் தனது அழுத்தமான மறுப்பைத் தெரிவித்துவிட்டார். அது மட்டுமன்றி புலிகள் பாஸிஸவாதிகள், வெறுத் தொதுக்கப்பட வேண்டியவர்கள். தங்கள் செய்கைகளில் எதுவித மனிதாபிமானத்தையும் கொண்டிராதவர்கள் என்றும் தெரிவித்தார். புலிகள் மீதான எதுவித சிறுஅனுதாபமும் அவரிடமிருக்கவில்லை. அத்துடன் அந்த இயக்கத்துடனான எதுவித உறவுகளையும் வைத்திருக்க அவர் விரும்பவுமில்லை.

இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படையினர் இருந்த வேளை இந்திய உளவுப்படையான றோ தமிழ் ஆயுதக்குழுக்களுடன் உறவை வைத்திருந்தது என்று தகவல்கள் நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் எனக்குக்கிடைத்தன. புதுடில்லியிலும் புலிகளுக்கு நிறைய தகவல்கள், தந்திரோபாயங்கள் பற்றியவிடயங்கள் எல்லாம் கிடைக்கப்பெற்றிருக்கின்றன என பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. இது விடயத்தில் இந்திய அமைதிகாக்கும் படையினர் 'றோ'வாலேயே தங்கள் சந்தேகத்தை வெளியிட்டனர். றோ மூலம் தான் இந்தத்தகவல்களெல்லாம் கிடைக்கப் பெற்றிருக்கும் என அவர்கள் நம்பினர்.

சட்ட சூழ்நிலைகள் மற்றும்அது தொடர்பான விடயங்களிலேயே ஜெயின் அதிக கவனம் செலுத்துவார் என நான் எதிர்பார்க்கிறேன். நீதிபதிகளுக்கு பிரபல்யம் தேவையில்லையென நினைக்கிறேன். அண்மையில் ஒரு பத்திரிகையில் ஜெயினும் பிரபு சவ்லா என்ற பத்திரிகையாளரும் -இவர் தான் பத்திரிகையில் இதனைத் தனிச்செய்தியாகப்போட்டு இது தொடர்பாக அலசல்களை மேற்கொண்டவர்- அறிக்கையை கையில ஏந்தியிருக்கும் படம் பிரசுரமாகியிருந்தது. இதெல்லாம் ஜெயினுக்கோ அல்லது சட்டத்துறைக்கோ எதுவித நன்மையையுமோ, மதிப்பையுமோ பெற்றுத் தராது. தனது அறிக்கையில்அரசியல் சம்பந்தங்கள் (தொடர்புகள்) இல்லை. அரசியலே இருக்கிறது என்று ஜெயின் சொல்வதைத்தவிர வேறோன்றுமில்லை. இந்த விடயம் தொடர்பான எதிரொலிகள் இருக்கத்தான் செய்யும். அரசியல் தளத்தில் இதன் தாக்கம் முன்னமே வெளிப்பட்டுவிட்டது. ஏற்கெனவே இவர் ஐக்கிய முன்னணிகாரர்களும் அதிலும் குறிப்பாக தி.மு.கவும் வேறு சில அரசியல் தலைவர்களும் இவ்வாறான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதில் முனைந்துள்ளனர் என்பதை நிறுவ முயன்றார். அதுவும் ராஜிவ் காந்தியின் கொலை தொடர்பில். அது கொலையென்றாலும் இயல்பானதே என்ற சூழலையே அவர்கள் தோற்றுவிக்க முயன்றார்கள் எனக் கூறியிருந்தார்.

ராஜிவ்காந்தி கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட தற்போதைய இந்திய பிரதம நீதியரசரான வர்மாவும் இச்சம்பவத்தில் தமிழ்நாடு பொலிசாரையும் உள்ளூர்க் காங்கிரசையும் தான் குற்றம் கண்டிருந்தார். ஆனால் காங்கிரஸ் தலைவர்கள் மீதும் ஜெயின் இங்கு அவதூறு கூறியுள்ளார். உண்மையில் இதனை அறிக்கையென்று சொல்லுவதை விட அரசியல் ஒப்பந்தம் என்றே சொல்லவேண்டியிருக்கிறது. காங்கிரசும் தேவையில்லாத வகையில் கலக்கப்பட்டுள்ளது. வெறும் அவதூறல்களால் நிரம்பியுள்ள இவ்வறிக்கை அருகிலுள்ள குப்பைக்கூடைக்குத் தான் சரி!




தமிழில் : சஞ்சிந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம்:

## கேட்கப்பட வேண்டிய கேள்விகளும், காணப்பட வேண்டிய விடைகளும்



-என்.சரவணன்

"பொ.ஐ.மு. ஆட்சியமைவதற்கு பெண்களின் பங்களிப்பு காத்திரமானது. இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இரு முக்கிய பதவிகளையும் பெண்களே வகிக்கின்றார்கள். உலகிலேயே இலங்கையில் மட்டுமே இப்படியான ஒரு நிலையுள்ளது...

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 50 வருடங்களாகப் போகின்ற இந்தத் தருணத்தில் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 5.3 வீதமாகவே உள்ளது. எமது நாட்டின் பெண்களுக்கு உள்ள குடும்பப் பொறுப்புக்கள் காரணமாக இது அதிகரிக்காமலிருந்தாலும் குறைந்த பட்சம் 25 வீதமாவது பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கமுடியுமாயிருந்தால் நல்லது."

கடந்த 10ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் நடந்த வரவு செலவுத்திட்ட -மகளிர் விவகாரத்துறைக்கு நிதி ஒதுக்குவது தொடர்பான- விவாதத்தின் போது மகளிர் விவகார அமைச்சர் ஹேமா ரத்னாயக்க ஆற்றிய உரையிலேயே மேற்படி தெரிவித்தார்.

### பத்திரிகைகளின் செய்தியிடல்

இவ்வுரையானது அடுத்த நாள் பத்திரிகைகளில் வெளியானது. சிங்களப் பத்திரிகைகளில், திவய்ன, லங்காதீப ஆகியவற்றில் வெளியான பாராளுமன்ற உரைகளில்ஏனைய ஆண் உறுப்பினர்களின் உரைகள் வெளியாகின. பெண்பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகள் கூட வேறு விடயங்கள் குறித்த அம்சங்கள் வெளியாகினவே ஒழிய இவ்விடயம் குறித்தவை வெளியாகியிருக்கவில்லை. தினமின (அரச கட்டுப்பாட்டுக்குள்ளிருப்பது) மாத்திரம் இதனைப் பிரசுரித்திருந்தது. அதற்குக் காரணம் சொல்லப்பட்ட விடயம் பற்றியதற்காக அல்ல. சொல்லிய நபர் ஆளும் அரசாங்கத்தின் அமைச்சர் என்பதற்காகவே.

தமிழ்ப்பத்திரிகைகளிலோ இது குறித்த உரை எங்கும் வெளியாகியிருக்கவில்லை. அதற்கடுத்த நாள் வீரகேசரி பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கத்தில் இது குறித்த செய்தி வெளியாகியிருந்தது.

ஆணாதிக்க செய்தி நிறுவனங்கள் அனைத்துமே இச்செய்தியின் முக்கியத்துவத்தை உணராததில் ஆச்சரியமென்ன இருக்க முடியும்?

இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த செய்திதான் என்ற போதும் கூறப்பட்ட விடயம் குறித்து அமைச்சரின் அதே வாதத்தை அப்படியே ஏற்றுக்கொள்வது இன்னொரு பிரச்சினையாகும்.

காரணம் இந்த 25 வீதம் குறித்தது தான். இந்தக் கோரிக்கையானது ஆணாதிக்க அதிகாரக் கட்டமைப்பைப் பொறுத்தளவில் எதிர்ப்புகளின்றி ஏற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் உண்டு. ஏனெனில் சனத்தொகையில் சரிபாதி (அதைவிடவும் கூட) பெண்கள் உள்ள நிலையில் அதே அளவு வீதாசாரத்தைக் கூடக் கோரப்படாததானது ஆணாதிக்கத்துக்கு வெற்றியேயன்றி வேறென்ன?

என்ற போதும் 25 வீதக்கோரிக்கை குறித்து கூட, இது வரை அரச தரப்பிலிருந்து சம்மதம் வரவில்லை. அது குறித்து பரிசீலிப்பதாகவே கூறியிருக்கிறது. அக்கோரிக்கையை அதிகாரத்தரப்பு ஏற்றுக் கொண்டதாகக் கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதை நாம் இங்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்தக் கோரிக்கை அதிகாரத் தரப்பிலிருந்து, அதுவும் மகளிர் விவகார அமைச்சரிடமிருந்து வெளிவந்துள்ளமை எல்லோரையும் கூர்ந்து கவனிக்கச் செய்திருக்கிறது என்பது உண்மையே. ஆனால் இக் கோரிக்கையின் அற்பத்தனத்தை அடையாளம் காண எத்தனை பேரின் ஆதிக்க கருத்தியல் இடம் கொடுக்கும்?

அமைச்சர் ஹேமா, சரிபாதி ஜனத்தொகையைக்கொண்ட பெண்களுக்கு 25 வீத பிரதிநிதித்துவத்தை மட்டுமே கோருவது மட்டுமல்லாமல் குடும்ப அமைப்புக்குள் பெண்களுக்குள்ள மரபான பொறுப்புக்களை மறைமுகமாக நியாயப்படுத்துவதையும் கண்டு கொள்ளாமலிருக்க இயலுமா? அவர் சார்ந்த அதிகாரத்துவம் மிக்க கட்சியினதும், அரசாங்கத்தினதும், அரசினதும் கூடிய கூட்ச எல்லை இவ்வளவாகத்தான் இருக்க முடியும்.

### அற்ப கோரிக்கை?

அண்மையில் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காக "increasing political participation of women through a reservation system" எனும் வேலைத் திட்டமொன்றை உருவாக்கியிருக்கிறார்கள். அதன்படி அரசாங்க மட்டங்களில், பெண்களுக்கு மூன்றில் ஒரு வீத பிரதிநிதித்துவக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள். 15 வருடங்களுக்கு இது செல்லுபடியாக வேண்டும் என்றும் முன்மொழியப்பட்டுள்ளது.

பல அரச சார்பற்ற நிறுவனங்களும் இக்கோரிக்கையை முன்கொண்டு செல்ல அணிதிரண்டு வருவதாகத் தெரிகிறது. WERC யின் தலைவி செல்வி திருச்சந்திரன் இது குறித்து எமக்கு தெரிவிக்கையில், "இது குறித்து அரசியற் கட்சிகளுடன் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கான முயற்சியாக லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, த.வி.கூட்டணி, ஐ.தே.க. என்பவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றோம். அவர்களைப் பொறுத்தளவில் இக்கோரிக்கையில் எதுவித ஆட்சேபமுமில்லை." என்றார். அற்பக் கோரிக்கைக்கு ஆட்சேபமென்ன இருக்க முடியும். (பிரதான கட்சிகளும் கூட இக்கோரிக்கையை அங்கீகரித்துள்ளன என்றால் அதன் அர்த்தம் வாக்கு வங்கிகளை நிரப்பிக் கொள்ள இதனை உச்ச அளவில் பயன்படுத்தலாம் என்ற கற்பனையினாலேயொழிய, இக்கோரிக்கையின் அவசியத்தை உணர்ந்து விட்டார்கள் என்றோ தமது ஆணாதிக்க நிலைப்பாட்டிலிருந்து மீண்டு விட்டார்கள் என்பதாலோ அல்ல) என்ற போதும் இக்கோரிக்கையும் கூட போதுமான கோரிக்கையாக இருக்க முடியாது.

இக்கோரிக்கை இலங்கையில் எழுவதற்கு பின்புலமாக இருந்தது, இந்தியாவிலும் மூன்றில் ஒரு வீத பெண் பிரதிநிதித்துவ கோரிக்கை எழுப்பப்பட்டு வருவதே. இக்கோரிக்கையின் பரப்பு, அது தரப்போகும் நீண்டகால பிரதிபலன், அதன் போதுமான தன்மை குறித்து எந்த வித பரிசீலனையும் இன்றி அதே கோரிக்கையை இலங்கையிலும் பிரதிபண்ணுவதாகவே தெரிகிறது. சரியான புரட்சிகர மாற்று சக்தியேதுமில்லாத நிலையில் பெண்களின் கோரிக்கையினை முன்கொண்டு செல்ல பெண்களுக்கென்று கட்சியொன்று இல்லாததன் குறை இங்கு தான் தெரிகிறது.

"25வீதம்", "மூன்றில் ஒரு வீதம்" போன்ற கோரிக்கைகள் முன்வைப்பதன் மூலம் உண்மையில் முன் வைக்கப்பட வேண்டிய கோரிக்கையை அற்பத்தனமான கோரிக்கையாக்கி, சிறு தேவையாக குறுக்கி விடும் ஒன்றாகவே இதனைக் காண முடிகிறது. இது வரை அரசு சார்பற்ற நிறுவனங்கள் சகல துறைகளிலும் செய்து வருவதும் இதனைத்தான். பிரதான அரசியல் கோரிக்கைகள் முன் வைக்கப்படுகின்ற போதெல்லாம் அதற்கு வலிந்து போய் தலையிட்டு, தலைமைகொடுத்து சிறு கோரிக்கையாக குறுக்கி விடும்போக்கு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கே உரியன. அப்படியான ஒரு போக்காகவே இதனையும் காண முடியும். இவ்வமைப்புகள் அவ்வாறான கோரிக்கைகளில் கூட உறுதியாக தொடர்ச்சியாக நிற்கும் என்றோ, மிகவும் துடிப்புடன் போராடும் என்றோ நம்பிக்கை வைக்க முடியாது.

இவ்வமைப்பு "மூன்றில் ஒரு வீத கோரிக்கை"யை எழுப்பியது ஒரு புறமிருக்க அக்கோரிக்கை 15 வருடங்களுக்கு செல்லுபடியாகும்படி செய்யவேண்டும் என்று கூறியிருப்பதானது, மேலும் அதன் தூரநோக்கற்ற, துரோகத்தனமான கோரிக்கையையே வெளிப்படுத்துகிறது.

### ஏன் தேவை?

-சனத்தொகையில் சரிபாதியையுடைய பெண்களுக்கு அதே அளவிலல்லவா பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். முதலாளித்துவ ஜனநாயகம் கூட விகிதாசாரத்தை மறுக்காதே. இது சமூகத்திலுள்ள சிறுபான்மையோர் சம்பந்தமான பிரச்சனையல்லவே, சம விகிதாசாரத்தையுடையவர்கள் அதிகாரமற்றிருப்பது, மற்றும் இன்னொரு தரப்பால் அடக்குமுறைக்குள்ளாகிக் கொண்டிருப்பது பற்றிய பிரச்சினை. சிறுபான்மையினர் விடயத்தில் கூட கொள்கையளவில் இவ்விகிதாசாரத்தை ஏற்றுக் கொள்ள முடிந்த அதிகாரத் தரப்புக்கு பெண்கள் விடயத்தில் ஏன் இந்த விகிதாசாரத்தைக் கடைப்பிடிக்க முடியாது?

-தேர்தல்களின் போது வேட்பாளர் பட்டியலில் 35 வீதம் இளைஞர்களை (16க்கும் 35க்கும் இடையில்) உட்படுத்துவது குறித்த விதி பிரேமதாச காலத்தில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இளைஞர்கள் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபாரிசாகவே இது அறிமுகப்படுத்தப்பட்டது. அவ்வாணைக்குழு "இளைஞன்"களை மட்டுமே கருத்திற் கொண்டு இப் பிரேரணைகளை முன் வைத்திருந்தது. ஜனத்தொகையில் ஒரு குறிப்பிட்ட வீதத்தினரை மட்டுமேயுடைய தரப்பினருக்கு இவ்வாறான பிரதிநிதித்துவ ஒதுக்கீடு வழங்க முடியுமானால் பெண்களுக்கு வழங்குவதில் உள்ள பிரச்சினைதான் என்ன? மேலும் மேற்படி இளைஞர் ஒதுக்கீட்டினை "இளம்" பெண்கள் அனுபவிக்க முடியாமலிக்கும்போக்கையும் அவதானிக்க வேண்டும்.

-உண்மையில் பெண்களின் அரசியல் ஈடுபாட்டையும் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிப்பதாயின் இக்கோரிக்கை போதுமானதாக இருக்க முடியாது. சமூகத்தில் எப்போதும் குறை விருத்தியையுடைய (குறை விருத்திக்குள்ளாக்கப்பட்ட) தரப்பினரை ஆகக் குறைந்த பட்சமேனும் மேலே கொண்டு வருவதாயிருந்தால் குறிப்பிட்ட காலத்துக்கு விசேட கவனிப்பு செலுத்தப்பட்டே ஆக வேண்டும். உதாரணத்திற்கு அவர்களின் உண்மையான வீதாசாரம் 50 வீதமாக இருக்கிறதென்றால் (குறிப்பிட்ட பத்தாண்டோ பதினைந்தாண்டோ விசேட திட்டத்தின் மூலம்) அதனை விட மேலதிகமாக அவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதன் மூலமே உயர்த்தலாம். இதனை அரசியல் கோரிக்கையாக முன்வைப்பதாயிருந்தால் இதனடிப்படையிலேயே அமைய வேண்டும். அதை விட்டு 15 ஆண்டுக்கு மூன்றில் ஒரு வீதத்தைக் கோருவதோ, எந்த விதமான பரிசீலிப்புமின்றி இன்னொரு நாட்டை பிரதிபண்ணுவதோ அல்லது முக்கியத்துவம் வாய்ந்த அரசியற் கோரிக்கையை சொற்ப கோரிக்கையாக எழுப்புவதோ அக்கோரிக்கையை செயலிழக்கவே செய்யும்.

-இலங்கையில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட காலம் தொடக்கம் இது வரை பெண்களின் பிரதிநிதித்துவம் 5 வீதத்தைக் கூடத் தாண்டவில்லை. அமைச்சரவையிலும் கூட பெரும்பாலும் "மகளிர் அமைச்சு" தவிர்ந்த வேறு அமைச்சுகள் அவ்வளவாக வழங்கப்பட்டதில்லை. பெண்களுக்கு அமைச்சுக்கள் வழங்கப்படுவது கூட 9 வீதத்தை இது வரை தாண்டவில்லை. சமூக அரசியல் நடவடிக்கைகளில் பெண்கள் ஈடுபடுவதற்கும் அரசியல் ரீதியில் அவற்றில் தலையீடு செய்வதற்கும் பெண்களுக்கு உள்ள உரிமை இதுவரை காலம் மட்டுப்படுத்தப்பட்டே வந்திருக்கிறது. குறைந்த பட்சம் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரச்சினைகள் குறித்த விடயங்களில் கூட ஆண்கள் பெண்களுக்கு எதிரான முடிவுகளை எடுத்துவந்த வேளைகளில் அதனை எதிர்க்க பாராளுமன்றத்தில் பலமில்லாதவர்களாகவே இருந்து வந்துள்ளனர். இதற்கு சிறந்த ஒரு உதாரணம் 1995ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20, 21 ஆகிய திகதிகளில்

→16

### உலக நாடுகள் சிலவற்றில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டமை, பெண்களின் பிரதிநிதித்துவம்

| நாடுகள் | பெண்களுக்கு வாக்குரிமை | முதற் பெண் அங்கத்துவம் | 1993இல் பெண் அங்கத்துவம் |
|---|---|---|---|
| அல்பேனியா | 1945 | 1945 | 5.7 |
| அல்ஜீரியா | 1962 | 1962 | 10.0 |
| அங்கோலா | 1975 | 1980 | 9.5 |
| அண்டிகுவா பார்புடா | 1951 | 1980 | 0.0 |
| ஆர்ஜென்டீனா | 1947 | 1952 | 5.0 |
| அவுஸ்திரேலியா | 1901-1967 | 1943 | 8.2 |
| ஆஸ்திரியா | 1918 | 1919 | 21.3 |
| பஹாமஸ் | 1962-1964 | 1977 | ? |
| பங்களாதேஷ் | 1947 | 1975 | 10.3 |
| பார்படொஸ் | 1951 | 1951 | 3.6 |
| பெல்ஜியம் | 1919-1948 | 1921 | 9.4 |
| பெலிஸ் | 1945 | 1984 | 0.0 |
| பெனின் | 1956 | 1979 | 6.3 |
| பூட்டான் | 1953 | 1975 | 0.0 |
| பொலிவியா | 1938-1952 | 1966 | ? |
| பொட்ஸ்வானா | 1965 | 1979 | 5.0 |
| பிரேஸில் | 1934 | 1934 | 6.0 |
| பல்கேரியா | 1944 | 1945 | 12.9 |
| கெமரூன் | 1946 | 1962 | 12.2 |
| கனடா | 1917-1918-1950 | 1921 | 13.2 |
| கேப் வெர்டே | 1975 | 1975 | 7.6 |
| சிலி | 1931-1949 | 1951 | 5.8 |
| சீனா | 1949 | 1954 | 21.0 |
| கொலம்பியா | 1947 | 1948 | 4.3 |
| கொங்கோ | 1963 | 1970 | - |
| கொஸ்டாரிக்கா | 1949 | 1953 | 12.3 |
| கொட் டி வொயர் | 1952 | 1965 | 4.6 |
| கியூபா | 1934 | 1940 | 22.3 |
| சைப்பிரஸ் | 1960 | 1963 | 5.4 |
| செக்கோ.... | 1920 | 1020 | 10.0 |
| கொரிய ஜ.ம.கு | 1946 | 1948 | 20.1 |
| டென்மார்க் | 1915 | 1918 | 33.3 |
| டொமினிக்கா | 1981 | 1980 | 12.9 |
| டொமினிக்கன்.கு | 1942 | 1946 | 11.7 |
| இக்குவோடோர் | 1946 | 1957 | 5.2 |
| எகிப்து | 1956 | ? | 2.2 |
| எல் சல்வடோர் | 1961 | ? | 8.3 |
| எக்குடோரியல் குய்னியா | 1963 | 1968 | ? |
| பின்லாந்து | 1906 | 1906 | 39.0 |
| பிரான்ஸ் | 1944 | 1945 | 6.1 |
| கெபோன் | 1956 | 1961 | 5.8 |
| கம்பியா | 1960 | ? | 7.8 |
| ஜெர்மனி | 1918 | 1919 | 20.5 |
| நிக்கரகுவா | 1955 | 1958 | 16.3 |
| நைகர் | 1948 | 1989 | 6.0 |
| நோர்வே | 1907-1913 | 1911-1921 | 35.8 |
| பாகிஸ்தான் | 1937 | 1947 | 0.9 |
| பனாமா | 1941-1946 | 1946 | 7.5 |
| பப்புவா நியுகினியா | 1975 | 1977 | 0.0 |
| பரகுவே | 1961 | 1963 | 2.5 |
| பெரு | 1950 | 1956 | 6.3 |
| பிலிப்பைன்ஸ் | 1937 | 1941 | 10.6 |
| போலாந்து | 1918 | 1919 | 9.6 |
| போர்த்துக்கள் | 1931-1976 | 1934 | 8.7 |
| கொரிய.கு | 1948 | 1948 | 1.0 |
| ரோமானியா | 1929-1946 | 1946 | 3.5 |
| ருவாண்டா | 1961 | 1965 | 17.1 |
| சென் கிட்ஸ்... | 1951 | 1984 | 6.7 |
| சென் லூசியாஸ் | 1951 | 1979 | 0.0 |
| சென் வின்சன்ட்... | 1951 | 1979 | 9.5 |
| சென் மரினோ | 1960 | 1974 | 11.7 |
| சாவோ டொம்.. | 1975 | 1975 | 10.9 |
| செனகல் | 1945 | 1963 | 11.7 |
| சீஷெல்ஸ் | 1948 | 1976 | 45.8 |
| சிங்கப்பூர் | 1948 | 1984 | 3.7 |
| சொலமன் தீவு | 1945 | - | ? |
| தென் ஆப்பிரிக்கா | 1930-1984 | 1933 | 2.8 |
| ஸ்பெய்ன் | 1931 | 1931 | 16.0 |
| சிறிலங்கா | 1931 | 1931 | 4.9 |
| கிரீஸ் | 1952 | 1952 | 5.3 |
| கிரனடா | 1951 | 1976 | ? |
| கௌதமாலா | 1945 | 1954 | 5.2 |
| கினியா பிசாவோ | 1977 | ? | 12.7 |
| கயானா | 1953 | 1953 | ? |
| ஹய்ட்டி | 1950 | ? | 3.6 |
| கொண்டோரஸ் | 1957 | 1967 | 11.7 |
| ஹங்கேரி | 1945 | 1945 | 7.3 |
| ஐஸ்லாந்து | 1915 | ? | 21.8 |
| இந்தியா | 1950 | 1952 | 7.3 |
| இந்தோனேசியா | 1945 | 1945 | 12.2 |
| ஈரான் | 1963 | 1963 | 3.4 |
| ஈராக் | 1980 | 1980 | 10.8 |
| அயர்லாந்து | 1918 | ? | 12.1 |
| இஸ்ரேல் | 1948 | 1948 | 9.2 |
| இத்தாலி | 1945 | 1946 | 8.1 |
| ஜமய்க்கா | 1944 | ? | 11.7 |
| ஜப்பான் | 1945-1947 | 1947 | 2.3 |
| கென்யா | 1963 | 1969 | 3.0 |
| குவைட் | இல்லை | | |
| லாவோஸ் ம.கு. | 1958 | ? | 9.4 |
| லத்வியா | - | - | 17.0 |
| லெபனான் | 1926 | - | 2.3 |
| லைபீரியா | 1946 | 1964 | 6.1 |
| லிபியா | 1969 | ? | ? |
| லிக்தென்சீன் | 1984 | 1986 | 4.0 |
| லக்ஸம்பர்க் | 1919 | 1919 | 13.3 |
| மடகாஸ்கார் | 1959 | 1965 | ? |
| மலாவி | 1964 | 1964 | 11.6 |
| மலேசியா | 1957 | 1959 | 5.0 |
| மாலைத்தீவு | 1932 | ? | 4.2 |
| மோல்டா | 1947 | 1947 | 1.5 |
| மொரிசியஸ் | 1956 | ? | 3.0 |
| மெக்சிக்கோ | 1947 | 1952 | 7.6 |
| மொனாக்கோ | 1962 | 1963 | 5.6 |
| மொங்கோலியா | 1923-1924 | 1924 | 3.9 |
| மொராக்கோ | 1963 | - | 0.7 |
| மொசாம்பிக் | 1975 | 1977 | 15.7 |
| நமீபியா | 1989 | 1989 | 6.9 |
| நௌரு | 1968 | 1986 | 5.6 |
| நேபாள் | 1951 | ? | 3.4 |
| நெதர்லாந்து | 1919 | 1918 | 23.3 |
| நியூசிலாந்து | 1893 | 1933 | 16.5 |
| சூரினாம் | 1953 | ? | 5.9 |
| ஸ்வீடன் | 1918-1921 | 1921 | 33.5 |
| ஸ்விட்ஸர்லாந்து | 1971 | 1971 | 17.5 |
| சிரியா | 1949 | 1958 | 8.4 |
| தாய்லாந்து | 1932 | 1949 | 4.2 |
| டோகோ | 1956 | ? | 6.3 |
| டொங்கா | 1960 | - | 3.3 |
| டிரினிடா... | 1945 | 1971 | 13.5 |
| டியுனிஷியா | 1959 | 1959 | 4.3 |
| துருக்கி | 1930-1934 | 1935 | 1.8 |
| துவாலு | - | 1989 | 7.7 |
| உகாண்டா | 1962 | 1962 | 12.6 |
| அரேபிய.ஐ.இ | இல்லை | | |
| ஐக்கிய ராஜ்ஜியம் | 1918-1928 | 1919 | 9.2 |
| டன்சானியா.ஐ.கு. | 1959 | ? | 11.2 |
| அமெரிக்க.ஐ.இ. | 1920 | 1924 | 10.8 |
| உருகுவே | 1932 | 1942 | 6.1 |
| வெனோதோ | 1980 | 1977 | ? |
| வெனிசுலா | 1947 | 1948 | 10.0 |
| வியட்னாம் | 1946 | 1946 | 18.5 |
| மேற்கு சமோவோ | 1990 | ? | 4.3 |
| யேமென் | 1967-1970 | 1970 | 0.7 |
| யுகோஸ்லேவியா | 1949 | 1943 | 3.0 |
| சையிரே | 1967 | 1970 | - |
| சம்பியா | 1962 | 1964 | 6.7 |
| சிம்பாவே | 1957 | 1924-80 | 12.0 |

இப்பள்ளிவிபரமானது "Women and empoemment: participation and decision making" (prepared by: Marilee Karl-zed books Ltd - London & New jersey) எனும் நூலில் வெளியிடப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதழ் 131 இல் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் தேசியம்தேசியம் தொடர்பான நேர் காணலைச் சரிநிகர் பிரசுரித்திருந்தது. கனடாவில் இருந்து வெளிவரும் 'காலம்' இதழில் வெளியான அந் நேர்காணலை சிற்சில திருத்தங்கள் செய்து தந்தார் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள். இவ்விதழில் தேசியம் தொடர்பாக கொ.றொ.கொன்ஸ்றன்றைன் அவர்களது கட்டுரை பிரசுரமாகிறது. (ஆ-ர்)

# வடிவம் கோரும் தேசியம்

கொ.றொ.கொன்ஸ்றன்றைன்

தேசியம் என்றால் என்ன? இது ஒரு சிக்கலான கேள்வி. தேசியம் அடிப்படையில் ஒரு சமூக அரசியற் கருத்தாக்கம். அதன் ஒரு பக்கத்தில் இனத்துவம் மறு பக்கத்தில் சுயநிர்ணயம் என்ற இரு அரசியற் கருத்தாக்கங்களைக் கொண்டது.

தேசியவாதம் (Nationalism) என்பது கருத்தாடல் தளத்திற்கு மட்டும் உரியதல்ல. அது ஒரு குறித்த வரைவிலக்கணத்திற்குள் மட்டும் சுருங்கி நிற்கும் ஒத்த வடிவக் கருத்தாக்கமா அல்லது பன்முகத்தன்மையானதா என்பது தேசியவாத நெருக்கடிகளில் சிக்குண்டிருக்கும் நாம் கேட்க வேண்டிய முக்கிய கேள்வி. தேசியவாதத்தைப் பற்றி ஆராயும் பொழுது இன்னொரு கேள்வியும் முக்கியமாகிறது. அதாவது தேசியவாதமானது புலமைத்துவ ஊடாட்டத்திற்கூடாக (Interlectual discourse) வடிவமைக்கப்பட்டு அது அரசியலுக்காகப் பயன்படுத்தப்படுகிறதா அல்லது அரசியல் நெருக்கடிகளின் வாயிலாக உணரப்படும் ஒரு வகை கூட்டுணர்வின் கருத்தாக்க வடிவம் தான் தேசியமா என்பதாகும்.

புலமைத்துவ ஊடாட்டத்தில் நாம் மேலைத்துவ செல்வாக்கிலிருந்து விடுபடுவது சற்றுக்கடினமானது. நாம்காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்டாலும் காலனித்துவ மனச்சட்டகத்திலிருந்து இன்னமும் முற்றாக விடுபடவில்லை. காலனித்துவ மொழி, வாழ்வியல் அவர்களது ஊடாட்ட பண்பு போன்றவற்றிலிருந்து விடுபட முடியாத பின்காலனித்துவ ஆதிக்கர்கள் (Post-colonizer- Simon During) இனால் பயன்படுத்தப்பட்ட ஒரு சொல் - இதனை During மேலாதிக்கர் என்ற கருத்தில் பயன்படுத்தவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியது) தான் எமது கருத்தாக்க தளத்தினை நிர்ணயிப்பவர்கள் என்பது இதன் முக்கிய காரணமாகும்.

தேசியவாதமானது இன்றைய உலகில் பல சிக்கலான கேள்விகளையும் விமர்சனங்களையும் உருவாக்கியுள்ள ஒரு கருத்துருவம். இது ஜனநாயகத்திற்கு (Democracy) எதிரானது, பிற்போக்கானது, தனி மனித சுதந்திரத்திற்கு எதிரானது என பல சிந்தனையாளர்கள் கருதுகின்றனர்.

இப்படியான விமர்சனங்களுக்கு முக்கிய காரணம் தேசியவாதத்தின் செயற்பாட்டு வடிவம் ஏற்படுத்திய சில பாதகமான விளைவுகள்தான். ஆகவே தேசியவாதம் பற்றி முன்வைக்கப்படும் கருத்துக்களை அதை முன்வைப்பவர்களின் அனுபவப் பின்புலத்தினூடாகவே அணுக வேண்டும். அக்கருத்தாக்கங்களின் கட்டமைப்பு என்ன என ஆராய வேண்டும். இந்த சிந்தனையாளரது முற்கற்பிதங்கள் முதன்மையான அனுபவமின்மை (Primary Experience) என்பவற்றினூடாவே அவர்களது கருத்துக்கள் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

தேசியவாதம் என்றதும் பலரது ஞாபகத்திற்கு வருவது நாசி ஜெர்மனியர்களது அட்டூழியங்கள் தான். இது தேசியவாதத்தின் பேரால் முன்னெடுக்கப்பட்ட ஒரு பெரிய அழிவு. இது ஏற்படுத்திய அழிவுகள் ஒரு புறமிருக்க அது உருவாக்கிய உணர்ச்சி வேகமும் எப்படி இந்த கருத்தாக்கம் மனித நடத்தையை பாதித்தது என்பதுவும் முக்கியமானது.

அண்மையில் நடைபெற்ற நாசி கொலைகள் சம்பந்தமான வழக்கொன்றில் கருத்திலெடுக்கப்படவேண்டிய விடயமொன்று வெளிப்பட்டது. பல கொலைக்குற்றங்களுக்காக ஒரு நாசி சிறைக்காவலாளி விசாரிக்கப்பட்டார். இந்த விசாரணையில் இவர் தற்போது வேலை செய்யும் வைத்தியசாலையின் சில நோயாளிகள் சாட்சியம் கூறினர். இவர்களது கருத்துப்படி இந்த மாஜி சிறைக் காவலாளி மிகுந்த மனிதாபிமானம் மிக்கவர். தம்மை எவ்வளவு மனிதாபிமானத்துடன் இவர் பராமரித்தார் என்பதை அவர்கள் விளக்கிக் கூறினர்.

இதன் மூலம் ஒரு விடயம் தெளிவாகிறது. தேசியவாதக் கருத்துக்கள் மனித நடத்தையினைத் தீர்மானிக்கும் தன்மை வாய்ந்தன. இது தேசியவாதம் ஏற்படுத்தக் கூடிய ஒரு முக்கிய தாக்கம்.

தேசியவாதத்தின் பிறிதொரு வடிவத்தினை நாம் காலனித்துவ காலத்தில் ஏற்பட்ட காலனித்துவ எதிர்ப்பு இயக்கங்களில் காணலாம். காலனித்துவ மேலாதிக்க சக்திகள் (Colonizer) காலனித்துவ நாடுகளின் வளங்களைச் சுரண்டியதோடு மட்டுமல்லாது அவற்றின் கலை, இலக்கிய பண்பாட்டு அம்சங்களையும் சிதைத்தன. அத்துடன் மேலைத்தேய கலை இலக்கிய வடிவங்களையும் புகுத்தின. இதனால் காலப்போக்கில் சுதேசிகள் அந்நியராட்சிக்கு எதிர்ப்புக் காட்டத்தொடங்கினர்.

இந்த எதிர்ப்புரைகளுக்கு தேசியவாதமானது ஒரு செயற்பாட்டு வடிவத்தினைக் கொடுத்தது. இதனால் மேலைத்தேசத்து காலனித்துவ சக்திகள் மத்தியில் தேசியவாதமானது நிர்வாக அமைப்புகளுக்கு எதிரான ஒரு எதிர்ப்பு வடிவம் என்ற மனப்பதிவை ஏற்படுத்தியது. இது இன்னொரு விதத்தில் மிகுந்த நாகரீகமானவர்களாக தம்மைக் காட்டிக் கொள்ள விரும்பிய மேலைத்தேசத்தவர்களின் அராஜகப்பண்பினை வெளிக்கொணர உதவியது. இதுவும் கூட ஒரு எதிரான மனப்பதிவை ஏற்படுத்தியிருக்கலாம்.

அண்மைக் காலங்களில் தேசியவாதப் போராட்டங்களை நாம் கம்யூனிசம் வீழ்ச்சியடைந்த நாடுகளில் (Post communist) அதிகம் காண்கிறோம். இந்தத் தேசியவாதமானது ஒரு வலிமைமிக்க அரசியற்சக்தியாகத் தொழிற்படுகிறது.

கம்யூனிசத்தின் வீழ்ச்சியை ஜனநாயகத்தின் வெற்றியாக பல அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். இருப்பினும் கம்யூனிச வீழ்ச்சியைத் தொடர்ந்து பல நாடுகளில் தேசியவாதம் தலைதூக்கியிருப்பது ஒரு சவாலாகவே தென்படுகிறது. கம்யூனிச காலத்தில் ஜனநாயக ஆதரவாளர்களாகவும் கம்யூனிச எதிர்ப்பாளர்களாகவும் காட்டிக் கொண்ட பல கம்யூனிச தலைவர்கள் கம்யூனிச வீழ்ச்சியைத் தொடர்ந்து தேசியவாதிகளாகத் தம்மை இனம்காட்டியுள்ளனர். Shlomo Avineri போன்றோர் தேசியவாதமானது கம்யூனிசத்தை மாற்றீடு செய்துள்ளதாகக் கருதுகின்றனர்.

பின்கம்யூனிச தேசியவாதமானது மிகவும் சிக்கலானது, ஒரு செயற்பாட்டு வடிவத்தினைக் கொண்டுள்ளது. இது 19ம் நூற்றாண்டின் தேசியவாதத்தைப்போல எல்லைப்போர்களாகவும், மற்றைய நாடுகளின் பகுதிகளை மீள் இணைத்தலுக்கான ஆக்கிரமிப்புகளாகவுமே வெளிப்படுகிறது.

இவையெல்லாம் தேசிய வாதத்தினது பல்வேறுபட்ட சிக்கலான செயற்பாட்டு வடிவங்களையே எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

இந்தப் பின்புலங்களுக்கூடாக பார்க்கும் பொழுது செயற்பாட்டுத் தளத்தில் தேசியவாதமானது பன்முகத்தன்மையுடையதாகவே வெளிப்படுகிறது. காரணம் அதன் வடிவம், அதனை உருவாக்கும் வரலாற்றுத் தன்மைகளைப் பொறுத்து வேறுபடுகிறது.

காலனித்துவ தேசியவாதமானது அடிப்படையில் மரபின் புத்துயிர்ப்புக்கான வடிவம். சிதைந்து போகும் சுதேசிய மரபு, கலாசார அம்சங்களை மீட்கவும் பாரம்பரியத்தைப்பேணுவுமான முயற்சியாகவே இது வெளிப்பட்டது. இதனை நாம் ஆனந்த குமாரசாமியின் எழுத்துக்கள் தொடங்கி மோகனதாஸ் காந்தியின் செயற்பாடுகள் வரை காணலாம்.

இந்தக் காலனித்துவ தேசியவாதமானது தன்னகத்தே பல சிக்கல்களைக் கொண்டுள்ளது. இது மரபின் புத்துயிர்ப்பாக இருந்தபடியால் இது மதத்துடனோ அல்லது பாரம்பரிய சமூகத்தின் சில இயல்புகளுடனோ தன்னை இணைத்துக் கொண்டது.

அதுமட்டுமல்லாது மேலைத்தேய வரவால் ஏற்பட்ட நவீனமயப்பாடினை தடுக்கும் அல்லது தணிக்கும் செயற்பாடுகளும் தேசியவாதத்தின் பேரால் நடந்தேறின. இந்தச் செயற்பாடுகளிலே முக்கியமான ஒரு முரண்நிலையை நாம் அவதானிக்கலாம். இந்தப் போராட்டங்களுக்கு தலைமை வகித்தவர்கள் தாம் பெற்ற தரிசன விரிவை (மேலைத்தேய தொடர்புகள், மேலைத்தேய கல்வி போன்றவை மூலம் தேசியவாதத்தின் பேரால் மற்றோர் (?) பிறத்தியார்) பெறுவதைத் தடுத்தனர்.

இந்தக் காலனித்துவ தேசியவாதத்தை ஒரு விதத்தில் மேலைத்தேச நவீனமயமாக்கலால் பாரம்பரிய சமூக அடுக்கமைவில் ஏற்படுத்திய தளர்வின் எதிரொலியாகக் கூடக் கருதலாம். ஏனெனில் மரபின் புத்துயிர்ப்பு பாரம்பரிய சமூகத்தின் அடுக்கமைவினை நேரடியாகவோ மறைமுகமாகவோ மீண்டும் வலியுறுத்தவே செய்தது.

காலனித்துவ தேசியவாதம் பல சந்தர்ப்பங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் மதத்துடன் தொடர்புடையதாக இருந்தது. இது கலாசார தூய்மைவாதக் கருத்துக்கள் மூலம் மதத்தை முன்னிலைப் படுத்துவதாக அமைந்தது. இது மதத்திலிருந்து படிப்படியாக விடுபடத்தொடங்கிய சமூகத்தை (Secularisation) மீண்டும் மதத்துடன் இணைப்பதில் முக்கிய பங்கு வகித்தது. ஆக, காலனித்துவ தேசியவாதம் ஒரு வகையில் மதநீக்கச் செயற்பாட்டை (Secularisation) எதிர்த்தது எனவும் கூறலாம்.

இந்தப் போக்குகள் மத சீர்த்திருத்தம் தூய்மைவாதம் என பல்வேறு வடிவங்களில் இன்றும் போற்றப்பட்டு வருகின்றன.

இப்படியாக காலனித்துவ தேசியவாதமானது ஒரு வித அடக்குமுறைத் தேசியவாதமாக, நவீன மயப்பாட்டினை எதிர்க்கும் வடிவமாக, அதேவேளை மரபின் பல பிற்போக்குத் தனங்களை மீள் உருவாக்கம் செய்த செயற்பாடாகவே வெளிப்படுகிறது.

தேசியவாதத்தைப்பற்றி சிந்திக்கையில் தேசியவாதம் ஏன் அடிக்கடி இப்படியான பிறழ் நிலைக்கு உட்படுகிறது எனச் சிந்திக்க வேண்டியுள்ளது. இதற்கு ஒரு முக்கியகாரணம் தேசியவாதத்துடன் அநேக சந்தர்ப்பங்களில் இணைந்து நிற்கும் ஒரு வகைமிகைப்படுத்தல் பண்பு. இந்த மிகைப்படுத்தல் பண்பு எளிதாகவே மேலாதிக்க உணர்வுகளுக்கு இட்டுச் சென்று இனவாதமாக மாறக்கூடியது.

இந்த மிகைப்படுத்தல், மரபின் சிறப்பைப்பற்றியதாகவோ, கலாசார மேன்மை பற்றியதாகவோ, மதம், மொழி அல்லது வேறு அம்சம் பற்றியதாகவோ இருக்கலாம். கல் தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்தகுடி, ஆண்ட பரம்பரை போன்ற பிரயோகங்களெல்லாம் மிகைப்படுத்தப்பட்ட கூற்றுகளே.

இனவாதத்தையும் தேசியவாதத்தையும் ஒரு மெல்லிய கோடு தான் பிரித்துக் காட்டுகிறது. பல்வேறு காரணங்களால் இந்த மெல்லிய கோடு அடிக்கடி கடக்கப்படுகிறது. இதற்கான ஒரு முக்கிய காரணம் மிகைப்படுத்தப்பட்ட தேசிய பிரதிமை. இதனால் போலும் புகயாமா (Francis Fukuyama) தேசியவாதத்தை ஒரு குறித்த இனத்திற்கு மேலதிக அங்கீகாரத்தைக் கோரும் ஒரு கருத்தாக்கம் (Megalothymic) எனக்கூறுகிறார்.

இந்தக் காரணங்களை விட மேலைத் தேசத்தாருக்கு தேசியவாதமானது இன்னொரு புதிய சவாலையும் ஏற்படுத்துகிறது. தேசியவாதமானது ஐரோப்பிய மையவாத சிந்தனைக்கு அடிப்படையில் எதிரானது.

பின்நவீனத்துவ / பின்காலனித்துவ (Post Moderan/Post colonial) காலத்திற்கு முன்னர் ஐரோப்பிய மையவாதப்போக்கு ஒரு ஏற்றுக் கொள்ளப்பட்ட போக்காக நிலவி வந்தது. இதனால் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்தவர்களை பிறத்தியாராக (The Other) கணிப்பில் எடுக்கப்படத் தேவையில்லாதவர்களாக நடத்தி வந்தார்கள்.

தேசியவாதமானது அடிப்படையில் இந்தப் பிறத்தியாரின் தன்னடையாளம் பற்றிய ஒரு கருத்தாக்கமாகவே இருந்தது. ஆக, தேசியவாதத்தை ஏற்பது பிறத்தியாரான ஓரங்கட்டப்பட்டவர்களை (Marginalised) மத்திக்கு கொண்டு வருவதாகவே முடியும் என்ற அச்சமும் மேலைத் தேசத்தாரிடம் இருக்கிறது.

அத்துடன் தேசியவாதத்தை அங்கீகரிப்பது பிறத்தியாராது ஊடாட்டப் பண்பினை (Discorsive Practice) அங்கீகரிப்பதாயமையும். இதனால் இது மேலைத்துவத்தின் புலமைத்துவ மேலாதிக்கத்திற்கு சவாலாக அமையும்.

பின்நவீனகால கட்டத்தில் இந்த நிலைப்பாடானது மாற்றமடைந்து கொண்டு வருகிறது. இதை இன்று மேலைத்துவ புலமைத்துவ மட்டத்தில் பிறத்தியார் பலர் முன்னணியில் திகழ்வது எடுத்துக் காட்டுகிறது. (இவர்களில் பெரும்பாலானோர் பின்காலனித்துவ ஆதிக்கர்களாக இருப்பது வேறு விடயம்)

செற்பாட்டுத் தளத்தில் தேசியவாதமானது பன்முகத்தன்மையானது. கருத்தாக்கத் தளத்தில் இது ஒருமைப்பாடெய்திய கருத்தாக்கமாகக் கொள்ளப்படுகிறது. இந்த கருத்தாக்கத்துள் - செயற்பாட்டுத்தள வேறுபாடு முக்கியமானது. இது பெருமளவில் பேசப்படாத/ஆராயப்படாத ஒரு விடயமாகவே இருந்து வருகிறது.

இந்த முரண்பாடு ஆராயப்படாமல் இருப்பதற்கான முக்கிய காரணம் கருத்தாக்கங்கள் மேலைத்தேச ஊடாட்ட பண்புகளில் உருவாகி மேலைத்தேயத்தில் செயற்பாட்டு வடிவம் பெறுகையில் இந்த இரண்டு தளங்களும் பெருமளவில் ஒரே வடிவத்தினைப் பெறுகின்றன. ஆனால் இதே கருத்தாக்கங்கள் கீழைத்தேசத்திற்கு வரும் பொழுது அவை கீழைத்தேச ஊடாட்ட பண்பிற்கு இயைய வெவ்வேறு வெளிப்பாட்டு வடிவம் கொள்கின்றன.

இந்தக் கருத்தாக்க - நடைமுறைப் பிறழ்வை விளங்கிக் கொள்ளும் பொழுது தான் மேலைத்தேய கருத்தாக்கங்கள் கீழைத்தேயத்தில் எப்படி உள்வாங்கப்படுகின்றன என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடியும். இது கீழைத்தேயத்தின் தனித்துவ புலமைத்துவ வளர்ச்சிக்கும் முக்கியமானது.

## தேசியவாதம் ஒரு கற்பனை?

தேசியவாதமானது மனித உணர்வுகளுடன் சம்பந்தப்பட்டது. சமூக அரசியல் செயற்பாட்டின் யதார்த்தமானது புறவயமான (Objective) நிச்சயமான காரணிகளால் மட்டுமல்லாது அகவயமான (Subjective) காரணிகளாலும் நிர்ணயிக்கப்படுவதாக வரலாறு காட்டியுள்ளது.

ஏனஸ்ட் ரெனனின் (**Ernest Renan**) கருத்துப்படி A Nation is a soul, a Spiritual principle. Two things, which in fruth are but one, constitute this soul or spiritual principle. One lies in the past, one in the present. One is the Possession in common of a rich legacy of memories; the other is present-day consent, the desire to live together, the will to perpetuate the value of the heritage that one has received in an undivided form!

தேசியமானது ஒரு பொதுவான கடந்த கால நினைவுகளையும், கடந்த காலச்சிறப்புகளையும் பேணும் முனைப்புடன் நிகழ் காலத்தில் இணைந்து வாழுதலுக்கான விருப்பையும் வெளிப்படுத்தும் ஒரு கருத்தாக்கம். தேசிய வாதம் எல்லைகளுக்குள் குறுகி நிற்பதில்லை. மதம் இனம் மொழி எல்லாவற்றையும் கடக்கக் கூடியது. ஒன்றுபட்ட ஒரு தன்மையான உணர்வுந்தலால் ஒரு மக்கட்குழு ஒருமித்து வாழ விழையும் பொழுது தேசியம் பிறக்கிறது. இந்த அடிப்படையில் நவீனதேசியமானது ஒரு கற்பனாவாதம் எனச் சிலர் கருதுகின்றனர்.

தேசியவாதம் ஒரு கற்பனை என்பது பிரதானமாக மேலைத்தேய புலமைத்துவ ஊடாட்ட பண்பில் விளைந்த ஒரு கருத்து. இதன் அடிப்படைக் காரணம்; ஒன்று, தேசியவாதக் கருத்துக்கள் இவர்களது ஊடாட்டப் பண்பின் மேலாதிக்கத்திற்கு சவாலாய் அமைவது. இரண்டாவது, இப்படியான அபிப்பிராயத்தை முன் வைப்பவர்கள் தேசிய வாத சிக்கல்களை சந்திக்காத வந்தேறு குடிகளை (Immigrant Population) கொண்ட நாடுகளில் இருப்பது. இதனால் இவர்களது கருத்துக்களில் லியோடாட் (Lyotard) முன்வைக்கும் 'வித்தியாசம்' (Differend) என்ற கருத்தாக்கம் தொழிற்படும்.

எமது அனுபவமோ வேறு. தேசியவாதம் என்பது எமக்கு ஒரு பகடைக்காயோ அல்லது ஒரு பகட்டான விடயமோ அல்ல. அது ஒரு வாழ்க்கைப் பிரச்சினை.

இன்று எனது நாளாந்த வாழ்வியல் நடவடிக்கைகளில் நான் ஒரு தமிழராக பிறத்தியாராக இருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம், நான் அப்படி இருக்க விரும்புகிறேன் என்பதை விட நான் அப்படி உணர வைக்கப்படுகிறேன் என்பதே உண்மை.

தேசியவாதமானது கற்பிதமாக இருக்கலாம். அது நான் வாழும் சமூகத்தால் நான் பிறத்தியாராகக் கருதப்பட்டு என் மீது திணிக்கப்படும் பொழுது அது எனது வாழ்நிலை யதார்த்தமாகிறது.

நான் ஒடுக்கப்படும் பொழுது, சர்வ தேசம் போற்றும் ஜனநாயக அமைப்பில் நான் எனது அவலங்களுடனும் அவநம்பிக்கைகளுடனும் அல்லலுறும் போது எனது வாழ்நிலைக்கான காரணத்தை எனது தேசியம் தான் விளக்குகிறது.

www.tamilarangam.net



# கழுத்துறை :

டிசம்பர் 10ஆம் திகதி. உலகம் முழுவதும் மனித உரிமைகள் தினத்தை நினைவு கூர்ந்து கொண்டிருந்தனர். உலக நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் 'மனித உரிமை மீறல்களை எதிர்த்து கண்டன அறிக்கைகளையும், வாக்குறுதிகளையும் பஞ்சமின்றி விடுத்துக் கொண்டிருந்ன. இலங்கையில் கூட பல மனித உரிமை அமைப்புகள் ஆர்ப்பாட்டங்களையும் கூட்டங்களையும் நடாத்திக் கொண்டிருந்தன. "அரசே, அரசியல் கைதிகளை உடனீடியாக விடுதலை செய்!, அப்பாவித் தமிழர்களை கைது செய்வதை நிறுத்து, கைது செய்யப்பட்டவர்கள் எங்கே!, காணாமல் போனவர்களின் விபரங்களை வெளியிடு, காணாமல் போனவர்களின் கதி என்ன?" இப்படியான கோஷங்கள் ஆக்ரோஷமாக வெளிக்கிளம்பின. இலங்கை அரசும் கூட மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் தமது முயற்சிகளையிட்டும் பீத்திக் கொண்டிருந்தன.

## மனித உரிமை தினத்தன்று...

இத்தனையும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் களுத்துறைச் சிறையில் அடைபட்டுக் கிடந்த அப்பாவித் தமிழ் இளைஞர்கள் பேரினவாதத்துக்கு பலிக்கடாக்களாக்கப்படுவதற்காக தயார்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆம், அதே 10ஆம் திகதியன்று மத்தியானம் கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் நடந்து கொண்டிருக்கையில், அங்கே களுத்துறையில் மதிய உணவின் போது தண்டனை பெற்ற சிங்கள சிறைக் கைதிகளினால் தமிழ் கைதிகள் வம்புக்கு இழுக்கப்பட்டனர். இந்த சிங்கள கைதிகளிடம் தான் சிறைச்சாலையில் உயர் வேலைகள் பகிரப்படுவது வழக்கம். உணவு வழங்குவது கூட இவர்களிடமே விடப்பட்டிருக்கிறது. தமிழ் கைதிகளுடன் ஏளனமாக நடந்து கொள்வதும், தண்டனை பெற்ற சிங்களக் கைதிகளின் காடைத்தனத்துக்கும், துன்புறுத்தல்களுக்கும் தமிழ் கைதிகள் இரையாவதும் வழமையாக சகல சிறைச்சாலைகளிலும் நடப்பது தான்.

உணவுப் பகிர்வின் போது அங்குள்ள ரவுடிகளுக்கு அதிகளவு உணவு வழங்குவதும் தமிழ் கைதிகளுக்கு வேண்டுமென்றே உணவுக்குறைப்பு செய்வதும் நடைமுறையில் சாதாரண நிகழ்வுகள். சம்பவ தினத்தன்று இப்போக்கை தினம் தினம் சகித்து வந்த தமிழ் கைதிகள் தமது கையாலாகாத் தனத்தை கைவிட்டு அன்று கேள்வி கேட்டுள்ளனர்.

இப்படியான கேள்விகளை தமிழ் கைதிகளிடமிருந்து சற்றும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள் அவர்கள். தூஷண வார்த்தைகளால் திட்டித் தீர்க்கவே, வாக்குவாதம் முற்றியுள்ளது. இதன் இறுதியில் கைகலப்பு நடந்துள்ளது. இதில் குறிப்பிட்ட, தமிழ் இளைஞரும் எதிர்த்துத் தாக்கியுள்ளார். சிறை ஊழியர்கள் தமிழ் இளைஞர்களை கட்டுப்படுத்த முயன்ற அளவுக்கு சிங்கள இளைஞர்களை கட்டுப்படுத்த முயன்றிருக்கவில்லை என்று தகவல்களிலிருந்து தெரிகிறது.

## ரவுடிச் சான்றிதழுக்கு வந்த அவமானம்!

இச்சம்பவம் காடையர் கூட்டத்துக்கு நிச்சயம் பெரும் அவமானத்தையும், ஆத்திரத்தையும் ஊட்டியிருக்கத் தான் செய்யும். "ெமலா" எதிர்த்துத் தன்னைப் பேசியதுமல்லாமல், தனக்கு கைதூக்கியதானது தனது ரவுடிச் சான்றிதழுக்கு பெருத்த குறையாகவே கருதியிருப்பான்.

அன்றைய தினம் இச்சம்பவம் முழு சிறைச்சாலையையும் கொந்தளிக்கச் செய்திருந்தன. ஒரு பக்கம் அவமானமுற்றிருந்த தண்டனை பெற்ற சிங்கள சிறைக்கைதிகள், மறுபுறம் இனியும் சகிக்க முடியாத நிலைக்கு வந்திருந்த தமிழ்க் கைதிகள்.

இச் சம்பவம் சும்மா திடீரென்று நடைபெற்ற ஒன்றல்ல. பேரினவாதமயப்பட்ட சிங்கள மக்கள், அதனை வன்முறையில் செயற்படுத்த தயாராக இருக்கும் ரவுடிக் கூட்டம். அவற்றுக்கு ஆதரவளிக்கும் பாதுகாப்பு தரப்பு, இத்தனைக்கும் நியாயத்தை கற்பித்துக் கொண்டு இவற்றைத் தொடரவிட்டுக் கொண்டிருக்கும் அரசு. இவ்வளவும் பின்புலமாக இருக்கின்றன.

## சிறை ஊழியர்களின் திட்டமிட்ட கேட் திறப்பு.

குறிப்பிட்ட சம்பவத்தின் போது தமிழ் கைதிகளின் முன்னைய உண்ணாவிரதப் போராட்டம், அதனைக் கொடூரமாக பொலிஸாரை ஏவி அடக்கியமை, அவை எதுவும் வெளியுலகுக்கு தெரியாமலிருப்பதற்காக 214 உண்ணாவிரதிகள் களுத்துறைச் சிறைக்கு மாற்றப்பட்டமை, புதிதாக வந்து சேர்ந்த அவர்களுக்கு ஏலவே இருந்த சிங்களக் கைதிகளால் வந்த அச்சுறுத்தல் என்பவையையும் கருத்திற் கொள்தல் அவசியம்.

அடுத்த நாள் 11ஆம் திகதி. முற்பகல், சிங்களக் கைதிகள் உள்ள E வார்டிலிருந்து (B,D ஆகிய வார்டுகளில் தமிழ் கைதிகள் அடைக்கப்பட்டிருக்கின்றனர். மகசினிலிருந்து கொண்டுவரப்பட்ட கைதிகளுடன் சேர்த்து மொத்தம் 884 கைதிகள் களுத்துறைச் சிறைச்சாலையில் அன்று இருந்தனர். இவர்களில் 445 பேர் தமிழ் அரசியல் கைதிகள்) தமிழ் கைதிகளின் இடத்துக்கு வந்து (திருகோணமலை-லிங்கநகரைச் சேர்ந்த) யோகேஸ்வரன் எனும் இளைஞனை இழுத்துப் போட்டு அடித்துள்ளனர் சிங்களக் கைதிகள். மிகவும் கொடூரமான முறையில் தாக்கப்பட்ட இவ்விளைஞனின் மண்டையைப் பிளந்தே விட்டார்கள். இச்சம்பவத்தை சிறை ஊழியர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனரேயன்றி தடுப்பதற்கான எவ்வித முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கவில்லை.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கு முகமாக தமிழ் கைதிகள் அனைவரும் அன்றே உண்ணா விரதத்தைத் தொடங்கினர். யோகேஸ்வரனைத் தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் கோரிக்கையையே இதன் போது முன் வைத்திருந்தார்கள். தான் இது குறித்து தேடிப்பார்ப்பதாகவும் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறும் சப் இன்ஸ்பெக்டர் வந்து கோரிய போதும் அவ்வுத்தரவாதம் போதுமானதல்ல என்று கோரி உண்ணாவிரதத்தை கைவிட மறுத்தனர் கைதிகள்.

அடுத்த நாள் 12ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் சிறையதிகாரிகள் சகல வார்டுகளின் கேட்டுகளையும் திறந்து விட்டனர். இத்தனைப் பதட்ட நிலையில் இவ்வாறு கேட்டுகளை திறந்து விட்டது தமக்கு ஆபத்துகளை ஏற்படுத்தப் போகின்றன என்பதை உணர்ந்த தமிழ் கைதிகள் பீதியுற்றனர். எச்சரிக்கையடைந்தனர். தாம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அணியணியாக வெளி வந்தனர் சிங்களக் கைதிகள். சிறையதிகாரிகள் அதனை கொஞ்சமும் கண்டு கொள்ளாதது இப்பீதியை அதிகரித்தன. அவர்கள் வெளியில் குவிக்கப்பட்டிருந்த கற்களையும், ஆங்காங்கு இருந்த ஆயுதங்களையும் சேகரித்துக் கொண்டிருப்பதைக் கண்டனர். தற்காப்புக்கான வழிகளைத் தேடினர். கேட் திறந்து இருந்ததனால் சில தமிழ் கைதிகள் சிறை ஊழியர்களிடம் போய் முறையிட்டனர். அதனை அலட்சியம் செய்ததுடன் அக்கைதிகளை அவரவர் இடங்களில் போய் இருக்கும் படி விரட்டினர்.

## உயிர்ப்பிச்சைக்கு கொலை பரிசு...

சரியாக மதியம் 1.30 மணி. (இது குறித்து சாட்சியமளித்த ஜெயிலர் எஸ்.டீ.ரஞ்சித் 2.25க்கு என்கிறார்) காடையர் கூட்டம், D வார்டுக்குள் புகுந்தனர். இதன் போது இந்த செல்லுக்குள் 137 தமிழ் சிறைக் கைதிகள் இருந்துள்ளனர். காடையர்களை உள்ளே வராமலிருக்க கதவை தள்ளிக் கொண்டே மறிக்க முயற்சித்தும் அவர்களால் தொடர்ந்து தாக்குப் பிடிக்க முடியவில்லை. கோடாரியைக் கொண்டு அக்கேட்டுகளை மேலே தூக்கித் திறந்ததாக கைதிகள் தெரிவித்துள்ளனர்.

கேட்டுகள் அவர்கள் உடைத்து வந்துவிடக் கூடிய வாய்ப்புகள் அதிகரித்துவிடவே அதனைப் போட்டுவிட்டு சில கைதிகள் தங்களது செல்களுக்குள்ளும் வேறு இடங்களுக்குள்ளும் ஒழிந்துள்ளனர். சிலர் மறு பக்கத்தால் சென்று இவ்வளவையும் உயர நின்று அவதானித்துக் கொண்டிருந்த இராணுவத்தினரிடம் கெஞ்சினர். நிலைமை குறித்து முறையிட்டும் கூட அவர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டே இருந்தனர். இதற்குள் D வார்டின் வடக்குப் பக்கமாகவும், தெற்குப் பக்கமாகவும் வரத்தொடங்கியிருந்தது காடையர் கூட்டம். தம்மிடம் அகப்பட்டவர்களை மிருகத்தனமாகத் தாக்கினர். எல்லோரது கைகளிலும் ஆயுதங்கள் இருந்தன.பொல்லுகள் சிறு சிறு ஆயுதங்களைக் கொண்டு தாக்குதலை நடாத்தினர்.

இந்தச் சம்பவங்கள் ஒன்றரை மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட போதும் சிறையதிகாரிகள், சிறை ஊழியர்கள் எவரும் தடுக்க எந்த முயற்சியையும் எடுத்திருக்கவில்லை. B வார்டுக்குள் நுழைய முடியாதபடி தமிழ் கைதிகள் தமது கேட்டுகளை இறுக்கித் தள்ளி திறக்கமுடியாதபடி செய்திருந்தனர். திறந்திருந்தால் சில வேளை 83ஐயும் விட அதிகமான உயிரிழப்புகள் நேர்ந்திருக்கும் என்கிறார் நேரில் சென்று பார்வையிட்டுத் திரும்பிய "மனித கௌரவத்துக்கான மனற"த்தின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம்.

இத்தாக்குதலில் மூவர் பலியானார்கள். உடுப்பிட்டியைச் சேர்ந்த முத்துலிங்கம் தர்மலிங்கம் (இல.5622), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சண்முகராஜா சிவனேசன் (389), மன்னாரைச் சேர்ந்த எம்.எஸ். ஜிகான் (19344) ஆகியோர் ரத்தம் கசிந்த நிலையில் D வார்டருகில் ஆங்காங்கு இறந்து கிடந்தனர். இவர்களில் ஜிகான் படுகாயமுற்ற நிலையிலும் ஓடிச் சென்று படையினரின் காலில் விழுந்து காப்பாற்றுமாறு கெஞ்சியிருக்கிறார். எந்த அவலக் குரலும் அவர்களின் மரத்துப்போன செவிகளுக்குள் ஏறவில்லை. 17 பேர் படுகாயமுற்றனர். அதில் இருவர் ஆபத்தான நிலையில் பின்னர் ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். கொல்லப்பட்ட மூவரையும் துடித்துடித்துக் கொண்டிருந்த நிலையிலும் நிர்வாணப்படுத்தி ஆணுறுப்புகளை சேதப்படுத்தியிருக்கின்றனர். இறந்த உடலைப் பார்வையிட்டபோது இவர்களில் ஒருவரின் தலை பிளந்து கிடந்திருந்ததை தான் கண்டதாக மகேஸ்வரி வேலாயுதம் எம்மிடம் தெரிவித்தார்.

## இது முதலுமல்ல முடிவுமல்ல

இந்தச் சம்பவம் தற்செயலான ஒன்றல்ல. இது வரலாற்றில் நடந்த முதற் சம்பவமுமல்ல. இறுதியான சம்பவமும் இதுவாகத்தான் இருக்கப் போகிறது என்றும் கூறி விட எந்த உத்தரவாதமும் கிடையாது. காரணம் அதற்கான நம்பிக்கை தரத்தக்க எந்தவித சமிக்ஞையும் இது வரை இல்லை. சிங்கள பௌத்த பேரினவாத கட்டமைப்பு என்பது அவ்வளவு இலகுவான ஒன்றா திடீரென்று எல்லாமே மாறிவிட. அப்படியொரு உலக அதிசயத்துக்காக காத்திருக்குமளவுக்கு தமிழ் மக்கள் இன்னமும் முழுத் தெம்பையும் இழந்தா விட்டார்கள்.

இந்தத் திட்டமிட்ட தாக்குதலை மூடி மறைக்க அரசு மேற்கொண்ட முயற்சிக்கு பேரினவாதமயப்பட்ட தொடர்பு சாதனங்கள் (தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள்) அனைத்துமே பக்கபலமாக செயல் பட்டன. ஏனைய விடயங்களில் அரசைக் கண்டிக்கத் தவறாத இத்தொடர்புசாதனங்கள் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை என்று வந்துவிட்டால் அடக்குமுறையாளர்கள் பக்கமே இருந்து வந்திருப்பதை யார் மறுக்க முடியும்.

தமிழ் பத்திரிகைகள் அனைத்தும் இச்சம்பவத்தைக் குறித்து தமது ஆசிரியர் தலையங்கத்தில் கண்டித்த போக்கையும், "புலிக் கைதிகள் சாப்பாட்டுக்காக சண்டைக்கு வந்தனர்" என்று

## அவசரகால சட்ட நீடிப்பு வாக்கெடுப்புகளின் போது தமிழ் கட்சிகளின் நிலைப்பாடு

(பொ.ஐ.மு பதவிக்கமர்ந்ததிலிருந்து இதுவரை)

| நாள் | ஆதரவு | ஆதரித்த கட்சிகள் | எதிர்ப்பு | எதிர்த்த கட்சிகள் | சமூகமளிக்காதவர்கள் | வாக்களிப்பதில் தவிர்ப்பு |
|---|---|---|---|---|---|---|
| 21-01-1994 | 115 | | 62 | | SLMC | |
| 06-03-1995 | 105 | | 73 | | | |
| 08-06-1995 | 118 | | 78 | | | |
| 07-07-1995 | 122 | | 72 | | | |
| 06-09-1995 | 120 | PA, EPDP, TULF, CWC | 79 | UNPSLPF | | |
| 05-10-1995 | 114 | PA, CWC, DPLF | 76 | UNP, SLPF | TULF-EPDP | |
| 07-11-1995 | 117 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 1 | SLPF | TULF | UNP |
| 11-01-1996 | 108 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 5 | TULF, SLPF | | UNP |
| 06.03.1996 | 104 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 1 | TULF, UNP | | UNP |
| 08.05.1996 | 112 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 79 | UNP, TULF, SLPF | LSSP (BERNARD, ATHAVUDA) | LSSP (Vasu, Betty, Asoka) |
| 09.06.1996 | 115 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 33 | | | |
| 11.07.1996 | 120 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 75 | UNP, NSF, TULF | LSSP கலந்துகொள்ளவில்லை | |
| 08.08.1996 | 118 | " (Athavuda-LSSP) | 88 | UNP, TULF, SLPF | DPLF, LSSP | |
| 08.10.1996 | 117 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 82 | UNP, TULF, SLPF | | DPLF |
| 09.01.1997 | 118 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 84 | UNP,SLPF, TULF | | |
| 06.02.1997 | 118 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 83 | UNP, TULF, SLPF | | |
| 06.03.1997 | 111 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 82 | UNP, TULF, SLPF | | |
| 10.04.1997 | 110 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 81 | UNP, TULF, SLPF | DPLF | |
| 08.05.1997 | 112 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 81 | UNP, SLPF, TULF | | |
| 05.06.1996 | 106 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 77 | TULF, SLPF, UNP | | |
| 10.07.1997 | 117 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 77 | TULF, SLPF, UNP | | |
| 02.08.1997 | 107 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 77 | TULF, SLPF, UNP | | |
| 07.09.1997 | 114 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 75 | TULF. SLPF, UNP | | |
| 09.10.1997 | 113 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 83 | TULF, UNP, SLPF | | |
| 06.11.1997 | 115 | PA, SLMC, EPDP, DPLF, CWC | 83 | UNP, SLPF, TULF | | |


| | | |
|---|---|---|
| EPDP-ஈழ மக்கள் ஜனநாயக கட்சி | PA-பொது ஜன ஐக்கிய முன்னணி | SLMC-ஸ்ரீ லங்கா-முஸ்லிம் காங்கிரஸ் |
| DPLF-ஜனநாயகமக்கள்விடுதலைமுன்னணி | TULF-தமிழா விடுதலைக் கூட்டணி | LSSP-லங்கா சமசமாஜக் கட்சி |
| UNP-ஐக்கிய தேசியக் கட்சி | SLPF-இலங்கை முற்போக்கு முன்னணி | CWC-இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் |

பத்திரிகைச் செய்திகளைக் கொண்டே இந்த இவ்வட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ...றைப் படுகொலைகள்!

ப திசை திருப்பிய
பத்திர...களின்
வேறு ...க்காக
முடியும்? இது இரு
ன் பிரச்சினையாக
முடியும்? அடக்கு-
துணைபோகும்
முறையிலிருந்து
த்துக் கொள்ள
யும் ஒன்றென்றா
?

## ...உயிருக்கு ...வாதம்

...தத் தொடர்ந்து
...லிலிருந்து சகல
...ணாவிரதமிருக்க
...னர். இவ்வுண்ணா-
...து அவர்களின்
...கயாக இருந்தது.

உடனடியாக
...சிறைச்சாலைக்கு

...சம்பவம் குறித்து
...ணையை உடனே
... த ? .
...டவர்களுக்கு
...ங்க வேண்டும்.

...னை பெற்ற
சந்தேகத்தின்
செய்யப்பட்ட
...வக்காதீர்கள்.

...கயில் ஒன்றைப்
... கைதிகளின்
...க தமது உயிர்
...கை பற்றியது
...தக்கது. 13ஆம்
...-கண்துடைப்பு-
...து கூட இவர்கள்
...யைச் சொல்

முன்வரவில்லை. முதலில் தங்களை பாதுகாப்பான சிறைச்சாலைக்கு மாற்றவதற்கூடாக தங்களின் உயிருக்கு உத்தரவாதமளிக்கும்படி கோரியிருந்தனர். (பாவம் ஏமாளி-கள், எந்த சிறைச்சாலைதான் தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் என்று நினைத்தார்களோ) உண்மையில் இச்சம்பவத்துக்கான ஆரம்பமாக இருந்த "விடுதலை செய்! அல்லது விசாரணை செய்!" எனும் கோரிக்கை இன்று "சிறைக்குள் எங்களது உயிருக்கு உத்தரவாதம் தா!" என்ற. கோரிக்-கையில் வந்து நிற்கிறதென்றால் வேறன்னதான் "கோரிப்பெற" முடியும் இங்கு.

## தமிழ் தலைவர்கள்: அரசின் தரகர்கள்?

இந்தத் தமிழ்க் கட்சிகள் குறித்தும் சில விடயங்களை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். சம்பவம் நடந்தது தமிழ் கட்சிகளுக்கு என்னவோ நல்ல காலம் தான். தமது கட்சிகள் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதை வெளிப்படுத்த இதனை நல்ல சந்தர்ப்பமாக ஆக்கிக் கொண்டனர். கட்சிகளு-க்குள்ளேயே அறிக்கையை யார் முதலில் விடுவது? யார் அதிகம் விடுவது? யார் தமிழ் மக்களை கவரச்செய்வது? யார் அரசைப் பாதுகாப்பது? என்று போட்டியோ போட்டி.

13ஆம் திகதியே ஈ.பி.டி.பி., தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் களுத்துறைச் சிறைக்கு விஜயம் செய்திருந்தனர். உண்ணாவிரதிகளிடம் தாம் இது குறித்து நடவடிக்கை எடுப்பதாகவும் உண்ணாவிரதத்தை நிறுத்தும் படியும் கோரினர். ஆனால் கைதிகள் இந்த பூச்சாண்டியை நம்பிவிட-வில்லை. தமிழ் கட்சிகளின் இவ்வகையான உத்தரவாதத்தை இதற்கு முன் காணாதவர்களா அவர்கள். சரிநிகரில் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டங்கள் குறித்து வெளியிடப்பட்டு வந்த கட்டுரைகளில் தொடர்ச்சியாக இக்கட்சிகளின் சந்தர்ப்பவாத-த்தையும் குள்ளநரித்தனத்தையும் அம்பலப்படுத்தியிருக்கிறது. சொல்லப் போனால் பேரினவாதத்-துக்கு உயிர்ப் பலியாவதிலும் பார்க்க இப்படியான உண்ணாவிரத-ங்களின் மூலம் உயிர் போனால் அரசை உலகம் முழுதும் அம்பலப்-படுத்தலாம் போலிருக்கிறது.



மகசீன் சிறைச்சாலை

இதற்கு முன்னரும் இக்கைதிகள் "விசாரணை செய் அல்லது விடுதலை செய்!" என்ற கோரிக்கையை முன் வைத்து போராடிய போதும், அதன் பின்னர் கடந்த வருடம் பெப்ரவரி 19ஆம் திகதியன்று மகசீன் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் சிறை ஊழியர்கள் மற்றும் தண்டனை பெற்ற சிங்களக் கைதிகளால் கொடூரமாகத் தாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து தமிழ் கைதிகள் நடத்திய உண்ணா-விரதப் போராட்டத்தின் போதும் இதே தமிழ் அரசியல் சக்திகள் அப்போராட்டங்களை கைவிடச் செய்ய பாவித்த ஆயுதம் கூட இதே "வாக்குறுதி" தான்.

தொடர்ச்சியாக வாக்குறு-திகளுக்கூடாக கைதிகளின் போராட்டத்தை கைவிடச் செய்வ-தில் உள்ள அக்கறை அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் காட்டாததை அவதானிக்கையில் இவர்கள் அரசாங்கத்தின் தரகர்-களாகவே செயற்பட்டிருப்பார்கள் என்ற முடிவுக்கே வர முடிகிறது. இது வரை தமிழ் இள்ளஞர், யுவதிகள் கண்ட இடத்தில் கைது செய்யப்-படுவதற்கும், திடீரென கடத்தப்-படுவதற்கும், காணாமல் போவ-தற்கும், சித்திரவதை புரியப்படுவ-தற்கும், பாலியல் வல்லுறவு புரியப்படுவதற்கும், மக்களின் மீது குண்டு போடப்படுவதற்கும் சட்ட அங்கீகாரம் வழங்கும் அவசரகால சட்டத்துக்கு ஆதரவாக வாக்களி-ப்பவர்களும் இவர்கள் தானே? (பார்க்க பெட்டி அட்டவணை) இவர்கள் பாதுகாக்க விளைவது அரசாங்கத்தையா? தமிழ் மக்களையா? இவர்கள் அரசின் பிரதிநிதிகளா? மக்களின் பிரதிநிதிகளா? இவர்கள் விடும் முதலைக் கண்ணீரை நம்ப ஏமாளிகள் இருக்கும் வரை இது தொடருமல்லவா?

## விடை தா...

-கொழும்பில் இது வரை கைது செய்யப்படாத தமிழர்கள் எத்தனை பேர் இருக்க முடியும்?

-இன்று இலங்கை முழுவதும் "சந்தேகத்தின் பேரில்" கைது செய்யப்படுவதற்கு தமிழர் என்ற திகதியே போதுமானது அல்லவா?

-கைது செய்யப்படுபவர்கள், உடனடியாக விசாரிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுகின்றனரா?

-பொலிஸ் அதிகாரிகளுக்கு, தரகர்களுக்கு, லஞ்சம் வழங்காது விடுதலையான அப்பாவிகள் எத்தனை பேர்?

-கொழும்பில் தன்னை வெளியில் கொண்டு வர உறவினர்கள் எவரும் இல்லை என்ற ஒரே காரணத்துக்-காக பல மாதங்கள் தடுத்து வைக்கப்படாதவர்கள் எத்தனை பேர் இருக்க முடியும்?

-தமக்குத் தெரியாத சிங்கள மொழியில் எழுதப்பட்ட வாக்குமூல பிரதியில் கையெழுத்திடாதவர்கள் எத்தனை பேர்?

-பல வருடங்களாக வழக்கு நடந்துகொண்டிருக்கும் நிலையில் புலி என ஒத்துக் கொண்டால் வெளியில் வந்து விடலாம் என்ற வழக்கறிஞரின் ஆலோசனையைக் ("அது வரை சிறையில் இருந்த காலம் கழிக்கப்பட்டு மிகுதி காலம் மட்டுமே தண்டனை அனுபவித்து விட்டு உடனே வெளிவரலாம்") கேட்டு புலி என ஒப்புக் கொள்ளாதவர்கள் எத்தனை பேர் இருக்க முடியும்.

-இவ்வாறு புலிகள் என ஒத்துக்கொள்ளச் செய்வதால் பதவியுயர்வு பெற்ற பொலிஸார் எத்தனை பேர்?

- நாடு முழுவதும் உள்ள பல தமிழ் கைதிகளுக்கு (களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள தமிழ் கைதிகள் உட்பட) வழக்கே தொடரப்படாத நிலையில் உள்ளனரே ஏன்? இக்கோரிக்கை இத்தனை வருட காலமாக அலட்சியம் செய்து வருவது எதற்காக?

- 1983 சிறைக்குள் நடந்த 52 பேரின் படுகொலைச் சம்பவம், போன வருடம் பெப்ரவரியில் நடந்த தாக்குதல் சம்பவம், கடந்த மாதம் 27ஆம் திகதியன்று நடந்த தாக்குதல் சம்பவம், இப்போதைய களுத்துறைச் சம்பவம் உட்பட பல்வேறு சம்பவங்களின் போது விசாரணைகள் நடாத்தப்படுவதாக கூறப்பட்ட உத்தரவாதங்கள் என்ன ஆனது? ஏன் (முன்னையவை) அவை விசாரிக்கப்படவில்லை? குற்றவாளி-கள் தண்டிக்கப்படாதது ஏன்?

இவை வேறொன்றுமில்லை. தமிழ் மக்களை இவ்வாறு இம்சித்து அடக்குமுறையைக் கண்டு பீதியுறச் செய்து, அதன் மூலம் தளர்வுறச் செய்து, போராட்டத்தையே வெறுப்புறச் செய்து, அவர்களைச் சரணடையச் செய்து, இறுதியில் போராட்டத்தை கைவிடச் செய்து, அற்ப சலுகைகளை ஏற்கச்செய்யும் நோக்கமே இவை.

எங்கள் சாவையே அவர்கள் தீர்மானிக்கும் போது வாழ்வை மட்டும் விட்டு வைக்கவா போகிறார்கள்?

-ஜென்னி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே..

### பெண் தன்மையுள்ள பையன்கள்:

தகப்பனற்ற குடும்பங்களில் வளர்ந்த அல்லது பெருமளவுக்கு பெண்கள் உள்ள குடும்பத்தில் ஒரே ஆண்குழந்தையாகப் பிறந்த ஆண் குழந்தைகளே பையன்களுக்கான நிபுணத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகளாக இருக்கின்றன.

குடும்பங்களில் அவர்கள் அடையாளங் காணக்கூடிய மாதிரிகள் பெரும்பாலும் ஆண்தன்மையற்றவையாக இருக்கும்போது, பையன்கள் தவிர்க்க முடியாமல் பெண்களின் பாத்திரங்களை உள்வாங்கிக்கொள்கிறார்கள். எம்முடைய சமூக கலாசாரத்தில் பையன்களிடம் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்ற முரட்டுத்தனம் அவர்களிடம் குறைவாக இருக்கலாம். அவர்கள் கடுமையான விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கு கூச்சப்படலாம். அல்லது பிற பையன்களுடன் இயல்பாக பழக முடியாமல் இருக்கலாம். அல்லது பெண்பிள்ளைகளுடன் விளையாடுவதில் பெருமளவுக்கு சௌகரியமாக உணரலாம். இந்தப் பையன்கள் பெரும்பாலும் மற்றைய சிறுவர்களிடமிருந்து முரட்டுத் தனமான பராமரிப்பையே எதிர்கொள்வர். அவர்கள் பட்டப்பெயர்களால் பழிக்கப்படுவர், தாக்கப்படுவர், தவறான வழியில் பயன்படுத்தப்படுவர். அவர்கள் சமூகத்தால் களங்கப்படுத்தப்பட்டவர்களாக, உணர்வுரீதியாக காயப்படுத்தப்பட்டவர்களாக, எதிர்காலத்தில் பூரணத்துவமற்ற பெரியவர்களாக வளர்பவர்களாக இருக்கின்றனர்.

இத்தகைய குழந்தைகட்கு நிபுணத்துவ உதவி தேவைப்படுகிறது. அது அவர்களுக்கு சரியான அடையாள மாதிரிகளை இனங்கண்டு கொள்ள உதவுகிறது. அத்துடன் உறுதித்தன்மையை ஊக்குவிக்கவும், அவர்களது ஆளுமையில் ஆண்தன்மையை விருத்திசெய்யவும் அது உதவுகிறது.

### இழுப்பு வலியும் இயற்கைக்கு மாறான நடத்தையும்

சில சிறுவர்கள் பெற்றோருககு எரிச்சலூட்டக்கூடிய செயற்கையான செயல்களை தொடர்ச்சியாகச் செய்வார்கள். அவர்கள் ஓரக் கண்ணால் பார்ப்பார்கள், மூக்கை உறிஞ்சுவார்கள், திடீரென தசைகளை இழுத்துக்கொள்வார்கள், முகத்தைச் சுளிப்பார்கள், நகத்தைக் கடிப்பார்கள், செருமுவார்கள், கண்களைக் கசக்குவார்கள், மூக்கைத் தோண்டுவார்கள், அல்லது விரலைச் சூப்புவார்கள்... அல்லது இதுபோன்ற நடத்தைகளில் ஈடுபடுவார்கள். இத்தகைய செயல்பாடுகளும் நடத்தைகளும் தம்மை மற்றவர்கள் கவனிக்க வேண்டும் என்பதற்காக செய்பவையாக இருக்கலாம். விரல்கள் ஒழுங்கற்றும், தோல்கள் எப்போதும் ஈரமாயும் நகங்கள் அடிவரைக்கும் கடிக்கப்பட்டும் அவர்கள் தோன்றுவர். அவர்களது நகம் கடிப்போ, மூக்குறிஞ்சலோ, செருமுதலோ ஒரு போதும் முடிவற்றதாக இருக்கும். இந்தச் சிறுவர்களுக்கு உளவியல் கலந்தாலோசனையும், வைத்திய கவனிப்பும் அவசியம். அவர்களுக்குரிய சிகிச்சைக்கு இது அவசியமாகும்.

சாதாரண சிறுவர்கள் இது போன்ற செயல்களைச் செய்தபோதும் அவை அவர்களிடம் தொடர்ச்சியாக இருப்பதில்லை. அவர்கள் தூக்கம்வரும் போதும், உணர்வுரீதியாக ஏதாவது தாக்கத்துக்குள்ளாகி இருக்கும் போதும் அல்லது அதிகமாகக் களைத்துப்போயிருக்கும் போதுமே இதைச் செய்வார்கள்.

### உடுப்புடன் (கட்டுப்பாடின்றி) சலங்கழிதலும்மலங்கழிதலும்

நான்கு வயதுக்குப்பிறகும், 10 முதல் 15 வீதமான குழந்தைகள் படுக்கையில் சலங்கழிக்கின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களிற் சிலர் பகல் நேரத்திலும் இவ்வாறு செய்கின்றனர். இவர்களில் பெரும்பாலோருக்கு சலப்பையினைக் கட்டுப்படுத்தும் பழக்கம் இல்லாமல் இருந்திருக்கிறது. ஒரு சிலர் உடுப்பை மாற்றுவதே திரும்பவும் நனைக்கத்தான் என்பதுபோல் நடந்து கொள்வார்கள்.

சலங்கழிதல் பொதுவாக உணர்ச்சி சம்பந்தமான சிக்கலின் வெளிப்படையாக கொள்ளப்படுகிறது. ஐந்து வீதமான சிறுவர்களே சேதன காரணங்களுக்காக இவ்வாறு நடந்து கொள்கிறார்கள். இதுவல்ல என்பதை உறுதிசெய்து கொள்ள ஒரு வைத்தியரை நாட முடியும்.

சலங்கழிப்பதில் மட்டுமே குழந்தையின் உணர்ச்சி சார்ந்த சிக்கல் எவ்வளவு மட்டத்திலுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளப் போதுமானதல்ல. சாதாரணமான சிக்கலின்போதும், பாரதூரமான சிக்கல்களின் போதும் இவ்வாறு நடந்திருக்கிறதை நாம் காணலாம். சிலவேளைகளின் போதும் இது சாதாரண உளவியல் மருத்துவம் மூலமே குணமாகிவிடும். சிலவேளைகளில் இதை நிறுத்துவதே கடினமாக இருக்கும்.


மலம்கழித்தலைப் பொருத்தவரை மூன்றுவயதுக்கும் பிறகு இது தொடருமாயின், வேறு சேதன காரணங்கள் எதுவும் இல்லையென ஒரு வைத்தியர் சொல்வாராயின், அது அனேகமான உணர்ச்சிச் சிக்கல்களின் வெளிப்பாடாகவே கொள்ளப்படும். ஆரம்பப் பள்ளி மாணவர்களிடையே இது பொதுவாகக் காணப்படலாம். ஆனால் இது பாடசாலை மாணவர்களிடமும் வளர்ந்த சிறுவர்களிடமும் காணப்படலாம். குழந்தைகளின் வயது கூடக் கூட பிரச்சினை சிக்கல் தரக் கூடியதாக அமைகிறது. பொதுவாக பெற்றோருடைய அதிகாரத்துவத்தின் காரணமாகவும், குறிப்பாக கண்டிப்பாக மலம் கழிக்கும் பழக்கவழக்கம் போதிக்கப்படுவதன் காரணமாகவும் ஏற்படும் எதிர்ப்புணர்வின் ஒரு வெளிப்பாடாகவே இந்த மலம் கழியும் பழக்கம் கொள்ளப்படுகிறது. எனவே குழந்தையைப் பழித்தலோ, ஏசுதலோ நல்லதல்ல. இவை மேலும் அதிகமான முரண்பாடுகளையும் இறுக்கமான எதிர்ப்புக்களையுமே ஏற்படுத்தும்.

கட்டுப்பாடற்ற மலங்கழிதலும், சலங்கழிதலும் மிகச்சாதாரண சிக்கல்களின் வெளிப்பாடாக இருந்தாலும் கூட நிபுணத்துவ உதவியை நாடுவது பயனுள்ளதாகும். எவ்வாறாயினும் குழந்தைக்கும், பெற்றோருக்கும் இடையிலான நல்லுறவு முக்கியமானதாகும். இது இப்பிரச்சினைகளை தீர்ப்பதில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்கும்.

**அடுத்த இதழில்:**
**நிபுணத்துவ உதவி தேவைப்படும் பெற்றோர்கள்**

## உங்கள் குழந்தைகள் படுக்கையில் சலம் கழிக்கின்றனவா ?



## 'வீசிதெல' (மீன்வலை): சில குறிப்புகள்

சோமா எதிரிசிங்ஹவின் தயாரிப்பில் வெளிவந்துள்ள 'வீசிதெல' எனும் படம் தற்போது ஓடிக்கொண்டிருக்கும் சிங்களப்படங்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஓரளவு நல்ல படமாகும். தற்போதைய சிங்களப்படங்களில் நல்லதாகக் கணிக்கக்கூடிய படங்கள் 'வயதுவந்தோருக்கான அடையாளத்தோடே வருகிறது. இது கதையுடன் ஒன்றிட விரசமின்றி எடுக்கப்பட்டாலும் இவ்வாறுதான் எடுக்கப்படவேண்டும் என்ற ஒரு போட்டித்தன்மையும் இருப்பதாகப் படுகிறது. ஏனெனில் முற்றிலும் வியாபாரத்தனமான படங்கள் 'ஏ' முத்திரையுடன் (போதாததற்கு ஆங்கிலப்படங்களும்) இரசிகர்களைப் பிடித்து வைத்திருக்கிறது. இவர்களை நகர்த்த வேண்டுமானால் இவ்வாறுதான் எடுக்கவேண்டுமோ தெரியாது.

இந்தத்தொடரில் 'வீசிதெல' (மீன்வலை) எனும் படத்தை அவதானிக்கலாம். கதை மிகவும் பின்தங்கிய ஒரு கிராமத்தில் நிகழ்கிறது. மீன்பிடிகாரனும் அவனது மனைவியுமான ஒரு சிறு குடும்பமும், அருகே தந்தை, மகன், மகள் என்றதான விவசாயக்குடும்பமும் இருக்கின்றன. தந்தை பெரும் குடிகாரன். மகன் பட்டணத்தில் ஏதாவது தொழில் செய்ய விருப்பம் கொண்டவன். மகள் படித்து விட்டு தோட்ட வேலைகளிலும், சமையலிலும் ஈடுபடுபவள். இவர்களுக்கு அடுத்தவீட்டுக்காரனான, இவளுக்கு மாமா முறையான மீன்பிடிகாரன் தன் கண்வலையை இவள் மீது வீசுகிறான். இதற்கு அவளின் குடும்பநிலைமைகளைப் பயன்படுத்துகிறான். இதற்கிடையில் புரட்சிகர இயக்கங்களில் (ஜே.வி.பி) கிராம இளைஞர்களது ஈடுபாடும், அவர்களில் ஒருவனுடனான மகளான கதாநாயகியின் காதலும் காட்டப்படுகிறது. நலிந்த, இயலாமையற்றவர்களாக இவ்வியக்கத்தவர்கள் குறியீடாகக் காட்டப்படுவது அவதானிக்கத்தக்கது. (பின்னர் இவர்கள் 'டயர்'களில் எரிகிறார்கள்) ஒரு பொலிஸ் பொறுப்பதிகாரியின் தனிப்பட்ட அழைப்பின் பேரில் 'பொலிசாகும் கனவுகளுடன் நகரத்திற்கு புறப்படும் மகன் (ஜக்ஸன் அந்தனி) வீட்டு எடுபிடியாளாகி பின்னர் 'புரட்சியை' அடக்கத் தேவைப்படும் தவிர்க்க முடியாத ஊர்க்காவல், படைவீரனாகிறான் கதாநாயகி மீதான தன்மோகத்திற்கு ஓர் தடையாக இருந்த அவளது அண்ணனும் தூரமாகிறான். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவளைத் தன் வலைக்குள் வீழ்த்துகிறான் மீன்பிடிகாரன் (டபிள்யூ. ஜயசிறி). இதற்கு வேறு சிலரும் உதவுகிறார்கள். அவனின் வலையில் விழுந்த அவள் வெளியேற முடியாமலும், வெளியே எடுக்க யாருமில்லாததாலும் (அப்பாவுக்கு, தன் மகளின் காதலன் உட்பட பலர் நெருப்பில் எரிவதைக் கண்டு பிரமை பிடிக்கிறது) அந்த வலைக்குள்ளேயே கிடக்கிறாள். மீன்பிடிகாரனின் மனைவிக்கு விஷயம் தெரிந்து பிரச்சினையாகி அவளையும் விரட்டுகிறான். அவள் போய் மகனிடம் (கதாநாயகியின் அண்ணன்) கூறுகிறான். அவன் சம்பந்தப்பட்டவர்களைப் பழிவாங்குகிறான். பொலிஸ் அவ்னை கைது செய்கின்றது.

படத்தை ஆரம்பத்தில் எப்படி எப்படியோ நல்லதனமாக நகர்த்தி முடிவை வெறும் குப்பைத்தனமாக்கியிருக்கிறார்கள். (தாயைக் கெடுத்தவன், தங்கையைக் கெடுத்தவனை கதாநாயகர்கள் பழிவாங்குவது காலாகாலமாக பார்த்ததே) எதிர்பாராத திருப்பமாயும், ஏமாற்றமாயும் முடிவு இருக்கிறது.

எடுத்துக்கொண்ட விடயமும், அதைச்சொல்ல வந்த ஆரம்ப விதமும் அதற்கூடாக சொல்ல வந்த விடயங்களும் நன்றாகவே இருக்கின்றன என்றாலும் திருப்தி கிடைக்காத ஏமாற்றம்.

இதில் வருகிற இந்த இளம் பெண் தன் வயதான மாமாவினால் வல்லுறவாக்கப்படுவது போன்ற சம்பவங்கள் அண்மைக்காலமாக இலங்கையில் அதிகரித்து வருவதாக பெண்கள் பற்றிய கணிப்பீடு கூறுகிறது. அதிலும் 18 வயதுக்குட்பட்ட 'மைனர்'களை தந்தையுட்பட உறவினர்கள் பலர் வல்லுறவுக்குட்ப்டுத்திய சம்பவங்கள் நிறையவே நடக்கின்றன. (இதுபற்றிய அட்டவணை ரீதியான தரவுகளுக்கு வாசிக்க: 'பெண் உரிமைகளின் கண்காணிப்பு' 12, 1/1அஸ்கொட் அவனியூ, கொழும்பு -05)

இந்த அடிப்படையில் இப்படம் சமகாலப்பெண்கள் பிரச்சினையொன்றை கருவாகக்கொண்டிருப்பது விஷேடமானதாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### அ.செ.மு. பற்றிய நினைவுக் குறிப்புகள்

# காலம் ஆகி வந்த கதை

அ.இரவி

பஞ்சம் பாடாய்ப் படுத்திக்கொண்டிருந்த காலம் ஒன்று வந்தது. துரை ராசண்ணை கடைக்கு ஓடுவோம். விடிய ஆறு மணிக்குப்போனால் ஏழு மணிக்கிடையில் பாண் வரும். சில வேளை கிடைக்கும்; கிடையாமலும் போகும். கிடையாமல் போனால் பொன்னையாண்ணையின் தோட்டத்திற்குப் போக வேணும். மரவள்ளிக் கிழங்கு புடுங்கித் தருவார். செம்பாட்டுச் சேறு காலில் அப்ப காத்து நின்று மரவள்ளிக் கிழங்கு வாங்கிச் செல்வோம்.

கால் கழுவிக் கிழங்கு அவித்து பள்ளிக்கூடம் போக நேரம் போய் விடும். ஓட்டம்!

அம்மா அரிசி மா தேடித்திரிந்து விட்டு இருந்திருந்து புட்டு அவிப்பா. அம்மா செய்கிற பிழை இது தான். ருசியாகக் கறிகளை வைத்து விடுவா சொல்லப் போனால் மீன் குழம்பு. ராசலிங்கத்திடம் வாங்கிய மீனில் குழம்பு, புட்டுக்கு விட்டுச் சாப்பிட்டால் சோக்காய் இருக்கும். கோப்பையில் அள்ளி அள்ளிப் புட்டுப் போட்டுச் சாப்பிட ஆசை. ஆனால் மற்றவர்களும் சாப்பிட வேண்டும். அம்மா ருசியா குழம்பு வைக்காமல் விட்டிருக்கலாம்.

ஒரு சனிக்கிழமை: நன்கு முதிர்ந்து கனிந்த கப்பல் வாழைப்பழங்கள் கிடைத்தன. அம்மா அரிசிப்புட்டு அவிச்சா, அம்மம்மா புட்டுவுடன் வாழைப்பழத்தைப் பினைஞ்சு சாப்பிட்டா. பல்லில்லாத பொக்கை வாய்க்கு அது பதமாக இருந்தது. அம்மம்மா ''பிள்ளை இன்னும் கொஞ்சம் புட்டுத் தருவியே'' என்று இரங்கி அம்மாவிடம் கேட்டா. இப்படிக் கேட்ட போது அம்மம்மாவின் முகத்தைப் பார்க்க எனக்கு முடியவில்லை. அம்மம்மாவின் முகத்தைப் பார்க்கவும் முடியவில்லை. இப்போ நினைக்கிற போது கண் கலங்குகின்றேன். அவை பஞ்சப்பட்ட தினங்கள்.

***

1974ம் ஆண்டின் விடியலில் பனி பெய்ந்து குளிரெடுத்து மத்தியானம் வெய்யில் காங்கைகளை வீசிக் கொண்டிருந்த முற்பகுதிக்காலம். இந்த நாட்களில் சங்கக் கடையின் வாசலில் பாணுக்கு நீண்ட கியூ நின்றது. நீண்ட கியூ என்றால் சங்கக் கடையில் இருந்து அம்மாள் கோயில் வரை நீண்டிருக்கும். கிழமையில் இரண்டு தரம் இப்படி நிற்போம்.

எனக்கு முன்னால் ஒருவர் நிற்பார். அல்லது எனக்குப் பின்னால் அவர் நிற்பார். அவரது கொட்டிலும், சங்கக் கடைக்கும் அம்மாள்கோயிலுக்கும் இடையில் இருந்தது. அவரும் அவரது அம்மாவும் அதில் இருந்தனர். அது எனக்குத்தெரியும். அவர் ஒற்றை வேட்டியுடன் நிற்பார். ஒழுங்கான வேட்டி அல்ல. அளவெட்டிக்குரிய செம்பாட்டு ஊத்தை வேட்டி. சேட் இல்லை. ஊரும், வயிறும் வெக்கையில் எரிகிற போது சேட் எதற்கு? சாடையாகக் கூனியபடி நிற்பார், வயிறு எக்கி இருக்கும். என் பிடரியில் அவர் மூச்சுப் படுகிற போது, அவர் வாயிலிருந்து மெல்லியமணம் வீசும். எனக்குப் பிடித்த மணம். வெத்திலை பாக்குச் சப்பிய வாயிலிருந்து வீசுகிற மணம் அது. ஓடிப்போய் வீட்டில் ஒரு வாய் வெத்திலை போட வேண்டும் என்று ஆசை எழும். வெத்திலை பாக்கும், மரக்கறிகளும் மாத்திரம் தான் கூப்பனில்லாமல் எடுக்கலாம். எங்கள் தோட்டங்களில் விளைஞ்ச செத்தல் மிளகாய்க்கும் கூப்பன் இருந்தது.

கூப்பனில்லாமல் இருந்த இன்னொன்று பசி! பசி வயிற்றில் நெருப்பாக எரிந்தது. அப்படித்தான், ஒற்றை வேட்டிகட்டி, ஒல்லியான அவரும நின்றார். என்னுடனும் அவருடனும் நீண்ட கியூவில் கொஞ்சம் முந்தியே வந்த படியால், முன்னால் நின்று பாண் வாங்கிப் போன ராசம்மாக்காவின் பாணை சைக்கிளில் சென்ற ஒருவன் பறித்துக் கொண்டோடினான். ராசம்மாக்கா றோட்டின் கரையிலிருந்த மண் அள்ளித் திட்டினார். பிறகு பசித்ததோ, இரவைக்கு இன்ன சாப்பாடு என்று யோசித்தாரோ அல்லது மத்தியானமும் சாப்பிடவில்லைத் தானோ என்னமோ றோட்டின் கரையில் குந்தியிருந்து ராசம்மாக்கா அழுதார். நான் அறிய பின்னேரத்துப் புழுதி கலந்த வெயிலுக்கு அவா இருந்து அழுதது சோகத்தைச் சொன்ன ஓவியமாக இருந்தது.

யாவற்றையும் குறிக்க வேண்டிய காலம் வந்து விட்டது. இதை இப்போது நான் குறிக்கின்றேன். ஆனால் எனக்கு முன்னால் நின்றவர் (அல்லது பின்னுக்கு நின்றவர்) இதை எழுதக் கூடிய வல்லமை பெற்றிருந்தார். அது அப்போது எனக்குத் தெரியாது. ஆனால் இப்போ தெரியும். அவரால் எழுதியிருக்க முடியும். 'காளிமுத்துவின் பிரஜா உரிமை' அல்லது 'புகையில் தெரிந்த முகம்' எழுதத் தெரிந்த அவரால் இதனை எழுத முடிந்திருக்கும். ஆனால் எழுதவில்லை. அதனை அவர் எங்கும் எழுதினதாகவும் ஞாபகமில்லை.

***

## இன்றைக்கல்ல, இறந்தபோதல்ல, அன்றைக்கே 1980களிலேயே அவர் பேனாவுக்கு ஓய்வு

அந்த ஒற்றை வேட்டிய கட்டிய ஒல்லியான வயிறு, எக்கிய சாடையான கூன் விழுந்த அந்த ஆள் ஆரென்று எனக்குப் பிறகு தெரிந்தது.

அது தெரிய ஐந்து வருடங்கள் ஆயிற்று. எங்களது மகாஜனக் கல்லூரியில் நடைபெற்ற சிறுகதைப் போட்டியில் எனது 'அபத்தம்' சிறுகதை முதலாமிடம் பெற்றது. நடராஜா மாஸ்ரர் (மயிலங்கூடலூர் பி.நடராசன்) ''உங்கன்ரை கதையைச் செலக்ற் பண்ணினவர். உங்களைச் சந்திக்க வேணுமெண்டு விரும்பிறார்'' என்றார். நான் போய்ச் சந்தித்தேன்.

அவர் பாணுக்குக் கியூவில் என் பிடரியில் மூச்சுப்பட நின்றவர். அடக் கடவுளே, அவரா இவர்? வெத்திலை பாக்குச் சப்பிய வாயுடன் மணத்துடன் நின்ற அவரா இவர்? என்னால் அப்போது அதனை நம்ப முடியவில்லை. அளவெட்டி அப்போது இந்தக் கலைஞனை மதிக்காமலிருந்தது. அது தான் எனக்கும் அவரைத் தெரியாமலிருந்தது.

***

அவர் எனது கதையைப் பற்றிச் சொன்னார். ''நல்ல கதை. இந்த நடைதான்... ஒரு... 'பிறிஸ்ஸா' நடை உமக்கு வருது'' என்றார்/ எனக்குப் பிறிஸ்ஸா' எழுத்து நடை எப்படி இருக்கும் என்று தெரியவில்லை. ''எனக்கு விளங்கேல்லை'' என்றேன்.

'ஒழுங்கான நடை இல்லை. விசயத்தைச் சொல்ல வந்து அங்கை இங்கையெண்டு நடை பாயுது'' என்றார். எனக்கு 'பிறிஸ்ஸா' என்ற சொல்லைப் பிடித்துப் போயிற்று.
ஆனால் வாழ்க்கை அப்படி ஆகிப் போவது யாருக்குத்தான் பிடிக்கும்/ அவரது வாழ்க்கை அப்படித்தான் ஆனது 'பிறிஸ்ஸா' வாகிப்போனது.

அவர் 'ஈழநாடு' பத்திரிகையில் வேலை செய்திருந்தார். நான் சந்தித்த போதில் வேலையை விட்டு விட்டார். விட்டுவிட்டதற்கான காரணத்தைச் சொன்னார். இழுப்பு நோய் அவரை வீட்டில் இருக்க வைத்து விட்டது: ஓடிப்போய் பஸ் ஏற ஊர்ப்புழுதி விடுவதில்லை. இழுப்பு இன்னும் அதிகமாகும்.

பகல் பதினொரு மணிக்கு வீட்டின் முன்னால் இருந்த வாசிகசாலையில் அவர் பத்திரிகை வாசிக்கக் காணலாம்.

அவரை 'அவர் தான்' என்று தெரிந்த காலத்தில் பாணுக்குக் கியூ இல்லாமல் போய் விட்டது. அவரை மூன்று இடத்தில் நான் கண்டேன். வாசிகசாலையில் கண்டேன்; முன்னாலிருந்த மணியண்ணை கடையில் கண்டேன். அவரின் கொட்டிலில் நான் அவரைக் கண்டேன்.

ஏதோ விருப்பம் உந்தி அவரது கொட்டிலுக்குப் போகும் சந்தர்ப்பங்களில் அவரது வாழ்வை நான் கண்டேன். அது எளிமையானதாகவும், இனிமையானதாகவும் இருந்தது. அப்படித் தான் நான் நினைத்தேன். சின்னச் சின்னக் கிண்ணங்களில் கறிகள் இருந்தன. கிண்ணங்கள் ஒன்றிரண்டு தான் இருக்கும். சில வேளை அக்கிண்ணமொன்றில் சம்பல் இருக்கும். அக்கொட்டிலில் மச்சம் மணத்ததாக நான் அறியேன். சிறு பானையில் வெள்ளைப் பச்சை அல்லது குத்தும் பச்சை அரிசியில் சோறு. அது புக்கை வடிவில் இருந்த ஞாபகம். இருவருக்கான உணவு. இவை எனக்கு எளிமையாகவும், இனிமையாகவும் இருந்தன. குரூரம் இருந்ததோ அதுவும் அப்போது எனக்குத் தெரியாது.

ஆனால் அவரது 'மனிதமாடு' சிறுகதைத் தொகுப்பு வெளிவந்த போது இந்த வாழ்வின் குரூங்கள் அவர் எழுத்தில் தென்படவில்லை. அது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அழகை யாசிக்கின்ற கலைஞனாகத் தான் அக்கதைகளில் அவரை நான் தரிசித்ததாக இப்போது எனக்கு ஞாபகம். அத்தொகுப்பு இப்போது என்கையில் இல்லாததால் இதனை நான் உறுதியாகக் கூற முடியவில்லை.

***

'பிறிஸ்ஸா'வாகிப்போனது அவரது படைப்புகளும் தான். அவரது கதைகளை வாசிக்க நான் ஆவல்பட்டேன். கேட்டேன். அவர் 'ட்ரங்குப்பெட்டி'யைத் திறந்து காட்டினார். 'புகையில் தெரிந்த முகம்' தொடர்கதையில் சில துண்டுகள் மாத்திரம் தான் இருந்தன. (இதனை எழுதுகின்ற போது என்னையிட்டு நான் என்னுள் சிரிக்கின்றேன்) பல கதைகள் தொலைந்து போய் விட்டன என்று கவலையோடு அவர் சொல்லவில்லை. அது அப்படித்தான் நடக்கும் என்ற தொனிதான். அவரது குரலில் இருந்தது. அவர் 'ட்ரங்குப் பெட்டி'க்குள் இருந்தனவெல்லாம் முற்றுப்பெறாத அவரது முழுமை பெறாத வாழ்வைக் குறித்தது. அவரது வாழ்வு ஒழுங்காக இல்லை. 'பிறிஸ்ஸா' வாகித்தான் இருந்தது.

நாங்கள் நால்வர் 'புதுசு' தொடங்கிய போது அவரிடம் எழுதப்பட்டிருந்த ஒரு கதை கேட்டோம். ''ஒன்றுமேயில்லை'' என்று சாதாரணக் குரலில் கூறினார். எப்போதோ 'ஈழநாடு' பத்திரிகையில் தொடராக எழுதியிருந்த 'பசுந்தளிர்' எனும் தொடர் வெளியீட்டிலிருந்து இது வரை தொலைக்கப்படாதிருந்த தப்பிப் பிழைத்த ஒரு துண்டை எடுத்துத் தந்தார். 'புதுசு' முதலாவது இதழில் 'முதன்மைச்சங்கு முழக்கி வெளிவரும் அரிதான ஒரு சிறுகதையாக நன்றியுடன், அதனைப் பிரசுரித்திருந்தோம். இறுதியாக இன்றைக்கெல்லாம் அவர் பேனாவுக்கு ஓய்வு என்று எழுதியிருந்த வரிகளை கும்பிழாவளைப் பிள்ளையார் கோயில் காலை 10 மணி பூசையில் மணியொலி கேட்கிற போது அளவெட்டி ஜெயா அச்சகத்தில் புரூப்பார்த்த நினைவு எல்லிப்போலை வளவின் அணிஞ்சில் பழம் போல் இனித்து, நெஞ்சில் எழுகிறது.

***

அம்மாவுடன் கதைக்கின்ற போது இவர் பற்றிய என் ஆச்சரியங்களை ஒரு நாள் கூறினேன். அப்பா இன்னொரு கதையைக் கூறி என்னை மேலும் ஆச்சரியத்திற்குட்படுத்தினார். அவரது முதல் எழுத்துக்களை விரித்துக் கூறச் சொன்னார். முருகானந்தம் என்ற பெயர் மட்டும் தான் எனக்குத் தெரிந்தது. அளவெட்டி செல்லக்கண்ணு முருகானந்தம் என்றார். இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது. அப்பாவே சொன்னார். செல்லண்ணு என்றது முருகானந்தன்ரை அம்மாவின் பெயர். எனக்கு இப்போதுதான் ஆச்சரியம் தொற்றிக் கொண்டது. தாயாருடைய பெயரை தன் முதல் எழுத்தாகக் கொள்ள வேண்டிய அக்காலத்தைய ஒரு சமூக யதார்த்தத்தை-அப்பா சொன்னார். நான் ஆச்சரியப் பட்டேன். நான் கண்டு கேட்டிராத உண்மை அப்போது எனக்கு உறைத்தது.

***

இப்போது அவரின் படைப்புக்களை முழுமையாக பார்த்துக் கொள்ள எனக்கு ஆசை. அவர் இந்த உலகிற்கும் தனது பெயரிற்கும் விட்டுச் சென்றுள்ள சொத்து அவை தான். அவற்றில் தான் அவர் வாழ்வு குறிக்கப்பட்டிருக்கிறது.


மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினது பாரிஸ் கிளையினர் அவரது தொகுப்பொன்றினை வெளியிடுவதற்காக கொழும்பில் உள்ள பத்திரிகையாளரும், நாடகக் காரருமான ஒருவரிடம் காசு அனுப்பியிருந்தார்கள் என்று கேள்விப்படுகிறேன். அவரது படைப்புகள் தொகுப்பாக வெளி வரும் தானே.அக்காசிற்கு என்ன நடந்ததோ ஒன்றுமே தெரியாது. வந்தால் துயரிலும் ஒரு மகிழ்வு.

***

இன்றைக்கல்ல; இறந்தபோதல்ல; அன்றைக்கே 1980களிலேயே அவர் பேனாவுக்கு ஓய்வு. கவலை இவை தாம். தொய்வு நோயால் வருந்தி, வறுமையால் நலிந்து இலங்கையின் தமிழ் மக்கள் அல்லாடிய நேரத்தில் அல்லல்பட்டு கைதடி வயோதிபர் மடத்தில் தன் இறுதிக் காலத்தைக் கழித்து அங்கேயே அவர் காலமாகிப் போன செய்தி நெஞ்சையும் நம் வாழ்வையும் துயராய் கசியச் செய்கின்றது.

இலங்கை தமிழ் இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் காலத்தை உருவாக்கியவர்; புதுமைப்பித்தர்கள் சங்கத்தைத் தோற்றியவர். அந்தக் காலத்தில் தமிழ் இலக்கியத்தில் பெரும் சக்தியாக உருவெடுத்தவர் வரலாற்றில் இன்னொருவராக கரைந்து போனார். இறப்பிலும் பார்க்க அவர் வாழ்வில் பட்ட இன்னல்கள் தாம் இன்னும் கவலையைத் தருகின்றது.

மகாஜனவின் மும்மணியென விதந்துரைக்கப்பட்டவர்களில் (மஹாகவி அ.ந. கந்தசாமி, அ.செ. முருகானந்தம்) மூன்றாவது மணியும் கழன்று விட்ட கவலையையே நான் சொன்னேன்.



### இன்று நான்

இன்று கடலலைகள்
நேற்றுப் போல்குதூகலமாய் இல்லை
இதே மாலை நேரம்
இதே காற்றுத்தான் வீசியது
நிலவும் ஏன் குந்தியிருக்கிறது
அதே சீருடையில்.

வெறித்தேன் ஒரு வெறும் புன்னகை
எப்போதோ தைத்திருந்த
கொப்புளம் பழுத்துச் சீழ் வடிந்து
வலிக்கிறது
எப்போதோ இங்கு
அரைகுறையாய் எரிந்து
அனாதையாய்க் கிடந்த
நண்பன் ஒருவனின் பிணத்தை
காகங்கள் கொத்தித் தின்கின்றன.

இன்று மட்டும் ஏன் இக் கடலலைகள்
குதூகலமாய் இல்லை.

எப்போதும் இல்லை எதுவும் ஒரே விதமாய்
எனக்கென ஒரு கடலும் அலைகளும்
உனக்கென ஒரு கடலும் அலைகளும்
எவ்வித சமாதான அழைப்புகளையும்
விடுத்து,
ஒன்றையொன்று விரோதிக்கின்றன
எனக்கொரு வெயிலும் நிழலும்
உனக்கொரு நிழலும் வெயிலும்.

மரங்களை விடுத்து
இலைகளை விடுத்து
குலுங்கிச் சிரித்துச் செல்கிறது காற்று
ஒரு புளகாங்கிதத்துடன்,
என்னையும் எனது பார்வையையும்
அப்படியே தனித்து விடுத்து:
அக் கடலுடனும் அலைகளுடனும்
இன்று நான்...

கல்வாரன்

www.tamilarangam.net



# மூக்கணாங்கயிறும் கோணல் மொச்சைகளும்....

வி. கௌரிபாலன்

நான்கு மூலைக் காத்தாடியை பெருமையாக பார்த்து நின்றான். அது அவனுடைய சொந்தப்படைப்பு. பல வர்ண கடதாசிகளை முக்கோண வடிவில் சிறிய சிறிய துண்டுகளாக வெட்டி ஒட்டி இருந்தான். ஒன்றுடன் ஒன்று சரியாகப் பொருந்தாத முக்கோணங்களுக்கிடையே கீழே ஒட்டப்பட்ட வெள்ளைக் கடதாசி வெளித்தெரிந்தது. அதுவும் ஏதோ ஒரு வகையில் அழகாகவே அவனுக்குப்பட்டது. எந்தப்பிரச்சினையும் கொடுக்காமல் காத்தாடி பறக்க வேண்டும் என்று கவலைப்பட்டான். மேல் மொச்சை, வால் மொச்சை கட்டி காற்றில் பறக்கவிட்டான். மேல் எழுந்த காத்தாடி வலது பக்கம் தலையை சாய்த்து... சாய்த்து.. மரங்களில் சிக்கப் பார்த்தது. மேல் மொச்சை சரி பார்த்தான். சரியாக இருந்தும் வலது பக்கம் தலை சாய்த்தது. மேல் மொச்சையை கோணல் ஆக்கினான். பறக்க மறுத்தது. வால் மொச்சையை கோணல் ஆக்கினான். அதிகமாக வலது பக்கம் சாய்ந்தது. காத்தாடி பறக்காமல் விட்டு விடுமோ.. என்ற கவலையில் அவன் சோர்வானான்...

✱

புஸ்... புஸ்... சளியா எச்சிலா... வேர்வைத் துளியா... அல்லது எல்லாம் சேர்ந்த ஒன்றா... மூக்கணாங்கயிற்று இடைவெளியில் குமிழியாக வெடித்துச் சிதறியது. இழுக்க முடியாமல் இழுத்து வந்த சுமையினால் எருது களைத்துப் போய் இருந்தது. சுண்டிப்பிடித்த மூக்கணாங் கயிற்றுக்கு ஏதுவாக தலை நிமிர்த்தி மூச்சு வாங்கியது. முழிகள் இரண்டும் தெறித்து விடும் போல் மின்னின. திடீரென்று இமைகள் செருகத் தொடங்கின. முன்னங்கால்கள் உறுதியற்று தடுமாறின. நிலை தளர்ந்து எருது தலை குத்தி கீழே விழுந்தது. தொடர்ந்து வண்டிக்காரன் எருதின் மீது விழுந்தான். அவன் மேல் பார மூட்டைகள் வீழ்ந்தன. அவன் மூச்சுத்திணறிச் செத்துப் போனான். பரமேஸ்வரன் கண்ணை மூடி பார்வையைத் திருப்பினான். வேகமாக தெரு தாண்டி பாடசாலை வளாகத்துக்குள் போனான். கண்ணை மூடி நின்றான். புஸ்.. புஸ்.. எருதின் மூக்கில் குமிழி வெடித்தது. திரும்பிப் பார்த்தான். வண்டி தெருவில் பயணப்பட்டுக்கொண்டிருந்தது.

கடற்கரைச் சூழலுடன் ஒன்றிப்போன அந்த பாடசாலை எடுத்த எடுப்பிலேயே பரமேஸ்வரனை அச்சுறுத்தியது. வேர்த்து விறுவிறுத்துப் போனவன் நேராக கடற்கரையில் போய் நின்றான். இந்தோனேசியாவின் சுமாத்திராவிலும், யாவாவிலும் பற்றியெறிந்த தீயினால் ஏற்பட்ட புகைமூட்டம் புரூணேயில் ஏற்பட்ட சூறாவளியினால் திசை திரும்பி, 3000 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள இலங்கைத் தீவை அடைந்தது. தூரத்தே ''பிறிமா''மா ஆலை அனல் கொதிக்கும் புகை மூட்டத்தில் தளம்பிக்கொண்டிருந்தது. திடீர் என்று 'பிறிமா' மா ஆலை தீப்பிடித்து எரியத்தொடங்கியது. பரமேஸ்வரன் தலையை சிலுப்பிக் கொண்டான். பிறிமா மா ஆலை புகை மூட்டத்தில் தளம்பிக்கொண்டிருந்தது. அவன் தலை குனிந்து கால்களைப் பார்த்தான்.

ஒற்றைக்கால் செருப்பு கனமாய் இருந்தது. காலைத்தூக்கிப்பார்த்தான் பரமேஸ்வரன். செருப்பில் அழுக்கு அப்பிப்போய்க் கிடந்தது. காலை கடல் நீரில் பிடித்தான். அப்பிய அழுக்கு செருப்பை விட்டு கழர்வதாய் இல்லை. மற்றக் காலால் அதை தேய்த்து விட்டான். மற்றக்கால் பெருவிரலில் அழுக்கு ஒட்டிக்கொண்டது. பெரு விரலில் புழுக்கள் ஊரத்தொடங்கின. பெரு விரல் அழுகிப்போனது. பின் கணுக்கால் முழங்கால் என்று தொடர்ந்து அழுகியது. பெரிய அலை ஒன்று முழங்கால் வரை வந்து நனைத்துப்போனது. பெரு விரலில் அழுக்குக் கழுவப்பட்டிருந்தது.

கரை ஓரமாக பார்வையை தூரப்போக விட்டான் பரமேஸ்வரன். தூரத்தே இருந்த சென்றியில் பார்வை நிலைத்தது. உள்ளே யார் இருப்பார்கள். யாரோ. தொலை நோக்கியில் அவர்கள் பார்க்கக்கூடும். இதில் நிற்கக் கூடாது. சட்டென்று திரும்பி நடையை வேகமாக்க முனைந்தான். மிகக் கிட்டவாக எதிரே இருந்த சென்றியில் இருந்தவன் இவனையே உறுத்துப்பார்த்தான். கூடாது.... இந்த இடத்தை விட்டு வேகமாக நகரக்கூடாது... உலாவுவது போல் உலாவி விட்டுப் போக வேண்டும். இல்லாவிட்டால் சந்தேகப்படுவார்கள். உளவு பார்க்க வந்ததாக நினைத்துக்கொள்வார்கள். வீண் தொல்லையில் மாட்ட வேண்டி வரும்... பரமேஸ்வரன் உலாவத் தொடங்கினான்.

பாடசாலைச் சூழல் பரமேஸ்வரனை அச்சுறுத்துவதாகவே இருந்தது. ஏதும் பிரச்சினை என்றால் தப்பி ஓட முடியாது. முன்பக்கத்தில் இராணுவ அரண். பின் பக்கம் கடல். வழியில் ஏதும் பிரச்சினை என்றாலும் வீடு போய்ச் சேர முடியாது. வழி நெடுகிலும் காவல் அரண்கள். கூடாது... இந்தப் பாடசாலை கூடாது... இங்கிருந்து கழர வேண்டும்.... எப்படியும் கழண்டு ஓட வேண்டும. பரமேஸ்வரன் கடற்கரையில் வேகமாக உலாவத் தொடங்கினான்.

✱



''என்ன டீச்சர் புதுசாக்கிடக்கு... குட்டி போட்ட நாயாட்டம் கடக்கரையில் ஒண்டு உலாத்துது....''

''ஓம்.. சேர்.. அதான் நானும் பாக்கிறன்.. ஆள்ட தோற்றத்தப் பார்த்தா.. பயமா வேற கிடக்கு... சி.ஐ.டியா இருக்குமோ சேர்....''

அதிபருக்கு தகவல் சொல்லப்பட்டது. அதிபர் சிரித்துக்கொண்டு சொன்னார்..... ''இவர் தானப்பா புதுசா வந்திருக்கிற வாத்தி...''

''புதுசா வந்தவர் 'றிப்போட்' பண்ணாம.. ஏன் சேர்... கடற்கரையில போய் நிற்கிறார்....?''

''டவுனில படிப்பிச்ச வாத்திய டவுனில இருந்து கழட்டி இங்கால அனுப்பிறான் என்டோனேயே நினைச்சன்..... இது ஏதாவது கேசாகத்தான் இருக்கும் என்று.. வந்ததும் வராததுமாக கடற்கரையில உலாத்துது... இன்னும் என்னென்ன தொல்லை தருமோ...'' அதிபர் அலுத்துக்கொண்டார். பரமேஸ்வரனை அதிபர் அழைத்ததாக கூற ஒரு மாணவன் கடற்கரைக்குப் போனான்.

✱

தோசையும் சாம்பாரும் வயித்தை கலக்கு மாப்போல் இருந்தது. பரமேஸ்வரன் ஜீன்சை கழட்டி போட்டுவிட்டு சரத்தை கட்டிக் கொண்டான் வாளியை எடுத்துக்கொண்டு டொய்லெட் நோக்கிப்போனான். அவன் மனைவி, அவன் டொய்லெட்டுக்குள் போய் கதவு மூடும் வரை பார்த்துக்கொண்டு நின்றாள். பின் பாடசாலைக்கு வெளிக்கிடும் குழந்தைக்கு உதவ உள்ளே போனாள்.

டொய்லெட்டுக்குள் போன பரமேஸ்வரன் பின் இரண்டு மூலையையும் உற்றுப்பார்த்தான். மேலே நிமிர்ந்து பார்த்தான். டொய்லெட்டில் குந்தினான். திரும்ப இரண்டு மூலையையும் திரும்பிப்பார்த்து எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்தினான். பாம்புச் செட்டை ஒன்று முன் பக்க புதரில் சிக்கிக்கிடந்தது ஞாபகம் வந்தது.

வளவு முழுவதும் புதர் மண்டிக்கிடந்தது. துப்பரவாக்க வேண்டும். டொய்லெட்டும் மனமடித்தது. 'ஹாபிக்' வாங்கி கழுவ வேண்டும். இண்டைக்கு பள்ளிக்கு லீவு போட்டாத்தான் இதெல்லாம் முடியும். லீவு போடுறதெண்டால் மனிசி கத்துவாள். அவள் வேலைக்கு போகுமட்டும் டொய்லெட்டுக்குள் இருப்பதென்று அவன் முடிவு செய்தான்.

மகன் பாடசாலைக்கு வெளிக்கிட்டுப்போனான். அவள் வேலைக்குப்போக ஆயத்தமானாள். மணி பார்த்தாள். 7.20. பரமேஸ்வரன் போக வேண்டிய பஸ் வரும் நேரம். டொய்லெட் கதவு பூட்டியே இருந்தது. பஸ் தெருவோரம் புழுதியையெல்லாம் வீட்டுக்குள் அனுப்பி விட்டுப் போனது. ''அப்பா... பஸ்... போகுது....'' ''போகட்டும்.. அடுத்த பஸ்ஸில் போறன்...'' அவள் கவலையானாள். ''கடவுளே வேலை போகாம இருந்தால் சரி...'' அவள் முணுமுணுத்துக்கொண்டாள். தன் வேலையை உறுதிப்படுத்த வேண்டும் என்ற வேகம் அவள் படலையை சாத்தியதில் தெரிந்தது. அவன் டொய்லெட் கதவைத்திறந்து கொண்டு வெளியேறினான்.

தொடர்ந்து ஒரு வாரமாக 7.20க்கு பரமேஸ்வரன் டொய்லெட் போனான். வாசல் பக்க புதர்கள் மட்டும் சுத்தப்பட்டிருந்தது. டொய்லெட் தொடர்ந்தும் மனம் அடித்தது. அவள் அலுத்துக்கொண்டாள். அடம் பிடித்தாள். ஆத்திரப்பட்டாள். அழுது பார்த்தாள். டொய்லெட் வாளியை ஒளித்துப்பார்த்தாள். அவன் சிரத்தை அற்று நாளை போவேன் என்று தினமும் சத்தியம் செய்தான். அவள், அவன் தாய்க்கு கடிதம் எழுதிப்போட்டாள்.

✱

''ஊரவன் என்ர பிள்ளைய விமர்சிக்க நீ என்ன தெருவெல்லாம் பர அடிச்சனியா....''

''இந்தாள் பஞ்சிப்பட்டு வேலைக்குப் போகாமல் இருக்குதெண்டு... சிவஞ்ஞானத் திட்ட சொன்னனான்... அவன் தான்... இவர் பஞ்சிப்பர்ர மாதிரி தெரியேல்ல... பயப்பிடற மாதிரி தெரியுதெண்டு......''

''அதத்தாண்டி நானும் கேக்கிறன்... அவனுக்கு தெரியுமாடி என்ற புள்ளய... என்ர அவர் எப்படியெல்லாம் வளர்த்தவரெண்டு...''

''அவன் பிறக்கேக்கேயே.. ஆம்பிளப்பிள்ள பிறந்திருக்கெண்டு... செத்தையில உலக்கையால தட்டி பயம் தெளிவிச்சவர்...''

''பிள்ள மூச்சு வாங்கி விக்கல் எடுக்கிற வரைக்கும் தலைக்குமேல எறிஞ்சு பிடிப்பார்... பிள்ள முழுசிர முழுசப்பார்த்தா சிரிப்புத்தான் வரும்...''

''இருட்டைக்கண்டு பயப்பிடுறான் என்று சொல்லி.. இருட்டு அறைக்க நாள் பூரா பூட்டி வைச்சு பயம் தெளிவிச்சவரடி....''

''கடல் தண்ணியக் கண்டா பிடிச்சிருக்கிற கையைப் பறிச்சுக் கொண்டு ஓடுவான்.. அவர்... பொடியனைப் பிடிச்சு.. தலைய தண்ணிக்க அமிழ்த்தி.. அமிழ்த்தி எடுத்து விட்டார் என்டா.. பொடியன் பயத்தில குளிரில நடுங்குமாப்போல உதடு துடிக்க மூச்சு வாங்கி.. விக்கல் எடுத்து நிக்கிறதப்பார்த்தா சிரிச்சு வயிறு நொந்து போகும்.

''ஊஞ்சலில வைச்சு ஒரு உண்ணு... உன்னி விட்டார் எண்டா பொடி... ஊஞ்சல் கட்டின மரத்தின்ட கிளையில முட்டி வருவான். ஆடி முடிஞ்சு தூக்கினா.. அவன் கழுத்தக் கட்டிப்பிடிச்சுக்கொண்டு கண்ண மூடிருவான். என்னதான் பயந்தாலும் புள்ள ஒரு நாள் கூட பயந்து வீரிட்டுக் கத்தினதில்லை... அப்படிபயம் தெளிஞ்ச பிள்ளைய நீயும் அவனுமாகச் சேர்ந்து பூச்சாண்டி காட்டுறியள் என்ன...''

இந்த மனுசி ஏன் தொண்ட வச்சு.. கத்துது. அவன் ஒரு மாதிரி ஆமி.. ஐ.சி எல்லாம் எடுத்துக் குடுக்கிறவனாம். அவன் பிறகு கண்டதெல்லாம் சொல்ல என்ற பாடு சிக்கலாயிரும். இந்த மனிசி தொண்ட வைக்கிறது கெண்டோ பிறந்தது. ''அனே தொண்ட வைச்சு கத்தாம இருக்கிறதெண்டா இங்க.. இரு.. இல்லாட்டா வெளிக்கிட்டு போ...'' பரமேஸ்வரன் தெருவுக்குப் போனான்.

சினிமாப் படத்தில் வரும் வழக்காடு மன்றக் காட்சி போல் ஊமையாக.. மனைவியுடன் தாய் சண்டை போட்டாள். பின் வெளிக்கிட்டுப் போனாள். அவன் தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தான். மனிசி இன்னும் தொல்லை தரும். அவன் பாடசாலை போவதென்று முடிவெடுத்தான்.

✱

எண்ணெய் வழியும் சில முகங்கள். கோபமாக சிலவும், பிரக்ஞை அற்று சிலவும், பவுடர் போட்டு தெளிவான முகத்துடன் சிலவும், பவுடர் போட்டும் வன்மத்துடன் சிலவுமாக அவனையே பார்த்துக்கொண்டிருந்தன. முப்பத்தாறு முகங்களும் அவனுக்கு எதிரானவை என்பதை அவன் உறுதியாக தீர்மானித்தான். இடை வாங்கில் இரண்டு முகங்கள் ஒன்றை ஒன்று வன்மத்துடன் பார்த்தன. பின் ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டன. அவன் அவர்களிடம் போனான். அமைதியாக இருக்கும் படி கேட்டான். ஒருவன் மற்றவனை ஏதோ சொன்னான். மற்றவன் புத்தக பையில் இருந்து கத்தியை உருவினான். பரமேஸ்வரன் இரண்டடி பின் வாங்கினான்.

''தம்பி கத்திய உள்ள வை....'' ''மாட்டன்...'' ''உனக்கு கத்தி எங்கால....'' ''களவெடுத்த நான்...'' ''இப்ப ஏன் கத்தி எடுத்தனி...'' ''எனக்கு கோவம் வந்தா குத்துவன்...'' ''உனக்கு ஏன் கோவம் வரும்...'' ''எங்கம் மாவப்பத்தி தப்பா சொன்னா... கோவம் வரும்...'' '' தம்பி கத்திய உள்ள வை....'' ''

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



மாட்டன்....'' அவன் முறைத்தான். பரமேஸ்வரன் வகுப்பறையை விட்டு வெளியேறினான்.

''சேர் வகுப்பில் ஒருத்தன் கத்தி வைச்சிருக்கிறான்... கேட்டாத் தாறான் இல்ல... முறைக்கிறான்....''

''என்ன சேர்.. ரெண்டு கன்னத்தில குடுத்து வாங்கிறதுக்கு......''அந்த ஆசிரியன் சுத்த வீரனானான். நேராக அந்த மாணவனிடம் போனான். ''எங்கடா கத்தி...'' அவன் கத்தியை வெளியே எடுத்தான். முழுப்பலத்தையும் தன்



கையில் சேர்த்து, அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். உலகம் அந்த மாணவனுக்காக ஒரு முறை இருண்டது. அவன் கன்னத்தில் கை வைத்து வாங்கில் சாய்ந்தான். ஆசிரியன் கத்தியை பறித்தான். கத்தியில் கூர் பார்த்தான். கொச்சிக்காய்... வெங்காயம்.... வெட்ட உதவும் என்று நினைத்திருப்பான். மடித்து பொக்கெட்டுக்குள் போட்டான். பரமேஸ்வரனை பார்த்து வீர சிவாஜி சிரிப்புடன் வெளியேறினான்.

பரமேஸ்வரனைப் பார்த்து அவன் முறைத்தான். ''மவனே... எனக்கா அறை வாங்கித் தந்தனி... இண்டைக்கு பள்ளிக்கூடம் விடுறதுக்கிடையில உன் கதை கந்தல்...'' பரமேஸ்வரன் முறைப்பை அகப்படுத்திக்கொண்டான். வகுப்பறையை விட்டு மீண்டும் வெளியேறினான்.

''தம்பி, பரமேஸ்வரன் வாத்திட்டப்போய்.... 'மெடிக்கல் றிப்போட்' வாங்கி வா...'' அதிபரின் கட்டளைக்கு அந்த மாணவன் இசைந்தான். வேகமாகப் போனான். சிறிது நேரத்தில் திரும்பி வந்தான்.

''சேர் கடற்கரையில கூட பரமேஸ்வரன் வாத்தி இல்ல சேர்....'' ''நல்லது.. நீ போ...'' அதிபர் தலையாட்டினார்.

✸

வீட்டின் முன் கதவு திறந்து கிடந்தது. பரமேஸ்வரனுக்கு மனைவி மீது கட்டுக் கடங்காத கோபம் வந்தது. அவள் தன் வேலைகளில் அசட்டுத்தனமாக ஈடுபடுவதில்லை என்ற உணர்வு உறுத்தியது. திருடர்கள் யாராவது கதவை உடைத்து திறந்திருக்கலாம். அவன் இல்லாததை அவர்கள் உளவு பார்த்திருக்கிறார்கள். தான் இன்று வீட்டில் இருந்திருந்தால் இதை தடுத்திருக்க முடியும் என்று நினைத்தான். வேகமாக வீட்டை நெருங்கியவன் நின்றான். சிலவேளை திருடர்கள் இன்னமும் உள்ளே இருக்கலாம். வீட்டைச் சுற்றிக்கொண்டு பின்னே போனான். அறை, யன்னல் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. அவள் கவனமாகத்தான் பூட்டிவிட்டு போயிருந்தாள். சுற்றிக்கொண்டு ஹோல் பக்கம் வந்தான். ஹோல் யன்னல் கதவு திறந்திருந்தது. பைத்தியக்காரி எல்லாத்தையும் பூட்டி இதை மறந்து விட்டிருந்தாள். இதற்குள்ளால் தான் தடியைப் போட்டு முன் கதவை திறந்திருப்பார்கள்.

திறந்திருந்த யன்னலை நோக்கி மெதுவாக முன்னேறினான். தலைக்கு கட்டுப்போட்ட நிலையில் அவன் மகன் படுத்திருந்தான். சட்டென்று யன்னலை நெருங்கினான். தலை கீழாய் இழைக்கப்பட்டு தொங்கும் தோரணங்கள். இரண்டு வேட்டிகள் இணைத்து மேலே வெள்ளை கட்டப்பட்டிருந்தது. தலை மாட்டில் குத்து விளக்கு எரிந்தது. தெப்பை போட்டார்கள், பொற் சுண்ணம் இடித்தார்கள். அவன் வேகமாக உள்ளே போனான்.

மகனின் மூக்கின் மேல் விரல் வைத்துப் பார்த்தான். உஷ்ணக்காற்று கையில் பட்டது. ''தம்பி... அவன் கண் விழித்தான். பாடசாலையில் ஒடி விளையாடும் போது காயம்பட்டது சொன்னான்.

தாய் மருந்து கட்டி வீட்டில் கொண்டு வந்து விட்டது. சொன்னான். தாய் மீண்டும் வேலைக்குப் போனதும் சொன்னான். அவன் இன்று அரைவாசியுடன் வந்தது நல்லதாய்ப் போய் விட்டதாக கருதினான். மகனைப் படுக்கச் சொல்லி தான் உடைமாற்ற உள்ளே போனான்.

மனைவி வந்ததும் சண்டை போட்டான். காயம் பட்ட பிள்ளையை தனிய விட்டுச் சென்றது பிழை என்றான். ''நான் லீவு போட்டு பிள்ளையை கவனிப்பேன். நீ வேலைக்கு போ...'' என்றான். அவள் பயந்தாள். தான் லீவு போடுவதாக அவள் வாதாடினாள்.

அவள் காயம் பட்ட பிள்ளையை தனிய விட்டுச் சென்றது பிழை என்று திரும்பத் திரும்ப சுட்டிக்காட்டினான். தன்னால் குழந்தையைப் பார்த்துக்கொள்ள முடியும். நீ வேலைக்கு போ என்றான். சிரத்தை எடுத்து மகனைக் கவனித்துக்கொண்டான்.

காயம் ஓரளவு ஆறி மகன் பாடசாலை போகத்தொடங்கினான். அவன் வேலைக்கு போவது பற்றி எண்ணவில்லை.

அவள் அவனுடன் வாதாடிப்பார்த்தாள். சில சமயம் மனநல மருத்துவரிடம் காட்டலாம் என்று எண்ணினாள். பஞ்சிப்பட்டு வேலைக்குப் போகாமல் இருப்பதை மருத்துவரிடம் காட்டினால் தன் கணவனுக்கு பைத்தியக் காரப்பட்டம் கட்டிவிடுவார்கள் என்று பயந்தாள். தன் வேலையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவள் உறுதியெடுத்தாள்.

✸

அவன் தன் காத்தாடி பறக்கும் என்பதில் சோர்வுக்கு மத்தியிலும் திடமாக நம்பினான். அவன் நீண்ட நேரமாக காத்தாடியை பார்த்துக்கொண்டிருந்தான். திடீர் என்று அவனுக்குள் ஏதோ ஒன்று அவன் சிந்தையை தாக்கிற்று. கடல் அலைகள் ஆர்ப்பரித்தன. கால நிலை குளிர்ச்சியாக மாறியது. தென்றல் சீண்டியது. தென்னோலைகள் ஆர்ப்பரித்தன.

அவன் இடது பக்க மூங்கிலுடன் மெல்லியதடி ஒன்றைக் கட்டினான். காத்தாடியை பறக்க விட்டான்.

காத்தாடி இப்போது இடது பக்கம் சாய்ந்தது. பால்மா பக்கட் விளம்பரங்களில் வரும் சிறுவர்களைப் போல் அவன் புயங்களை மடித்து முஷ்டி காட்டி தன் வெற்றியை கொண்டாடினான்.

●

வேலிகள் நகர்ந்தன :
எனது மண் அங்குலம் அங்குலமாய்
அவர்கள் வசமாயிற்று.
ஆயுதந் தரித்த,
இளம் பச்சை,
கபிலம்,மஞ்சள் வர்ணக்
கலப்புச் சீருடை அரச படையணிகள்
எனது வாசலில் எல்லை வேலி இட்டனர்
எனது மண்ணின் ஒவ்வொரு குருணியிலும்
ஆக்கிரமிப்பாளர்கள் உரிமை பூண்டனர்.

எங்களது காணிகள் -
புனித பூமிகளாயின.
வெள்ளரசமரங்கள் காற்றில் ஆடின,
இலையுதிர்த்திக் காற்றோடு அசைந்தன.

தென்னையும் மாவுந்தாங்கும்
எங்கள்
நைலோன் கயிற்றுக் கொல்லைக் கொடியில்
காவித்துணிகள்
வெயிலுக்கு ஆல்வாடின,
காற்று விழுத்திய
பெற்றிக் சாரணிலும், கொசுவச்சட்டையிலும்,
மல்லாக்கக் கிடந்தே ஊளையிட்டு
விளையாடின நாய்களும்.

கோழிக்கூடுகளுள்
பன்றிகள் வளர்ந்தன,
உம்மா,கோழிக்குக் குழைத்த தவிட்டையும் தின்று
கொழுத்தன,
புறங்கடைச் சுரியுள் புரண்டன,
பா..பா.. சத்தத்திற்கு ஓடிவரவும் பழகின அவை.

வீட்டு முன் வராந்தாக்களில்
தலை மழித்துக் காவியுடுத்த
துறவிகள் - நெஞ்சிலும், கமுக்கட்டு இடுக்கிலும்
நரைத்த முடி வெளித்தெரியத்
நீட்டி நிமிர்ந்தபடி சாய்மனையில்
பனையோலை விசிறியொடு
மதியத்தில் துயின்றனர்,
வாசல் கறுத்தக் கொழும்பான் பிந்நேரம்
நிழலுங் காற்றும் குளிரும் கொடுத்து,
கண்ணயரப் பாடுமேயொரு பாட்டு, அதையும்
அவர்களே களவாடிக் கொண்டனர்.

'பெத்தம்மாவின்' ஆரக்கழுத்தும்
தமிழ்க் கதைத்ததற்காய்த் திருகப்பட்டது.

கல்லாய்ச் சமைந்து
சந்திக்குச் சந்தி வீற்றிருந்த புத்தர் பிரான்-
எங்கள் மசூதி மினாராவிலும்
சாந்த முகத்தோடு சரிந்து தூங்கினார்.

நாமும்,
இவையெல்லாம் வெறும் கனவேயென்று
கலைந்த ஆடை சரிசெய்து,
தடவி,
தூரக் கிடந்த தலையணை தேடி - கவட்டுள் திணித்து,
சிலர் துணையை அணைத்தபடியும்,
இறுக்கப் போர்த்தி,
மற்றப்பாடாய்ப் புரண்டு தூங்குகிறோம்.

இன்றின் அதிகாலை
'பண' ஒலியில் குழம்பி,
நாமெல்லாம் துயில் கலைந்தெழும்பக் கூடும்-
அதிலேது ஆச்சரியம் ?

97।।03 இரவு ।।மணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குப்பிழானைச் சேர்ந்த ஐ. சண்முகலிங்கம் என்னும் படைப்பாளியைப் பற்றி பிரஸ்தாபிப்பது இப்போது இலக்கிய வட்டாரத்தில் குறைந்து விட்டது,. 1970களில் தொடர்ச்சியாக எழுதி வந்த குப்பிழான் ஐ. சண்முகலிங்கத்தின் சிறுகதைகள் இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. (கோடுகளும் கோலங்களும், சாதாரணங்களும் அசாதாரணங்களும்) கோடுகளும் கோலங்களும் சாகித்திய அகெடமி பரிசு பெற்றது.

இவரது மென்மையான, அமைதியான சுபாவத்தைப் போலவே இவரது சிறுகதைகளும் மென்னுணர்ச்சித்தன்மை வாய்ந்தவை. அதிகம் பேசாமல் மௌனமாக கதை சொல்பவை. அழகுணர்ச்சி மிகுந்தவை. அவரே ஓரிடத்தில் ''அழகை இரசிப்பது தான்'' எனது கதைகளின் பிரதான போக்கு எனக்குறிப்பிட்டுள்ளார். குப்பிழான் ஐ. சண்முகலிங்கம் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர்; அதிர்ந்து பேசத் தெரியாதவர். ஒரு நண்பர் குப்பிழான் ஐ. சண்முகலிங்கத்துடன் நெருங்கிப்பழகிய காலத்தில் ஒருவரையொருவர் பார்த்தபடியே ஒன்றும் பேசாமல், இடைக்கிடை புன்சிரிப்பு சிரித்தவாறே பொழுது போவதே தெரியாமல் அதைக்கழிக்க முடிந்த இன்ப அனுபவங்களை ஞாபகப்படுத்துவார். 'இயல்பாக இருங்கள்' என்று எல்லோருக்கும் கூறும் போலிகளற்ற சண்முகன் அண்மையில் கொழும்பு வந்திருந்த போது நடத்திய உரையாடலிலிருந்து சில பகுதிகள் இவை:

***கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்குப் பிறகு கொழும்பு வந்திருக்கிறீர்கள். இன்றைய யாழ்ப்பாண நிலை பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்.***

சொல்ல என்ன இருக்கிறது... எதைப்பற்றிச் சொல்ல...? அங்கு சனங்களின் நிலையைப் பற்றிச் சொல்வதானால், அவர்களது வாழ்வு 'மரணத்துள் வாழும்' நிலையில் தான் இன்னமும் இருக்கிறது. தாங்க முடியாத ஒரு ஏக்கமும் அங்கலாய்ப்பும் அவர்களிடம் நிரந்தரமாகவே குடிகொண்டிருக்கின்றன. தொடர்ச்சியான யுத்தம், அலைக்கழிவு, வறுமை என்பவற்றால் ஒரு சுமுகமான வாழ்வுக்கான ஏக்கம் பலமாக அவர்களிடம் காணப்படுகிறது. சாதாரணமான கூலி உழைப்பினை நம்பி வாழும் அன்றாடங் காய்ச்சிகளது நிலை மிகவும் மோசம். அவர்களுக்கு நிரந்தரமான வருமான வாய்ப்பு இல்லை.

விவசாயிகளுக்கு ஓரளவு ஊக்கம் கொடுக்கப் பட்டது. விதை வெங்காயம் வழங்கப்பட்ட போது பல விவசாயிகள் ஊக்கத்துடன் விவசாயத்தில் இறங்கினார்கள். நல்ல விளைச்சலும் கிடைத்தது. ஆனால் சந்தை வாய்ப்பு இல்லாததால் பெரும் நஷ்டத்துக்கு ஆளாகி விட்டார்கள். அதனால் இம்முறை விவசாயத்தில் அவர்கள் ஆர்வம் காட்டுவது குறைந்துள்ளது என்றே நினைக்கிறேன்.

அரசாங்க ஊழியர்களுக்கு சில வசதிகள் இருக்கின்றன. பருத்தித்துறையில் இருந்து அவர்களுக்கென இராணுவ காவலுடன் ஒரு பஸ் யாழ் நோக்கிப் புறப்படுகிறது. அந்த பஸ் தடைமுகாம்களில் சோதனைக்குள்ளாக்கப் படுவதில்லை. மற்றவர்கள் போகும் பஸ்கள் அடிக்கடி இறக்கி சோதிக்கப்படுகின்றன. பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வர கிட்டத்தட்ட 2 1/2 மணிநேரம் செல்கிறது.

ஏழு மணிக்கெல்லாம் ஊர் அடங்கி விடுகிறது. எட்டு மணிக்கு ஊரடங்கு நடைமுறைக்கு வரும். அது காலை 5 மணிவரை அமுலில் இருக்கும். இரவில் மண்ணெண்ணை விளக்கில் தான் மாணவர்கள் படிக்கிறார்கள்.

'பண்ட்' போடப்பட்ட பகுதிகள் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட முடியாமல் போயிருக்கின்றன. பெரிய இராணுவ முகாங்களாக இல்லாமல் பரவலாக இராணுவத்தினர் நடமாடும் நிலையே இருக்கிறது. கிட்டத்தட்ட இந்தியப்படை இருந்த கால நிலைமை என்று சொல்லலாம்.

ஆனால் இது அவ்வப்பிராந்திய பொறுப்பதிகாரியைப்பொறுத்தது. அவரின் குணநலன்களைப்பொறுத்தது... சில இடங்களில் அடிக்கடி சோதனைகள் நடப்பதாகக் கேள்வி...

***மக்களது பொது போக்கு நடவடிக்கைகள் பற்றி....***

ம்... கோயில் திருவிழாக்கள் தான் பெரிதாக நடக்கின்றன. இரவிரவாக நிகழ்ச்சிகள் நடக்கின்றன. கோஷ்டி கானங்களுக்கு குறைவே இல்லை. வெளிநாடுகளில் இருக்கும் பிள்ளைகள் அனுப்பும் பணத்தில்இவை நடக்கின்றன. சாதாரண மக்களுக்கு இது ஒரு ஆறுதல் தருகின்ற, அவர்களது ஏக்கத்தைத் தணிக்கின்ற நிகழ்ச்சியாக அமைகிறது... இதைத்தவிர ஓரளவு வசதிபடைத்தவர்களது வீடுகளில் இப்போது பற்றறியில் இயங்கும் கறுப்பு வெள்ளை ரீ.வீக்கள் போடப்பட்டு படம் பார்க்கிறார்கள். இதுதவிர மினி சினிமாக்களும் நடக்கின்றன. இது ஒரு தொழிலாகவே நடக்கிறது என்று சொல்லலாம்....

***பத்திரிகைகள் சஞ்சிகைகள்.....***

பத்திரிகை ஒன்றே ஒன்று தானே. உதயன் மட்டும் தான். வெளிவருகிறது. பெரும்பாலும் விளம்பரங்கள் தான். செய்திகளில் ஓரளவுக்கு சகலபக்கங்களையும் வெளிப்படுத்தும் தன்மை இருக்கிறது. ஆனாலும் முழுமையான சுதந்திரச் சூழல் என்று சொல்வதற்கில்லை. புலிகளின் வானொலிச் செய்திகளையும் புலிகளின் வானொலி இப்படிக்கூறுகிறது' என்று குறிப்பிட்டுப் போடுவார்கள். ஒரேயொரு பத்திரிகை என்பதால் நன்றாக விற்பனையாகிறது.

கொழும்புப் பத்திரிகைகள் யாழ்ப்பாணத்திற்கு அன்றைய தினம் பிற்பகல் வந்து விடுகின்றன. வீரகேசரி விமானப்பதிப்பு என்று சீல்குத்தப் பட்டு கொழும்பு விலையிலும் சற்று கூடிய விலைக்கு விற்பனையாகிறது. எமது பகுதிகளில் (கரணவாய்) மறுநாள் பெற்றுக்கொள்ளலாம். தினகரன் மட்டும் கொழும்பு விலைக்கே (5/=)விற்கப்படுகிறது. அது எப்படி என்று தெரியவில்லை.

உதயன் பத்திரிகையில் சில சுவையான விடயங்கள் வரும். குறிப்பாக பாராட்டுக்கள். ஒருவரை ஒருவர் புகழ்ந்து விளம்பரம் செய்யும் ஒரு புதிய மரபு வெகுவாக பரவிவிட்டுள்ளது. இது எந்தளவுக்கு போயிருக்கிறதுதென்றால், 5ம்ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகட்கு கூட பாராட்டு விளம்பரங்கள் இடம்பெறுகின்றன.

சஞ்சிகைகள் என்று ஒன்றுமே இல்லை... இப்போது தான் சஞ்சீவி வரத்தொடங்கியுள்ளது. (உதயன் பத்திரிகையின் சனி வார மலர்) அதைத்தவிர வேறொன்றும் வருவதில்லை. சஞ்சீவியில் சில நல்ல சிறுகதைகள், கவிதைகள் வருகின்றன. அண்மையில் வெளிவந்த 'முட நடை' என்ற ஒரு சிறுகதை எனக்கு மிகவும் பிடித்த கதை. எழுதியவர் யாரென்று ஞாபகம் இல்லை... ஒரு புனைபெயரில்தான் எழுதயிருக்கிறார். ஆனால் அருமையான கதை. யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்ஸில் ஏறி வீடுபோய் சேரும் வரையான ஒரு பயணியின் உணர்வுகளாக வெளிப்படும் இந்தக் கதை இன்னமும் எனக்கு ஞாபகத்தில் நிற்கிறது... நல்ல கவிதைகளும் வந்துள்ளன. இவை நல்ல படைப்புக்கள் வருவதற்கான நிலை இருப்பதைக் காட்டுகின்றன... ஆனால் வெளியீட்டு வாய்ப்பு இல்லாதது ஒரு பெரிய குறையாகவே உள்ளது.



மரணத்துள் வாழ்கிறார்கள் மக்கள்!

-குப்பிழான் சண்முகன்

***முன்னெல்லாம் பல சஞ்சிகைகள் வந்தனவே...***

அது குடாநாட்டு யுத்தத்திற்கு முன். புலிகள் கையில் குடாநாடு இருந்த போது, அப்போது பல சஞ்சிகைகள் வந்தன. பல நல்ல படைப்புகளும் வந்தன. வெளியீட்டு வசதி இருந்தது தானே... புலிகளது சார்புப்பத்திரிகைகளும் வந்தன. பத்திரிகைகளும் வார இதழ்களும் கூட இருந்தன. அப்போது நல்ல படைப்புகள், பத்திரிகைகள் சஞ்சிகைகள் வெளிவந்தன. யேசுராசா நடாத்திய கவிதை இதழில் நல்ல கவிதைகள் பல வந்தன. புதிவர்கள் எழுதியிருந்தார்கள். பெயர்களை ஞாபகம் வைத்துச் சொல்ல முடியாவிட்டாலும் கூட நல்ல கவிதைகளைப் படித்த ஞாபகம். இதைத்தவிர புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களில் சிலரிடமிருந்தும் நல்ல படைப்புக்கள் வந்திருந்தன. பல நல்ல திரைப்படங்கள் கூட அவர்கள் தயாரித்திருந்தார்கள்.

(உ+ம்) உயிர்ப்பூக்கள் (இப்போது ஞாபகத்துக்கு வருகின்ற பெயர்களில் இது ஒன்று)

இப்போது பிரசுர வசதிகள் இல்லை. படைப்புகளைக் காண முடிவதில்லை. 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று இருப்பது உதயன் மட்டும் தான்' என்பதுதான் நிலைமை.

***இலக்கிய கூட்டங்கள் பிற நாடக முயற்சிகள்...***

அவையும் கூட முன்பு தான். இப்போது இல்லை. யாழ்ப்பாணத்தில் ஒரு சில கூட்டங்கள் நடப்பதுண்டு. ஆனால் போக முடிவதில்லை. போனால் திரும்பி வர முடியாத நிலை.

***உங்கள் அலை பத்திரிகை கால அனுபவங்கள் பற்றி...?***

அலை ஆரம்பிக்கப்பட்ட போது மிகுந்த நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் தான் ஆரம்பித்தோம். நான்கு நண்பர்களால் அது தொடக்கப்பட்ட காலத்தில் (யேசுராசா, நான், மு. புஷ்பராசான், இளையவர்) போலி இயக்கத்துக்கு எதிரான போர்க்குரலாக அதைக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. காலப்போக்கில் ஒவ்வொருவராக ஆசிரியர் குழுவிலிருந்து விலகிவிட இறுதியில் யேசுராசா மட்டும் அலையைத்தொடர்ந்து வெளிக்கொணர்ந்தார். எமக்கிடையில் 'கொள்கை - சிந்தாந்த வேறுபாடு' என்று பெரிதாக ஒன்றும் இருக்கவில்லை என்றுதான் இப்போது யோசிக்கையில் தோன்றுகிறது. நான் அலை 6வது இதழுடன் வெளியேறிய போதும் வெளியிலிருந்து உதவி செய்து வந்தேன். அலையின் சாதனை என்று குறிப்பிடுவதாயின் தமிழ்ச் சமூகத்தில் காலகதியில் ஏற்பட்டுவந்த தமிழ்த்தேசிய வாதத்தை' இலக்கியத் தளத்தில் அது பிரதிபலித்தது என்று சொல்லலாம்.

***தற்போதைய உங்கள் இலக்கிய முயற்சிகள் பற்றி...?***

என்னைப்பொறுத்தவரை படைப்பாக்கம் என்பது ஒரு 'தவம்'. அந்தத் 'தவம்' செய்வதற்கான மனோ நிலை இப்போது சற்று குன்றியிருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். இதை நம்பிக்கையீனம் என்றோ, அல்லது சோம்பல் என்றோ அர்த்தப்படுத்த முடியாது. இந்த நிலை விபரிக்கக்கடினமானது. அதேநேரம் அனுபவிக்க மிகவும் சுகமானது. இவற்றையும் மீறி எழுதியே ஆகவேண்டும் என்ற நிலை வரும் போது எழுதுவேன் என்று தான் நம்புகிறேன்.

## பெண்கள்...

20, 21 ஆகிய திகதிகளில் "கருக்கலைப்பு" தொடர்பான சட்ட திருத்தங்கள் குறித்த பாராளுமன்ற விவாதங்களின்போது ஆண் பிரதிநிதிகள் முன் வைத்த கருத்துக்களும் அதன் மோசமான முடிவுகளும்.

உருப்படியான புரட்சிகர சமூக மாற்றம் இடம்பெறாத சூழ்நிலையில் இக்கோரிக்கையும் கூட பூர்ஷ்வா கோரிக்கையாக இருக்கலாம். ஆனால்குறிப்பிட்டளவிளான வளர்ச்சிக்கு இது இட்டுச் செல்ல உதவும்.

நிச்சயமாக ஆரம்பத்தில் இது உடனடி பிரதிபலனைத்தராது.

### சில புரிதல்...

-ஆண்களோடு ஒப்பிடுகையில்பெண்கள்வாக்களிப்பில் பங்கு கொள்வது மிகவும் குறைவே.

-பெண்கள் கூட பெண்களுக்குத் தான் அல்லது பெண்களது தேவைகள் குறித்து அக்கறைப்படுபவர்களுக்கு தான்வாக்களிப்பார்கள்என்றும் கூறிவிட முடியாது.

-ஒதுக்கீடு நிறைவேற்றப்பட்டு அதன்படி வேட்பாளர் பட்டியலில்பெண்களையும்சேர்த்து தேர்தலில்போட்டியிடச் செய்தாலும்பெண்கள் அதே அளவு வீதாசாரத்தில்தெரிவு செய்யப்படப் போவதுமில்லை. அதே அளவு தெரிவு செய்யப்படுவதாகக் கொண்டாலும் நிர்வாகத்துறையில் (அமைச்சரவையில்) அதே விதாசாரம் கிடைக்கப் போவதுமில்லை. அப்படிக் கிடைத்தாலும் பெண்களின் நலன்களுக்கு சார்பாகத் தான் இருப்பார்கள் என்றோ கற்பனை செய்யத்தேவையில்லை.

-மேட்டுக்குடிப் பெண்களே (ஓரளவு குடும்பச் சுமையிலிருந்துவிடுபட்ட, பொருளாதார ரீதியில்ஆண்களில் தங்கியிருக்காத, வர்க்க, சாதிய,மத, இனத்துவ செல்வாக்கு போன்ற ஆதிக்க பண்புகளைக் கொண்ட, பெண்களே) அரசியல் அதிகாரத்துக்கு வரக்கூடிய வாய்ப்புகள் அதிகளவு உண்டு.

ஆனாலும் நிச்சயமாக இது பெண்களுக்கு அரசியல் பயிற்சியை வழங்கும். அரசியல்பங்களிப்பை ஊக்குவிக்கும். அரசியல் ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் அதிகரிக்கும். இவை பெண்கள் சம வாய்ப்புகளை அடைய முன்நிபந்தனையாக அமையும். பெண்களை தமது சந்தர்ப்பவாதத்துக்காக கையாண்டு வரும் கட்சிகளின் பிடியிலிருந்து விடுபடவும் இப் பயிற்சி கணிசமான அளவு உதவும்.

முதலாளித்துவ தேர்தல் முறையில் பெண்களின் அரசியல் ஈடுபாட்டுக்கு பல சமூகத் தடைகள் உள்ளன. இன்றைய நிலையில் பெண்களுக்கு மரபான ஆணாதிக்க குடும்ப அமைப்புமுறைசுமத்தியுள்ள பொறுப்புகள், வன்முறை மிகுந்த சூழல், பெண்களின் பகிரங்க சமூக நடவடிக்கைகளை ஆணாதிக்க சமூக அமைப்பு கொண்டிருக்கும் சந்தேகப் பார்வை, ஒழுக்க மீறலாக அதனைக்கருதும்போக்கு, கலாசார பண்பாட்டு ஐதீகங்கள், போன்றன தடையாகத்தான்இருக்கின்றன. இவற்றிலிருந்து விடுபட நிச்சயம் இக்கோரிக்கைகள் கூட போதுமானதாக இருக்க முடியாது. புரட்சிகர சமூக மாற்றத்தின் மூலமே இதனை வென்றெடுக்க முடியும்.

எவ்வாறாயினும் பெண்களின் அரசியல் பங்களிப்பை அதிகரிப்பதில்ஈடுபடும் எந்த சக்தியும் வரும் கேள்விகளை கவனத்திற்கொள்வது முக்கியம்.

### சில கேள்விகள்...

-சகல தேர்தல்களிலும் ஆண்களைப் போலவே பெண்களும் சமனாக வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறார்களா? உண்டாயின் ஆண்களோடு ஒப்பிடுகையில்பெண்களின்வாக்களிப்பு வீதம்எத்தனை?

-அரசியற் கட்சிகளின் உறுப்பினர்களில் எத்தனை சதவீதத்தினர் பெண்கள்? அரசியற்பணிகளில்பெண்களின் பங்களிப்பு எத்தகையது? அத்தகைய பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்ய அக்கட்சிகள் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனவா? அந் நடவடிக்கைகளின்தன்மை எத்தகையன?

-தேர்தல்களின் போது பெண் வேட்பாளர்களின் விகிதாசாரம்என்ன?வேட்பாளர்களுக்கான நிபந்தனைகள் ஆணுக்கும்பெண்ணுக்கும்சமமானது தானா?பெண்களின் கோரிக்கைகளை பெண்கள் எவ்வளவு தூரம் முன் வைக்கிறார்கள்? பெண்களின் வாக்களிப்பு வீதாசாரம் என்ன? பெண்களை வெற்றிபெறச் செய்வதில் பெண் வாக்காளர்களின் பங்களிப்பு என்ன? ஆண்களோடு ஒப்பிடுகையில் எத்தனை வீத பெண்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்? நிர்வாகத்துறைக்கு தெரிவு செய்யப்படும்பெண்களின்வீதாசாரம்என்ன?

-பெண்களின் அரசியல் ஈடுபாட்டுக்கான தடைகள் எவை? அத்தடைகளை ஏற்படுத்துவதில் சமூக ஐதீகங்களுக்கும், குடும்பச் சுமைகளுக்கும், அரசியற் சக்திகளுக்கும், அரசியற் பொருளாதார சூழலுக்கும், உள்ள பாத்திரம்எவை?

-இவற்றை தாண்டிவர பெண்களுக்குள்ள தெரிவு என்ன?

மேற்படி கேள்விகளுக்கான விடைகளானது பெண்களின் அரசியல்பிரதிநிதித்துவ அதிகரிப்புக்கு முன்னர் விடை காண வேண்டிய முன்நிபந்தனையான கேள்விகளாகும்.

மற்றும்படி அரசினதும் (அமைச்சினதும்) அரசு சாரா நிறுவனங்களினதும் திடீர் கரிசனைகளைக் கண்டு மலைக்கவோ நம்பிக்கைகொள்ளவோ தேவையில்லை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நூல் விமர்சனம்

# கலை இலக்கியக் கட்டுரைகள்

**கலாநிதி சி.மௌனகுரு**

**குமரன் வெளியீடு**
**இந்திய விலை ரூபா.36**

செ.யோகராசா




**1. நூலாசிரியர்:**

''கலை - இலக்கியக் கட்டுரைகள்'' என்ற நூலின் ஆசிரியர் கலாநிதி சி. மௌனகுரு ஆவார். கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர் என்ற விதத்தில் கலாநிதி சி. மௌனகுரு அவர்களின் நான்காவது முகம் இந்நூலின் ஊடாக வெளிப்படுகின்றது. எவ்வாறெனில், நாடகத் தயாரிப்பாளர் நாடக நடிகர் என்பவை அவரது ஒரு முகம்; நாடக ஆய்வாளர் என்பது மற்றொரு முகம், ஈழத்து இலக்கிய ஆய்வாளர் என்பது பிறிதொரு முகம். கலை, தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான ஆய்வாளர் என்பது இன்னொரு முகம். இந்த முகம் கலை இலக்கியத் துறையுடன் நெருங்கிய தொடர்பில்லாதவருக்கு புதிய முகம் என்றும் கூறலாம்.

**2. நூலிலுள்ள கட்டுரைகள்:**

புதிய முகமொன்றினை இனங்காட்டும் இத்தொகுப்பிலுள்ள பத்து கட்டுரைகளையும் பொதுவாக நோக்கும் போது அவற்றை இரு பிரிவுகளாக வகுத்துக் கொள்ளலாம், அவை: அ) கலை தொடர்பானவை; ஆ) இலக்கியம் தொடர்பானவை.

**3. கலை தொடர்பான கட்டுரைகள்:**

ஆழ்ந்து நோக்கும்போது இப்பிரிவில் அடங்கும் கட்டுரைகளை நான்காக வகுத்துக் கொள்ள முடிகின்றது;

1. கலை தொடர்பாக: - கலை, அழகு, சமூகம் - சில குறிப்புகள்

2. ஈழத்துக் கலை தொடர்பாக: - நாமும் நமது கலாசாரத் தனித்துவமும்

-ஈழத்துத் தமிழரின் கலை கலாசாரங்களைப் பேணுதலும் வளர்த்தலும்

3. தமிழகக் கலை தொடர்பாக: - தமிழர் மத்தியில் சங்கீதம்: வரலாற்று ரீதியான ஓர் அறிமுகம்.

4 கலை பற்றிய ஆய்வாளர்/ படைப்பாளர் பார்வை தொடர்பாக:- கலைகளும் பாரதியும்,

- தமிழர் கலை வரலாற்றில் மறுபாதி

**3.1. கலை பற்றிய கட்டுரைகளின் உள்ளடக்கமும் முக்கியத்துவமும்:**

'கலை அழகு, சமூகம் - சில குறிப்புகள்' என்ற முதற் கட்டுரை கலையின் அடிப்படை அம்சங்கள் பற்றி அதாவது அதன் தோற்றம் அதன் அழகு கலைக்கும் சமூகத்திற்குமிடையிலான ஊடாட்டம் என்பன பற்றி விளக்குகின்றது.

கலை என்றால் என்ன என்பது பற்றி பின்வருமாறு விளக்குகின்றார் ஆசிரியர்:

*'இயற்கையான ஒரு காட்சியை அது மனதைக் கவர்வதாயிருந்தாலும் கூட, நாம் பார்த்துக் கலை என்று கூறுவதில்லை. ஓர் அழகான பூ, ஒரு சிரிக்கும் குழந்தை, வயது சென்று நரை திரை விழுந்த ஒரு கிழவன், இவர்களைப் பார்த்து வியந்து நாம் கலைகள் என்று கூறுகின்றோமா? இல்லையே. ஆனால், மேற்சொன்னவற்றை ஓர் ஓவியனோ, சிற்பியோ, அல்லது புலவனோ வரைகின்றபோது, செதுக்குகின்ற போது, பாடுகின்ற போது நாம் அதனைக் கலை என்கின்றோம். இங்கே ஓவியன் வர்ணங்களை ஊடகமாகக் கொண்டு தான் கண்ட காட்சியைப் பிரதிபலிக்கின்றான். சிற்பி கல்லை ஊடகமாகக் கொண்டு காட்சியைக் கலையாக்குகின்றான். புலவன் சொல்லை ஊடகமாகக் கொள்கிறான். இக்கலைஞர்கள் தாம் கண்ட காட்சியைப் போட்டோ பிடித்தது போலக் காட்டாமல் ஏதோ சில மாறுதல்களுடன் எமக்குக்காட்டுகின்றனர். காட்சி அவர் மூளையில் பிரதிபலித்து அவர்கள் அனுபவமாகி அனுபவம் ஊடகத்தினூடாக வெளியில் வருகிறது. தான் இயற்கைச் சூழலிலிருந்து மேற்கொண்ட அனுபவத்தைப் பிரதிபலிப்பதே இங்கு பிரதானப்படுகின்றது. சுருங்கச்சொன்னால் கலைஞன் இயற்கையிலிருந்தும், சூழலிலிருந்தும் தான் பெற்ற அனுபவங்களைத் தனக்கு கை வந்த ஊடகத்தினூடாக வெளிப்படுத்துகையில் அது கலையாகின்றது.' (பக் 9-10)*

இவ்விடத்தில் நீண்டதொரு பகுதியை மேற்கோளாக எடுத்துக்கொண்டமைக்குக் காரணம், பொதுவாக இந்நூலில் உள்ள கட்டுரைகளில் எத்தகைய விடயம் பற்றி அமைந்திருந்தாலும் சரி, எளிமையாகவும், தெளிவாகவும், அநாயாசமாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன என்பதனை புலப்படுத்துவதற்கேயாகும். கட்டுரையாசிரியரின் இத்தகைய ஆற்றல் விதந்துரைக்கப்பட வேண்டியதொன்றாகின்றது. ஏனெனில், பொதுவாக இத்தகை விடயங்கள் பற்றிப் பேசும் கட்டுரைகள், தெளிவற்றனவாய் அமைந்து விடுகின்றன.

தொடர்ந்து மேற்கூறிய பண்புகளைப் பற்றிச் சிந்திக்கும் போது அத்தகைய பண்புகளைக் கொண்டுள்ள கைலாசபதியின் கட்டுரைகள் எனது நினைவுக்கு வருகின்றன. கைலாசபதியிடம் காணப்பட்ட இத்தகு பண்புகள், அவர் பத்திரிகை ஆசிரியராக விளங்கியமையால் செம்மையுற, இந்நூலாசிரியரது இத்தகு பண்புகள் இவர் பாடசாலை ஆசிரியராக நீண்ட காலமாக பணிபுரிந்தமையினால் கைவந்தன என்று கூறத்தோன்றுகின்றது.

மீண்டும் முதற் கட்டுரைக்குத் திரும்புவோம். கலை என்றால் என்ன என்பது பற்றி விளக்கப்பட்டதன் பின்னர் கலைக்கும் சமூகத்திற்குமிடையேயான தொடர்பு மார்க்சிய நோக்கில் விளக்கப்படுகின்றது. கலைஞனின் இருப்பு - வாழ்நிலை முதன்மைப் படுத்தப்படுகின்றது. அவ்விதத்தில் உற்பத்திமுறை, உற்பத்தி உறவு என்ற விடயங்கள் பற்றிப் பேசப்படுகின்றது. இத்தகைய அடித்தளத்தில் நின்று - ஆதிகாலம் தொடக்கம் இன்று வரை உற்பத்திமுறை, உற்பத்தி உறவுகளுக்கு ஏற்ப கலையின் பண்புகள் பற்றி எடுத்துக் காட்டப்படுகின்றது.

தொடர்ந்து கலையின் ஒழுங்கு, செம்மை என்பன கூறப்பட்டு அத்தொடர்பில் (கலையின்) அழகு பற்றிச் சுட்டப்படுகின்றது. இறுதியாக மேற்குலக, கிழக்குலகக் கலையின் வேறுபாடுகள் சுருக்கமாக - முன்வைக்கப்படுகின்றன.

சுருங்கக்கூறின், சாதாரண வாசகர் ஒருவர் அதுவரை அறிந்திராத கலை பற்றிய பல்வேறு விளக்கங்களைத் தெளிவாக அறிந்து கொள்ள இக்கட்டுரை துணைபுரிகின்றது.

ஈழத்துக் கலை வளர்ச்சியுடன் தொடர்புபட்டவை. இரண்டாவது கட்டுரையும் நான்காவது கட்டுரையுமாகும். **நாமும் நமது கலாசாரத் தனித்துவமும்** என்ற கட்டுரையில், முதலில் நீண்டகாலமாகவே ஈழத்துக் கலை வளர்ச்சியில் இந்தியத் தாக்கம் இருந்து வந்துள்ளமை அழுத்தியுரைக்கப்படுகின்றது. அதேவேளையில் ஈழத்துக்கலைகளின் தனித்துவ அம்சங்களும் எடுத்துரைக்கப்படுகின்றன. நாட்டியம், சங்கீதம், கூத்து, நாடகம், திரைப்படம், மெல்லிசை என்ற விதங்களில் அவை இடம்பெறுகின்றன. அண்மைக்கால அகழ்வாராய்ச்சிக் கண்டுபிடிப்புகளும் அவற்றிற்குச் சான்றாக பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. சமாந்திரமாகச் சிங்களக் கலையுலகில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் சுருக்கமாக சுட்டப்படுகின்றமை கவனிக்கத்தக்கதே.

நான்காவது கட்டுரை **ஈழத்துத்தமிழரின் கலை கலாசாரங்களைப் பேணுதலும் வளர்த்தலும்** - அழுத்தியுரைக்கும் முக்கிய விடயமொன்றுள்ளது. ஈழத்துக் கலை வளர்ச்சி பற்றிய நோக்கில் உயர் மரபு சார்ந்த கலைகளே முக்கியம் பெற்று வந்துள்ளன. உப மரபுக் கலைகள் - கிராமிய மக்களது கலைகள் - போதியளவு முக்கியம் பெறவில்லை என்பதே அது. சிந்தனையைத் தூண்டும் இவ்விடயம் மட்டுமன்றி, இதனைவிட முக்கிய விடயமொன்றினையும் எமது சிந்தனைக்கு விருந்தாக்குகின்றார் கட்டுரையாசிரியர். கலை சார் முயற்சிகள் என்பவற்றோடு நாம் இதுவரை அறிந்திருந்த கலைகளை (எ-டு: நடனம், ஓவியம், சிற்பம்) மட்டுமன்றி, கைவினைகளையும் (Crafts) (எ-டு: ஆபரணம் செய்தல், மாலை கட்டல்) இணைத்துப்பார்க்கின்றார். மேலும் நுணுக்கமாகச் சென்று இவ்விருவகை முயற்சிகளையும் சமயம் சார் கலைகள், சமயம் சாராத கலைகள், சமயம் சாராத கைவினைகள் சமயம்சார் கைவினைகள் என வகைப்படுத்தி ஆராய்கின்றார்.

இவை மட்டுமன்று மேலும் விளக்கம் கருதித் தொழில் சார்ந்த கலைகள், கைவினைகள் என்று வகுத்து விளக்க முற்படுகின்றார். இவை பேணப்படுவதன் அவசியமும், வழிகளும் இறுதியாக வற்புறுத்தப்படுகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக - நுண்கலைத் துறை இத்தகைய முயற்சியொன்றில் ஈடுபட்டுள்ளமை பற்றி ஆசிரியர் கூறும்போது கிழக்குப்பல்லைக்கழக நுண்கலைத்துறையின் செயற்பாடு எத்தகையது என்ற கேள்வியும், உங்கள் சிலர் மத்தியில் எழுதல் கூடும் (அங்கும் நுண்கலைத்துறை மாணவர் சிலர் மட்டக்களப்பு பிரதேச கைவினைகள் பற்றிய தேடலில் ஈடுபட்டு வருகின்றனர்.)

**தமிழர் மத்தியில் சங்கீதம் - வரலாற்று ரீதியான ஓர் அறிமுகம்** என்ற கட்டுரை தமிழ் இலக்கிய வரலாற்று நிலை நின்று சங்ககாலம் தொடக்கம் இன்றுவரையான தமிழ்நாட்டு சங்கீதக் கலையின் வளர்ச்சிப் போக்குகள் பற்றி விவரிக்கின்றது. நுண்கலை கற்கும் மாணாக்கருக்கு நன்கு பயன்தரக்கூடியது.

கலை பற்றிய ஆய்வாளர்/ படைப்பாளர் பார்வை தொடர்பான இரு கட்டுரைகளும் வெவ்வேறு நோக்குடையன.

அவ்விரு கட்டுரைகளுள் ஒன்று **கலைகளும் பாரதியும்** என்பது பாரதியியல். ஆய்வாளர் சிலர் அவ்வப்போது பாரதியை இத்தலைப்பில் அணுகத் தவறவில்லை. ஆயினும் இத்தொகுப்பிலுள்ள இக்கட்டுரை அவற்றிலிருந்து வித்தியாசமானது கவனிப்பிற்குரியது. ஆய்வாளர் முன்வைக்கும் கருத்துக்கள் பின்வருவன:
1) பாரதியின் கலைக் கோட்பாடுகள்: (அ) கலை பயிற்சியால் வருவது, (ஆ) மதிநுட்பத்தால் வருவது, (இ) கடவுளின் கொடையாக வருவது. 2) பாரதியின் கலையின் உள்ளடக்கம் (அ) ஆன்மீகம், (ஆ) அன்றாட நிகழ்ச்சி, (இ) எதிர்காலச் சுபீட்ச வாழ்வு, (ஈ) மரபோடியைந்த புதுமை. 3) கலையின் உருவம் (அ) கலையாக்கம் செம்மை, அழகு, தெளிவு, இறுக்கம் மிக்கதாயிருத்தல், (இ) கலையின் உள்ளடக்க உருவ இயைபு. 4) கலை யாருக்கு? (அ) மக்களுக்கு, (ஆ) பாமரருக்கு - பாரதியின் கலைகள் தொடர்பாக இத்தகைய கருத்துக்களை நூலாசிரியர் பாரதியின் கூற்றுக்களைச் சான்றாகக் கொண்டே முன்வைப்பது குறிப்பிடத்தக்கது.
இப்பிரிவில், கலை பற்றிய ஆய்வாளர் பார்வை என்ற பிரிவில் அடங்கும் மற்றொரு கட்டுரை **தமிழர் கலை வரலாற்றில் மறுபாதி**. கலை என்ற பெரும் பிரிவில் அடங்கும் ஆறு கட்டுரைகளுள் இதுவே ஆழ்ந்த படிப்பில் ஈடுபடும் வாசகர்களது சிந்தனையைத் தூண்டும் கட்டுரை என்று கருதுகின்றேன். மிக முக்கியமான விடயமொன்று இக்கட்டுரையில் பேசப்படுகின்றது. ஆய்வுலகில் அண்மைக் காலம்வரை பிரதான பண்பாடு மட்டுமே கவனிக்கப்பட்டு வந்தமை பற்றியும், உப பண்பாடு கவனத்தை ஈர்க்காமை பற்றியும் கோயில் சிற்பம், ஓவியம், நாடகம், இலக்கியம் ஆகிய துறைகளில் இடம் பெற்று வந்த ஆய்வுகளைச் சான்றாகக் கொண்டு நிறுவப்படுகின்றமை விதந்துரைக்கப்பட வேண்டியதே.

**4. இலக்கியம் பற்றிய கட்டுரைகளின் உள்ளடக்கமும் முக்கியத்துவமும்:**

மேற்கூறிய பிரிவிலே அடங்கும் நான்கு கட்டுரைகளும், புதிய பார்வைக்குட்பட்டவை. இவற்றுள் ஒன்று **கம்பன் ஒரு கலகக்காரன்** சோழப் பேரரசுச் சூழலில் வாழ்ந்த கம்பன் அப்பேரரசனை எவ்வாறு எதிர்த்து வந்துள்ளான் என்பதையும் எவ்வாறு மக்கள் கவிஞனாகத் திகழ்ந்தான் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது அக் கட்டுரை. இங்கு ஆசிரியர் முன்வைக்கும் கருத்துக்களுள் பின்வருவன கவனிப்பிற்குரியன:

1. சமகாலக் கொடுமைகளை அழிக்க, மக்கள் விருப்பப்படி கடவுளே அவதாரம் எடுத்து வரல் (எனவே தான், கம்பன் இராம அவதாரம் என்ற பெயரினை வைத்தமை), 2. சோழ அரசின் குறியீடே இராவணன், 3. மன்னன் பற்றி மனுதர்மத்திற்கெதிரான எடுத்துக்களை கம்பன் முன்வைத்தல், 4. எதிரான கருத்துக்களை முன்வைக்க, பக்தி இயக்கம் காட்டிய வழியைப் பின்பற்றல் எ-டு: மாவலி கதை, இரணியன் கதை, இவ்வாறாக, நம் சிந்தனையைக் கிளறுகிறது கம்பன் ஒரு கலகக்காரன்.

**திருக்குறள்: காலமும் கருத்தும்** என்ற கட்டுரை தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏனைய நூல்களுக்கு கிடைக்காத பெருமை திருக்குறளுக்குக் கிடைத்தமை பற்றி ஆராய்கிறது. அவ்விடத்தில் பொருத்தம் கருதி பின்வரும் பகுதியை எடுத்தாள்வது பயனுடையது:

*''இந்நிலையிலேதான புதிதாகத் தமிழகத்து வந்த மதத்தின் அறஒழுக்கக் கருத்துக்களில் ஏற்க வேண்டியதை ஏற்று - அம்மதங்கள் வாழ்க்கைக்கு கைகொடுத்த தத்துவங்களை அலசி ஏற்க வேண்டியவற்றை ஏற்று ஏற்கெனவே இருந்து வந்த தமிழரின் வாழ்வியற் கருத்துக்களில் எடுக்க வேண்டியதை எடுத்து, அக்கால வாழ்க்கையை விளக்கி, அதற்குத் தக்க ஒரு புதிய வாழ்க்கை நெறியினைத் தருகிறார் வள்ளுவர். அவருடைய அறத்துப் பாலை ஆக்கிரமித்திருப்பவை சமண மதக் கருத்துக்களாகும். பொருட்பாலையும், காமத்துப்பாலையும் ஆக்கிரமித்திருப்பவை தமிழ் நாட்டின் மரபான கருத்துக்களாகும்'' ... (பக் 118)*

**பாரதியும் மரபும்** என்ற கட்டுரையும் முக்கியமான விடயமொன்று பற்றிச் சிந்திக்க வைக்கிறது. ஆரம்பத்திலேயே கட்டுரை ஆசிரியர் அது பற்றித் தெளிவுபடுத்துகின்றார்.

*'பாரதி என்றதும் புதுமை என்ற நினைவே எம் மனக்கண் முன் வருமளவுக்கு அங்கம் பற்றிய மனப்பதிவு எமக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால், பாரதி பழமை பற்றியும் மரபு பற்றியும் சரியான கருத்துக்களைக் கொண்டிருந்தான் என்பதும் தன் எழுத்துக்களில் அவற்றினை நடைமுறைப் படுத்தினான் என்பதும் இதுவரை அதிகமாக அழுத்தப்படாத ஒரு கருத்தாகும்...' (பக் 121)*

→18

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எழுதாத வரலாறு : இன்னொரு பக்கம்

***எழுதாத வரலாறு: இலங்கைத் திராவிட இயக்கம் பற்றிய ஆய்வு, பெ.முத்துலிங்கம், இலங்கை சமூக அபிவிருத்தி நிலையம், கண்டி, ஒக்டோபர் 1996, 126ப., ரூ.100.00***


இந்த நூலை வாசித்த எவருக்கும் இதுவெறுமனே இலங்கைத்-திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேருடைய ஒரு அமைப்பைப்பற்றிய ஒரு கட்டுரை எனவும் அதிலுள்ள தகவல்கள் அந்த அமைப்பின் தலைவராகச் செயற்பட்ட ஏ.இளஞ்செழியனிடமிருந்து பெறப்பட்டவை என விளங்கும். ஒரு ஆய்வு நூல் ஒரு தனிமனிதரது தரவுகளை மட்டும் சார்ந்து எழுதப்படும்போது, அதன் ஆசிரியர் அத் தகவல்களைச் சீர்தூக்கிப் பார்க்கம் தேவைக்கு ஆளாகிறார். அல்லாவிடத்து, அந்த நூல் ஆய்வு சாராதது. தமிழகத்தில் இத்தகைய ஆய்வுகள் நிறையவே நடக்கின்றன. தமிழ் ஆராய்ச்சி பற்றித் தமிழகத்து ஆய்வு வட்டங்களிற் கூட இன்னமும் அக்கம் பக்கம் பாராத ஒரு ஆய்வு நோக்கு இருக்கிறது. இவற்றைக் கொண்டாடி மகிழும் அறிவாற்றலும் இருக்கிறது. ஈழத்திலும் இது கொஞ்சம் தொற்றியுள்ளது.

இந்த நூலில் உள்ள தகவல்கள் சிலவற்றை உறுதிசெய்வது கடினம். ஆயினும் ஒரு சில தகவல்கள் நியாயமான ஐயங்களை எழுப்புவன. இந்த நூலில் இளஞ்செழியன் என்பாரே நூற்பொருளாக அமைவதும் அவரே இயக்கமாகத்தென்படுவதும் நாட்டில் நடந்த பலவற்றுக்கும் அவர் உரிமைகொண்டாடுவதும் இந்த ஐயங்களை வலுப்படுத்துகின்றன. இவை பற்றி விரிவாக எழுதலாம். எனினும் ஒரு சில விடயங்களை மட்டுமே சுட்டிக்காட்டுவது போதுமானது.

இ.தி.மு.க.வை விட வேறிரண்டு இ.தி.முக்கள் இந்நூலில் அடையாளம் காணப்பட்டாலும், பத்திரிகைத் துறையில் முற்குறிப்பிட்ட அமைப்பு செலுத்திய தாக்கம் பெரிது என்று காட்டுமுகமாக, 35 ஏடுகளது பேர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. 1950முதல் 1971வரை வெளியான இவற்றுள் ஒரு வருடத்திற்கும் சற்று அதிகமான காலம் வெளிவந்தவை. உறுதியாக அதிகபட்சம் எல்லாமே ஒரு சில இதழ்களுடன் நின்றவை என்றால் மிகையாகாது. இவை எல்லாமே (இ) இ.தி.மு.கவின் சாதனைப் பட்டியலில் அடங்கும் என்பது எவ்வளவு தூரம் உண்மை என்பதும் ஆய்வுக்குரியது.

இந்த நூலில் உள்ள எட்டுப்படங்களில் ஒன்று கேலிச்சித்திரம். இன்னொன்று (இ) இ.தி.மு.க அரசியற்கட்சியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட நிகழவின் படம். மற்றவை 1961 சத்தியாக்கிரகம், தமிழரசுக்கட்சி தலைவர் செல்வநாயகம் பங்குபற்றிய 1962ஆண்டு (இ) இ.தி.மு.க மாநாடு 1970ல் நோஹுட் மைதானத்தில் நடந்த கண்டனக்கூட்டம் தொடர்பானவை. இந்த இயக்கம் நடத்திய ஆயிரக்கணக்கானோர் பங்கு பற்றிய கூட்டங்கள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், போராட்டங்கள் போன்றவற்றின் மக்கள் திரளையும் காட்டியிருந்தாற் சிறப்பாயிருந்திருக்கும்.

இ.தி.மு.க என்ற பேர் இலங்கை ஏடுகளில் அதிகம் அடிப்பட்ட காலங்கள் இரண்டு. இரண்டிலும் சிங்களப் பேரினவாத விஷமத்தனம் இருந்தது. 1962ல் இ.தி.மு.க , ஸ்ரீ.ல.சு.க. அரசாங்கத்தால் தடைசெய்தபோது ஒரு விளம்பரம் கிட்டியது. இதற்குரிய காரணங்களில் முக்கியமான ஒன்று, சத்தியக்கிரகத்தின் மூலம் தனது அரசியற் கையாலாகாத்தனத்தை வெளிப்படுத்திய தமிழரசுக் கட்சியை மட்டம் தட்டுவதாகும். (இ) இ.தி.மு.கவுடன் நெருக்கத்தை தமிழரசுத் தலைமை நாடிய காரணம் தொண்டமான் மூலம் மலையக மக்களது போராட்டமொன்றை தமக்கு ஆதரவாக நடத்த முடியாது என்ற உண்மையே. தமிழரசுக்கட்சியின் இந்த முயற்சி படுதோல்வியில் முடிந்தது. இந்தச் சூழலில் தமிழரசுக் கட்சியை மேலும் அவமதிக்கும் முறையில் அரசு எடுத்த இந்த நடவடிக்கை அதன் தலைமையின் இயலாமையை வற்புறுத்திக்கூறியது. இதன்பின்பு, சிங்களப் பேரினவாத ஏடான 'தவஸ', அதன் சகோதர ஏடுகளான 'ஸவஸ', 'சன்' என்பன வேண்டுமென்றே 'நாம் தமிழர் இயக்கம்' என்ற பேரில் தினத்தந்தி நிறுவத்தினரான நீ.பா. ஆதித்தன் தமிழகத்தில் தோற்றுவித்து விரைவிலேயே முகவரியில்லாது போன ஒரு சிங்கள இனவாதக் கட்சியான கே.எம்.பி.ராஜரத்தினவின் ஜாதிக விமுக்தி பெரமுன, ஈழத்துத் த்ரொத்ஸ் இயத்தின் பிதாமகரான பிலிப் குணவர்த்தனவின் ம.ஐ.முன்னணி என்பன இருந்தன. இந்த நிலையில் 'தவஸ' செய்தி நிறுவனத்தின் சிங்கள இனவாதம் ஒரு தற்காலிக ஓய்வு பெற்றது ஏன் என்பதை வாசகர்களது ஊகத்துக்கு விட்டு விடலாம்.




அடுத்து 1968ல் (இ) இ.தி.மு.க தன்னை ஒரு அரசியற்கட்சியாகப் பிரகடனம் செய்து பத்திரிகை விளம்பரம் பெற்றபோது, விஷமத்தனம் செய்யும் முறை. இடதுசாரி இனவாதிகளின் கைக்கு மாறிவிட்டது. பாராளுமன்ற அரசியல் சந்தர்ப்பவாதத்தின் விளைவாகச் சீரழிந்த சோவியத் சார்பு கம்யூனிஸ்டுக்கள் சிலரிடம், 1963ன் கட்சிப் பிளவிற்கு முன்னமே இனவாத அரசியல் எண்ணங்கள் தலை தூக்கின. இதன் சாடைகளை பேர்ஸி ஸமரவீர 1962ல் இ.தி.மு.க என்ற பேரில் உள்ள அமைப்புக்களை தடைசெய்யும் படி பேசிய பேச்சில் உணரலாமாயினும் நூலாசிரியர் சரியாகவே கூறுவது போல, அக்கட்சியின் தலைவர் பீற்றர் கெனமன் அவ்வாறான தடையைக் கோரவில்லை.

## எழுதாத வரலாறு: வரலாறு இதில் எழுதப்படவில்லை!

இயக்கத்தையும் திராவிடர் இயக்கத்தையும் இலங்கையில் இருந்த தி.மு.க.க்களையும் குழப்பிக்காட்டித் தமிழரசுக்கட்சியை ஒரு பிரிவினைவாதக் கட்சி என்று சித்திரிக்கும் தமது விஷமத்தை விரிபடுத்தின. 1965ல் நடந்த தேர்தலின் பின்பு, யூ.என்.பி. தலைமையில் அமைந்த எட்டுக்கட்சிக்கூட்டணியில் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ், தொண்டமானின் இ.தொ.க • கடைந்தெடுத்த

1968 -69 காலகட்டத்தில் 'தி.மு.க'வைத் தடைசெய்யும் படி கோரிய ஹேம பஸ்நாயக்கவின் கருத்து எளிதாகவே புறக்கணிக்கப்பட்டது. இந்தத் திமுக விவகாரம் எவ்வாறு வெவ்வேறு பத்திரிகை நிறுவனங்களால் (Timal Daily Mirror, Daily News/ Obsever, அத்த) கையாளப்பட்டது என்பதைக் கவனித்தாற் பத்திரிகைகளிற் செய்திகளை வெளியிடுவது பற்றிய சுவையான சில உண்மைகள் புலனாகலாம்.

நூலில் அரசியல் மிகவும் முக்கியம் பெற்றதாகக் கூறப்படும் இந்த இயக்கத்தை எப்படி எவரும் இருட்டடிப்புச் செய்ய முடியும் என்பது வியப்புக்குரியது தான். எனினும் தமிழர் வாழும் எல்லா இடத்தும் கொடி கட்டிப்பறந்த இந்தத் திராவிட இயக்கத்தைவிட அதிகமாக வடக்கிலும், கிழக்கிலும் மக்களுக்கு நினைவில் இருப்பவை தமிழகத்துத் தி.மு.க. தலைவர்கள், சினிமாக்காரர்களது ஈர்ப்பால் உருவாக்கப்பட்ட பல்வேறு மன்றங்கள் தாம்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, திராவிடர் கழகத்திற்கு ஒரு வரலாற்றுத் தேவை இருந்தது. அதன் வரலாற்றுத் தொடர்ச்சியாகவும், ஈ.வெ.ராவின் பங்களிப்பின் மறுதலிப்பாயும் சீரழிந்த திராவிடக் கட்சிகளும் தமிழக அரசியலின் யதார்த்தத்தின் பிரதிபலிப்புக்களே. ஈழத்தில் ஆடியவை இவற்றின் குழப்பமான நிழல்கள். பார்ப்பனியம் எனப்படும் ஆதிக்கமே இல்லாத ஈழத்தில், சாதியம் பற்றிய அணுகுமுறை வேறாகவே இருக்க முடியும். இதற்கான விடைகளை ஈ.வெ.ரா.விடமோ அவரது திராவிட இயக்கத்திலோ தேட நியாயமும் இல்லை.

இளஞ்செழியன் தனது சாதனைகள் எனக்காட்டும் மிகையான கூற்றுக்களின் ஒரு அபத்தமான முடிவை இங்கு சுட்டிக்காட்டுவது தகும். 1957 முடிவில் தமிழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர்கள் வரவழைக்கப்பட்டு நடத்தத் திட்டமிடப்பட்ட ஒரு கூட்டத்திற்கு அவர்கள் வரவில்லை. அக்கூட்டத்தில் இளஞ்செழியன் பேசும்போது, உயர் சாதியினரைத் தாழ்ந்த 'சாதியினரிடமிருந்து விலக்கக்கட்டப்பட்ட கயிற்றைப் பற்றி விசாரித்தறிந்து கடவுள் சாதிபோல எல்லாவற்றையும் திட்டித்தீர்த்து தொண்டர்கள் திரியாகத் தழும்பு தாங்கிய கதை கூறப்பட்டுள்ளது. இக்கூட்டத்தை கூட்டியவர்கள் யாழ்ப்பாணத்துப் பகுத்தறிவு வாதிகள் கயிறு அவர்கள் அறியக் கட்டப்பட்டதே. இது பற்றி நாம் என்ன நினைக்கிறோம்? (கம்யூனிஸ்ட்டுகள் தமது கூட்டங்களில் இவ்வாறு என்றுமே கயிறு கட்டவில்லை என்றும் அறிகிறேன்).

இளஞ்செழியனே சாதியத்திற்கெதிரான போராட்டத்தின் முன்னோடி எனவும் நம்பும்படி தூண்டப்படுகிறோம். சாதியத்திற்கெதிரான போராட்டம், கம்யூனிஸ்ட் கட்சி தோன்ற முன்னமே தோன்றிவிட்டது. ஆயினும் ஸ்தாபன ரீதியான போராட்டமும் வர்க்கக்கண்ணோட்டத்துடன் அதை வழிநடாத்தி வெல்லப்பட்டவையும் 1956ல் ஏற்பட்ட மாற்றங்களாற் துரிதமடைந்தவை. தமிழ் இடதுசாரிகளது வரலாற்று முக்கியம் வாய்ந்த பங்களிப்பு, சாதியம் தொடர்பானது ஈழத் தமிழ்த் தேசியவாதம், சாதி விடயத்தில், தமிழகத்துத் தேசியவாத சக்திகளினின்றும் வேறுபட்டது என்பதும் ஒரு முக்கியமான உண்மை.

இனவாதியாகவே செயற்பட்ட விஜேவீரவுடன் இளஞ்செழியனுடைய கூட்டு தமிழரசுக்கட்சியுடனான ஒற்றுமை, தமிழகத்து தி.க., தி.மு.க. போன்றவற்றோடு ஏற்பட்ட உறவும் முறிவும் போன்றவற்றைத் தொகுத்து நோக்கும்போது, தமிழகத்தில் இன்றைய திராவிட இயக்கங்களின் சாயல் மிகவும் தெரிகிறது. இங்கு (இ)இ.தி.மு.க அவர்களுக்கு ஒரு முன்னோடி என்று சொல்ல முடியுமா?

இந்த நூலின் தலைப்பு ஒரு வகையில் மிகவும் பொருத்தமானது. வரலாறு இதில் எழுதப்படவில்லை.

சி. சிவசேகரம் •

---

17 →

## கலை...

ஆகவே, இதுபற்றி விரிவாக ஆராய முற்படுகிறது பாரதியும் மரபும். போகிற போக்கில் கட்டுரையாளர் கூறும் கருத்தொன்று மனங்கொள்ளப் படவேண்டியது. பாரதி மரபையுணர்ந்து மரபினின்றும் மாறினான் என்பதே அதுவாகும். தான் எடுத்துக் கொண்ட விடயத்தை சரியென நிறுவுவதில் வெற்றி பெற்றுள்ள ஆசிரியர் இறுதியாகக் கூறும் விடயம் நமது எல்லோரது கவனத்திற்குமுரியதாகிறது. அவர் கூறுவது இதுதான்;

> *''... மரபின் அடியாக இப்புதிய கருத்துக்களை வழங்கியமையினாலே வெகு இலகுவாக அவன் கருத்துக்கள் மக்களிடம் சென்றன. பாரதியிடம் நாம் கற்க வேண்டிய பாடங்களுள் இதுவும் ஒன்று...'' (பக்.127)*

நூலாசிரியர் மேற்கூறிய கட்டுரையை எக்காலப்பகுதியில் எழுதினார் என்பது தெரியவில்லை. ஆனால் இன்றைய ஆரோக்கியமற்ற கலை இலக்கியச் சூழலில் கட்டுரை கூறும் விடயங்கள் முக்கியமானவை. ஆரோக்கியமென்று நான் கருதுவது எதனை? குறிப்பாக தொண்ணூறுகளுக்குப் பிற்பட்ட ஈழத்தின் இளை[ய] தலைமுறை தனக்கு முற்பட்[ட] இலக்கிய வரலாற்றை (நவீன இலக்கியத்தை எடுத்துக் கொண்டால், புதுமைப்பித்தன் கதைகளைக்கூட) அலட்சியப்படுத்துகின்றது. இன்றுள்ள மூத்த தலைமுறை புதுமைக் கருத்துக்களை (எடுத்துக் காட்டாக, அமைப்பியல் வாதம், பின்நவீனத்துவம்) எள்ளி நகையாட முற்படுகிறது

என்றே நான் கருதுகின்றேன். இத்தகைய ஆரோக்கியமற்ற இலக்கியச் சூழலில், பாரதியிடம் நாம் கற்கவேண்டிய பாடங்களுள் இதுவும் ஒன்று அல்லவா?

கலை என்ற பகுதியில் உள்ள தமிழர் கலை வரலாற்றில் மறுபாதி என்ற கட்டுரைக்குக் கொடுத்த முதன்மையிடத்தை இலக்கியம் என்ற இப்பகு[தி]யில் விமர்சகர்களும் சமகாலப் பிரச்சினைகளும் என்ற இக்கட்டுரைக்குக் கொடுக்கலாம். நவீன இலக்கியம் தொடர்பான சர்ச்சைக்குரிய முக்கியமான சில வினாக்கள் இங்கு எழுப்பப்படுகின்றன:

1. சமகாலம் என்பதன் காலவரையாறை யாது?

2. இலக்கியம் சமகாலத்தினைப் பதிவு செய்வது அவசியந்தானா?

3. பலவகையான யதார்த்தங்களுள் எதனைப் பின்பற்றுவது?

4. இந்நிலையில் விமர்சகனது தகுதி யாது? கடமை யாது?

இவை நூலாசிரியருக்கு மட்டுமல்ல, எமது தேடலுக்குமுரியனவாகின்றன.

இறுதியாக ஒன்று கூறி, எனது உரையை முடிக்கலாமென கருதுகின்றேன். பத்து கட்டுரைகள் கொண்ட இத்தொகுப்பில், ஆழ்ந்த படிப்பில் ஈடுபடும் வாசகருக்கும், ஆய்வாளருக்கும் பயன்படக்கூடிய ஏழு கட்டுரைகள் (முதலாம், இரண்டாம், ஐந்தாம் கட்டுரைகள் தவிர) காணப்படுகின்றமை - அவற்றுள் சில காலத்தினால் முற்பட்டனவாயினும் - வரவேற்கக்கூடிய விடயமே. இவ்விதத்தில் இந்நூலினை வெளியிட்ட குமரன் பதிப்பகம் நன்றிக்குரியது.

**-செ.யோகராசா**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வாசகர் சொவ்வடி



## மேசை ஓரத்தில் இடமில்லையா?

நட்சத்திரன் செவ்விந்தியன், 'பனியும் பனையும்' நூல் பற்றிய திறனாய்வு என்ற பேரில் (135) இதழ் பலரையும் தாக்கமுற்பட்டுள்ளார். ''முருகையன் ஒரு கவிஞரல்ல'' என்ற அபாரமான கண்டுபிடிப்பைச் செய்த இந்த மாமேதையிடம் வசவு கேட்பது மோதிரக்கையாற் குட்டு வாங்குகிற மாதிரி. எனவே எஸ்.பொன்னுத்துரை முதல் கைலாசபதி வரை பலரும் அவரால் கௌரவிக்கப்பட்டோரா கின்றனர்.

இலக்கியமோ திறனாய்வோ நடுநிலைப்பட்டனவல்ல. எனினும், அவற்றிற் புறவயமான (தூலமான) நோக்கிற்கு ஒரு தேவை உண்டு. கைலாசபதி, மஹாகவி விடயத்திற் தவறுவதற்கு அவர் மட்டுமே பொறுப்பல்ல. அச்சூழலில் ஏற்பட்ட இலக்கிய, அரசியல் மோதல்களும் அதிற் பங்கு வகிக்கின்றன. கைலாசபதியையும் அவர் சார்ந்திருந்த இலக்கியக் கொள்கையை எதிர்த்தோரும் அதற்குக் காரணமாயிருந்தனர். மஹாகவியின் பங்கிலும் சில குறைபாடுகள் இருந்தன. உதாரணமாக, ''நண்டெழுத்து வேண்டாம் நமக்கு'' என்று சிங்கள மொழி மீது துவேஷங் காட்டும் நோக்கைக் கொண்ட வெண்பாப் போட்டிக்கு அடி எடுத்துக் கொடுத்தவர் அவர். மட்டக்களப்பிலிருந்த கவிஞர் சுபத்திரன், சாதியத்தை எதிர்த்து எழுந்த போராட்டத்திற்காகக் குரல் கொடுத்த போது, ஒரு போராட்டக் களமாகிய மாவிட்டபுரத்தின் அயலில் வாழ்ந்த மஹாகவியின் குரல் கொஞ்சம் தணிந்தே எழுந்தது. இதன் விளைவாக, முற்போக்குச் சிந்தனை சார்ந்த எழுத்தை அந்தச் சூழலில் வலியுறுத்திய கைலாசபதி, மஹாகவியைப் போற்றவும் இயலாது, தூற்றவும் இயலாது அவர்பற்றி எழுதுவதைத் தவிர்த்தார். இருட்டடிப்பு என்ற சொல்லை எடுத்த எல்லாவற்றிற்கும் பிரயோகிப்பது அறிவுசார்ந்ததல்ல. மஹாகவி நன்கு அறியப்பட்ட ஒரு கவிஞர். அவரை இருட்டடித்து உலகறிய முடியாமற் செய்வது கைலாசபதியாலும் இயலாது. இந்தப் போராட்டச் சூழலின் பின்பு, ஈழத்து இலக்கியம் பற்றிய தனது மதிப்பீடுகளில் கைலாசபதி மேற்படி தவறைத் திருத்திக் கொண்டார் என்பதும் முக்கியமானது. நிச்சயமாக, இப்பிரச்சினைப்பற்றிய தகவல்களை ந. செவுக்கு வழங்கிய நபர், முற்குறிப்பிட்ட விவரங்களை 'இருட்டடிப்பு' செய்திருக்கிறார். இதை விட மோசமான 'இருட்டடிப்புக்கள்' நடக்கின்றன. பிறரிடம் பெற்ற தகவல்களைத் தம்மவை போல வழங்கி மூலத்தை 'இருட்டடிக்கும்' செயல்கள் நிறையவே நடக்கின்றன. அண்மையில் நான் 'கிழக்கும் மேற்கும்' தொகுப்பில் எழுதிய கட்டுரையில் வந்த ஒரு கருத்து பாரிஸ் ஈழமுரசு ஏட்டில் எவராலோ தனது கண்டுபிடிப்பு என்றவாறு எழுதப்பட்டிருந்தது. இது எனக்கு முதற்தடவையுமல்ல, எனக்கு மட்டுமே நிகழ்வதுமில்லை. யூ.என்.பி., ஸ்ரீ.ல.சு.க., தமிழரசு, சோவியத் சார்பு கம்யூனிஸ்ட்டு பிரமுகர்கள் அதிகாரத்தில் இருந்தபோது ''காட்ட வேண்டியதைக் காட்டிப் பெறவேண்டியதைப் பெற்ற'' பின்பு, தமது நேர்மை பற்றிப் பேசுகிற புண்ணியர்கள் மலிந்த பூமி இது.

ந.செ. கட்டுரையில், விமர்சன நோக்கை விட எவருக்கேன் குட்டுப் போடும் அவசரம் மிகுதி பொன்னம் பலத்திறைவனிடம் வாங்கிய ஆயுதத்தை அவனிடமே சோதிக்க முற்பட்ட பஸ்மாசுரன் போல, அவரும் பொன்னுத்துரை மீதே கைவத்ததோடு, சகட்டுமேனிக்கு, இந்திரா பார்த்தசாரதிக்கும் சாற்றியுள்ளார். (இ.பா.ஒரு வைணவப் பார்ப்பனர் என்ற தகவலையும் கூறியிருந்தால் சில பகுத்தறிவு நெஞ்சங்கள் மிகவும் கிளுகிளுப்பு அடைந்திருக்கும்.)

இறுதியாகச் சரிநிகரிடம் கேட்கிறேன்: ஆதாரமின்றி, மற்றவர்கட்கு நோக்கங் கற்பித்து எழுதப்படுபவனவற்றைப் போட சரிநிகர் அலுவலக மேசை ஓரமாக ஒரு இடமில்லையா?

**சிவசேகரம்**
**கொழும்பு**

## குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே... பற்றி

நமது சமுதாய அமைப்பில் இன்று நாம் காணுகின்ற மனு நீதிக்கும் புறம்பானதாக மானுட நேயமுள்ளவர்களால் இனம் காணப்பட்ட, பெண்கள் சமுதாயத்தின் இரண்டாம் தரப்பிரஜைகள் என முத்திரை குத்தப்பட்ட வேலை, கல்வி பொழுது போக்கு என்பவற்றின் மீதான பாகுபாட்டுக்கு ஊக்கம் அளிப்பதாக இக்கட்டுரை அமைந்திருப்பதை வெளிப்படையாகக் காணக்கூடியதாக இருந்தது.

இனங்களுக்கிடையே சமத்துவம் வேண்டும், சம உரிமை வேண்டும் என்று உலகு முழுவதும் போராட்டங்கள் மேலோங்கி நிற்கின்ற இந்தக் காலகட்டத்தில் இயற்கையிலேயே ஓரினமான இப்பெண்ணினம் பற்றி இந்த எழுத்தாளரோ அதனை மொழி பெயர்த்து வெளியிட முன்வந்த அன்பரோ ஏன்? சிந்திக்கவில்லை? சமுதாயத்தின் பெண்களின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு வேர்விட ஆரம்பித்துள்ள இந்தக் காலகட்டத்தில், சரிநிகரில் கூட பெண்களின் போராட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் விடயங்கள் வெளியாகும் வேளையில் அதற்கு நேர்மாறான இக்கட்டுரையை சரிநிகர் (?) ஏன் வெளியிட்டது என்பது என் போன்ற பலரின் உள்ளத்தில் தோன்றியுள்ள கேள்வியாகும்.

இன்று நமது நாட்டில் என்ன நடைபெறுகிறது? வெளிநாடுகளுக்குச் செல்லும் எம் ஆண் சகோதரர்கள் அங்கு ஆண்களுக்கான தொழிலைத்தான் செய்கிறார்களா? கடையில் சமையல் வேலைகளிலும், தையல் தொழிலிலும் ஈடுபடுபவர்கள் மிகப் பெரும்பான்மை ஆண்கள் இல்லையா? பெண்களின் திறமைகளோ, வலிமைகளோ, சிந்தனைகளோ பின் தங்கியவை என்று விஞ்ஞானமாயினும் சமய நூல்களாயினும் நிரூபிக்கின்றனவா? சரிசமமான முறையில் வளர்க்கப்பட்ட ஓர் ஆணையும், ஓர் பெண்ணையும் அவர்கள் சமுதாயத்தின் தாக்கத்திற்கு உட்பட முன்னரான காலகட்டத்தில் ஒப்பிட்டுப் பார்ப்போமாகில் இருவரும் ஏதேனும் சிலவகைகளில் முழுமையாக வேறுபட்டிருப்பினும் சராசரியான அவர்களது திறமை, சக்தி சிந்தனை அனைத்திலும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்பவற்றை உணர்த்தும். ஆனால் இக்கட்டுரையில் நாம்காண்பது போல ஆண்பிள்ளைக்கென்று ஒருவிதமான கல்வியும், பொழுது போக்கும் பெண்களுக்கென வேறுவிதமான கல்வியும் பொழுது போக்கும் அமையுமானால் பெண்கள் இன்றுள்ள சபிக்கப்பட்ட இரண்டாம் தர நிலையிலேயே தொடர்ந்தும் இருக்க நேரிடும். கல்வித்திட்டங்களையே மாற்றியமைப்பது பற்றி ஆராயப்பட்டுக்கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் இவ்வாறு ஒரு ஆக்கம் வெளிவருவது வேதனைக்குரியதாகும்.

பாடசாலைக்காலம் தான் தகப்பனாருடன் மகனும், தாயாருடன் மகளும் கொண்டுள்ள உறவு வலுப்பெறுவதற்கான ஒரு நல்ல காலமாகும்' என்ற வாக்கியத்தைத் தொடர்ந்து வருகின்ற பகுதி நாமே தான் குழந்தைகளை பாடுபடுத்தி வைக்கின்றோம் என்பதை தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தி நிற்பதை மிக மனவேதனையையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இன்று உலக நாடுகளில் குறிப்பாக வளர்முக நாடுகளில் பெண்களின் குருதிச் சோகை, உடல் நோவுகள், வாதக்குணங்கள் போன்ற நோய்களுக்கான பிரதான காரணம் அவர்கள் வேலைப்பழுவுடைய உணவு விடயத்தில் கூட இரண்டாம் தரமுடைய தொழிநுட்பமற்ற தொடர்ச்சியான உடலுழைப்பிற்கு உள்ளாகிறார்கள் என்பதே. நாட்டை நாடு சுரண்டுவதைவிட, இனத்தை இனம் சுரண்டுவதை விட, பெண்ணை ஆண் சுரண்டுவதென்பது மிகக்கொடுமையானதும் நாட்டை மிகவும் பின்னடையச் செய்வதுமாகும். எனவே தயவு செய்து சம்பந்தப்பட்டவர்கள் ஆதிகாலப் பெண்பற்றியதும், மனித நேயம் பற்றியதும், பெண்கள் வரலாறு பற்றியதுமான நூல்களையோ ஆக்கங்களையோ வாசிப்பதோடு அபிவிருத்தியில் பெண்களின் பங்கு பற்றிய ஆண்களாலேயே ஆராய்ந்து வெளியிடப்பட்ட ஆக்கங்களையும், வாசித்தறிய வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆர். எம். ராஜகுமாரி**
**திருகோணமலை**

## நல்லதோர் அனுபவப் பகிர்வு!

சரிநிகர் 136இல் சேரன் எழுதிய அப்பாஸ் கியோறற்றமியின் Taste of Chery என்ற திரைப்படம் பற்றிய கட்டுரை மற்றும் அந்த நெறியாளரின் பேட்டி என்பன திரைப்படத்தை ஒரு தீவிர கலை வெளிப்பாட்டுச் சாதனமாகப் பார்ப்பவர்களுக்கு நல்லதொரு அனுபவப் பகிர்வு.

கடந்த மற்றும் இவ்வாண்டுகளில் கொழும்பில் நடைபெற்ற ஈரான் திரைப்பட விழாக்களில் சில ஈரானியத் திரைப்படங்களைப் பார்த்த போது மிகவும் பிரமிப்பே எனக்கும் ஏற்பட்டது. மத அடிப்படைவாதம் மேலோங்கிய ஒரு நாடாக மனதில் படிந்திருந்த ஈரானில் உருவ, உள்ளடக்க ரீதியில் கண்களை அகலச் செய்யும் திரைப்படங்கள் வெளிவருவது எவ்வாறு சாத்தியமாகின்றது என்று எண்ணியதுண்டு. எவ்வித வியாபாரத் தனமுமில்லாத செய்நேர்த்தி மிக்க திரைப்படங்கள் ஈரானிய மக்களின் வாழ்வை **ஏதோ** ஒரு விதத்தில் வெளிப்படுத்துவனவாக இருந்தன. இவ்வாண்டு இடம் பெற்ற திரைப்பட விழாவில் Blue Vield, Nargess போன்ற திரைப் படங்களை இயக்கிய Rakhshan Baani Etamad esfமற்றும் Lost Time என்ற திரைப்படத்தை இயக்கிய Pouran Derakhshandeh . போன்ற பெண் இயக்குனர்களைப் பற்றிக் குறிப்பிட்டேயாக வேண்டும். சமூக உறவுகளை வெளிப்படுத்தும் போது அவர்களுக்கிருக்கும் சமூகப்பார்வையும் திரைப்படம் என்ற ஊடகத்தைக் கையாளும் போது வெளிப்படும் அவர்களது கலையாற்றலும் ஈரானில் பெண்கள் வகிக்கும் நிலை பற்றிய எமது புரிதலை மாற்றி விடக்கூடியன.

சேரன் தொடர்ந்தும் நல்ல திரைப்படங்கள் பற்றி எழுதட்டும்.

***சசி கிருஷ்ண மூர்த்தி***
**கொழும்பு**

## திருத்தம்

இதழ் 136இல் வெளியான சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையில் நான்காவது பத்தியிலுள்ள ஆறாவது பந்தியில் "புலிகளை இனங்கான இவர்கள் உதவுவதாகவும் கூறப்படுகிறது." என்று இருப்பது "புலிகளை இனங்காண முன்னாள் புலி உறுப்பினர்கள் உதவுவதாகவும் கூறப்படுகிறது" என்று இருந்திருக்க வேண்டும். இதே போல அதே பந்தியில் "தமிழீழ விடுதலை இயக்கம்" என இருப்பது "தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்" என்று இருந்திருக்க வேண்டும். இவ்வாறே எஸ்.வி.ராஜதுரை அவர்களின் கட்டுரையிலும் அச்சுத் தவறொன்று ஏற்பட்டுள்ளது. இத்தவறு குறித்த விபரத்தை இப்பக்கத்தில் பிரசுரமாகியுள்ள அவரது கடிதம் விளக்குகிறது.

இவற்றால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம்.

-ஆ-ர்

## பயங்கரமான பிழை!

'எழுதாத வரலாறு' குறித்து சிவசேகரம் எழுதியவற்றுக்கு நான் எழுதிய நீண்ட பதிலை பிரசுரித்தமைக்கு நன்றி. ஆனால் கடைசிப் பகுதியில் (சரிநிகர் 136) பெரியார் கொலை செய்யப்பட்டு விட்டார்! ''... எந்தக்காரியம் எப்படி இருந்தாலும் அரசியலில், பொதுவாழ்கையில் கண்டிப்பாக மனித தர்மம் தவிர வேறு எந்த கால தர்மமோ சமய தர்மமோ புகுத்தப்படக்கூடாது...'' என்ற அவரது வாசகம் ''...கண்டிப்பாக மனித தர்மம் புகுத்தப்படக் கூடாது....'' என்று அச்சாகியுள்ளது. எவ்வளவு பயங்கரமான பிழை!

எழுத்தாளர் ராஜன் குறை அவர்களது பெயர் 'ராஜன் குரே' என்று இரு இடங்களில் தவறாக அச்சிடப் பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாட்டிலிருந்து எங்களைப்போன்றவர்கள் எழுதும் தமிழை அவ்வாறே ஏற்றுக்கொள்ளும் படி வேண்டுகிறேன். எடுத்தாக்காட்டாக நாங்கள் 'ஆகஸ்ட் என்றுதான் எழுதுகிறோமேயன்றி 'ஓகஸ்ட்' என்றல்ல.

**எஸ்.வி.ராஜதுரை**
**சென்னை**

## தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதிகள்?

மட்டக்களப்பு வந்தாறுமூலை பொதுஜன அபிவிருத்தி மன்றமும், தடாகம் என்னும் நிறுவனமும் இணைந்து மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்த முற்பட்டபோது இராணுவம் அதற்குத் தடைவிதித்தது. 500க்கும் மேற்பட்ட பொது மக்கள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்திருந்தனர். தங்களது வளாகக் கதவில் இருந்து வீதியில் 100 யாருக்கு மேல் செல்ல முடியாத நிலை இருந்தது. வளாகத்தினுள்ளே பொதுக்கூட்டமும், நிகழ்ச்சிகளும் நடந்தேறியது. எது எவ்வாறிருப்பினும் மாலை 6மணிக்குப் பிறகு நடமாட முடியாத பகுதியில் இவ்வாறான ஊர்வலத்தை நடத்த அனுமதிக்கவில்லை என்பதில் வியப்பேதும் இல்லை.

இப்படிவத்தின் ஏழாவது கேள்வி குறித்த நபர் சார்ந்துள்ள அரசியல் கட்சி எது என வினவுகிறது. அரசியல் கட்சியில் சேர்வதோ அல்லது சேராமல் இருப்பதோ ஒருவருடைய ஜனநாயக உரிமையாகும். இதை அறிய முயல்வது ஜனநாயக உரிமை மீறலாகும். அரசாங்க ஊழியர்களைப் பொறுத்த மட்டில் சத்தியப்பிரமாணம் எடுத்துத் தான் அரச சேவைக்கு வருகின்றார்கள். இந்நிலையில் இவ்வாறான ஒரு வேலையை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் செய்து வருவது இராணுவரீதியாக பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவது மட்டுமல்லாமல் உளவியல் ரீதியான தாக்கத்தையும் ஏற்படுத்தி வருகின்றது.

இதேவேளை இராணுவப்புலனாய்வுத் துறை அரச அலுவலகங்களிலும் திணைக்களங்களிலும், சங்கங்களிலும் வேலை செய்யும் ஊழியர்களின் தகவல்களை அதன் தலைவர்களினூடாகத் திரட்டி வருகின்றது. இந்தத் தகவல் திரட்டும் படிவத்தில் கேட்கப் பட்டுள்ள கேள்விகள் அனைத்தும் தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என்ற தோரணையிலேயே கேட்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a newspaper in Sri Lanka.

# அம்புலன்ஸ்க்கும் குறி!

நிலாவெளி வைத்தியசாலையில் இருந்து குச்சவெளி நோக்கிப் போய்க் கொண்டிருந்த அம்புலன்ஸ் ஊழியர்கள் பரிதாபகரமாக சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர். குச்சவெளி இராணுவ முகாமில் உள்ள ஒருவருக்கு ஏற்பட்ட கடும் சுகவீனம் காரணமாக இந்த அம்புலன்ஸ் வண்டி அழைக்கப் பட்டதாக ஆஸ்பத்தி வட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்த ஞாயிறு (14.12.97) இரவு கிடைத்த அவசர அழைப்பைத் தொடர்ந்து எம். சௌந்தரராஜன் (சாரதி), வி.டில்லிராஜா (உதவியாளர்) ஆகியோர் 8.15 மணியாளவில் புறப்பட்டு அங்கிருந்து 13 மைல் தொலைவிலுள்ள குச்சவெளியைச் நோக்கிப் போய் இருக்கிறார்கள். போனவர்களை உயிரற்ற சலடமாகவே அடுத்த நாள் கொண்டு வர முடிந்தது.

சாரதி சௌந்தராஜன் ஒரு குழந்தையின் தந்தை. உதவியாளர் டில்லிராஜன் ஐந்து குழந்தைகளின் தந்தை. இந்தச் சம்பவத்தால் வைத்தியசாலை வட்டாரங்கள் கலங்கிப்போய் இருக்கின்றன. சுட்டவர்கள் யார் என்று உறுதியாகத் தெரியவில்லை. மரண விசாரணை அதிகாரி மு.பொ.செல்வராசா கொலையென்று தீர்ப்பளித்திருக்கிறார்.

இவ்வாறு நிகழ்ந்தது முதல் தடவையல்ல. கடந்த 7.6.97 அன்று இரவு கந்தளாயில் இருந்து நோயாளி ஒருவரை திருகோணமலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து ஒப்படைத்த பின்னர் கந்தளாய் திரும்பிக்கொண்டிருந்த அம்புலன்ஸ் இந்தப்பாதையிலேயே தாக்குதலுக்கு உள்ளாகி மகேந்திரன் என்ற ஊழியர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். வேறு சிலர் காயமடைந்தனர்.

இரண்டு சம்பவங்களும் ஒரே பாதையிலேயே இடம்பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. உயிர்காக்கும் பணியில் ஈடுபடுகின்ற சுகாதாரத் திணைக்கள ஊழியர்களே கடமையின் போது உயிர்விடுகின்ற துர்ப்பாக்கிய நிலையை எண்ணி யார் தான் கவலைப்படப்போகிறார்கள். மகேந்திரனின் மரணத்திற்கே இன்னும் நஷ்டஈடு வழங்கப்படாத நிலையில் மேலும் இரண்டு ஊழியர்களின் மரணங்கள்...?

யுத்தத்தின் கோரப்பசிக்கு இன்னும் எத்தனை ஜீவன்கள் தேவையோ?

- விவேகி

# பையைப் பார்த்து வாங்கவும்!

அண்மையில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த செல்லையா தவமணி தேவி என்ற 60வயதுப் பெண்மணியும், அவரது சகோதரரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப் பட்டுள்ளனர். இவர்களின் கைதுக்கான காரணம் இவர்கள் கொண்டு வந்த பிரயாணப்பையில் கொத்மலை, கந்தளாய் நீர்த்தேக்கங்களின் படங்களும், விகாரமகாதேவி பூங்காவின் படமும் பொறிக்கப்பட்டிருந்தது என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். இவர்கள் இரத்மலானையில் இருந்து பலாலி வரும் வரை யாரும் இவர்களது பையைப்பற்றி கவலைப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் இறங்கி அச்சுவேலி நோக்கிச் செல்லும் போதே முத்திரைச் சந்தியில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளனர். கீரிமலையைச் சேர்ந்த இவர்கள் தற்போது இடம்பெயர்ந்து அச்சுவேலியில் வசித்துவருகின்றனா. இது தொடர்பாக தவமணியின் கணவர் செல்லையா இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்ட போது அவர் இதேமாதிரி பிரயாணப் பை கொழும்பில் விற்பனையாகிறதா என விசாரித்துவிட்டு விடுவோம். ஒன்றுக்கும் பயப்படாதீர்கள். அவர்கள் காணாமல் போகமாட்டார்கள். காங்கேசன்துறையில் தான் இருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் மீது இராணுவத்தினர் தொடமாட்டார்கள் எனவும் கூறினாராம்.

இவ்விடயத்தைச் செய்தியாக வெளியிட்ட கொழும்பு சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் வரைபடங்களுடன் இரு புலிகள் கைது எனச் செய்தி வெளியிட்டிருந்தன.

# விரட்டியவர்கள் அழைக்கிறார்கள்!

கடந்த 23.9.97 இல் இடம்பெற்ற கோரத்தாக்குதலின் விளைவாக இடம்பெயர்ந்து சேனைக்குடியிருப்பு கணேச வித்தியாலத்தில் தங்கி வந்தவர்கள் 4ம்கொலனியில் மீளக் குடியேற ஆரம்பித்துள்ளனர்.

எந்தப்பொலிசாரால் விரட்டியடிக் கப்பட்டனரோ, அதே பொலிஸ் அவர்களை மீளக் குடியேற அனுமதித்துள்ளது. புதிய ஓ.ஐ.சி. நல்லவராம். என்ன நடந்தாலும் விடமாட்டேன் நான். அதற்கு உத்தரவாதம் என்று மாநாட்டில் மக்களிடையே கூறி ஆதரவைப்பெற்றாராம். அதே வேளை நம்பி வந்த மக்களுக்கு எஸ்.டி.எப். படையதிகாரி கூறினாராம்: ''இங்கு வேறு யாராவது நடமாடினால் எமக்கு அறியத் தரவேண்டும் இல்லையேல்...'' என்று கடுகடுப்பாக.

புலியைக் காட்டிக்கொடுப்பதென்பது கடந்த கால அனுபவங்களிலிருந்து கஷ்டம் என்பது தெளிவு. மற்றையது பொலிஸ் நிலையத்தில் தான் எஸ்.டி.எப் படையும் உள்ளதாம்.

அப்படியெனில் மீண்டும் 4ம்கொலனி தரிசாகுமா?

-நேசன்.

# "கதறக் கதற வெட்டினார்கள்!"

மட்டக்களப்பில் 1990ம் ஆண்டு நடந்தேறிய ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொது மக்களின் கொலைகளில் சத்துருக்கொண்டான் (கும்பிளமடு) இராணுவ முகாமில் நடத்தப் பட்ட 150 அப்பாவிகளின் கொலைகள் வரலாற்றில் மறக்கமுடியாததாகும்.

இந்தச்சம்பவத்தில் உயிர் தப்பிய கொக்குவிலைச் சேர்ந்த க.கிருஷ்ணகுமார் (39) தமது அனுபவத்தை அண்மையில் சரிநிகருக்கு தெரிவித்திருந்தார்.அவரது அனுபவம் இது:

''1990ம் ஆண்டு செப்.09ம் திகதி பி.ப. 6மணியளவில் சத்துருக்கொண்டான் இராணுவத்தினர் பிள்ளையாரடி, கொக்குவாய் பனிச்சயடி, சத்துருக்கொண்டான் ஆகிய கிராமங்களைச் சுற்றிவளைத்து முகாமுக்கு அழைத்துச் சென்று முகாமின் முன்பக்கமுள்ள பெரிய அறையில் அனைவரையும் அடைத்து வைத்தார்கள். இரவு 8 மணியிருக்கும் முகத்தில் கறுப்புத் துணிகட்டிய நான்கைந்து இராணுவத்தினர் கதவைத் திறந்து உள்ளே வந்தார்கள். உள்ளே வந்தவர்கள் முன்வரிசையில் அமர்ந்திருந்த என்னையும், குமார், சின்னத்தம்பி, ஜீவரெத்தினம் ஆகியோரையும் தேர்ந்தெடுத்து வெளியில் அழைத்து வந்து முகாமின் பின்பகுதிக்கு கூட்டிச் சென்றார்கள். அழைத்துச் செல்லும் போது எங்களுடைய சேட்டைக்கழற்றிப் பின்பக்கமாகக் கைகளைக் கட்டியே கூட்டிச் சென்றார்கள்.

நாங்கள் இருந்த இடத்தில் இருந்து பின்பக்கமாக 50 யார் வரை கூட்டிச் சென்றனர். அங்கு ஒரு முந்திரிகை மரம் இருந்தது. அதற்கு அருகில் 20அடி நீளக் கிணறு ஒன்றும் இருந்தது.

எங்களை மடுவுக்கு அருகில் கூட்டிச் சென்ற போது மடுவைச் சுற்றி இராணுவத்தினர் சூழ்ந்து நின்றனர். திடீரென்று இரண்டு இராணுவத்தினர் பொல்லுடனும், வாளுடனும் வந்தனர். பொல்லுடன் வந்தவன் எங்களைத்தாக்கினான். நான் ஒரு அடியுடன் நிலத்தில் விழுந்து விட்டேன். வாள் வைத்திருந்தவன் ஒவ்வொருவராக மடுவுக்குள் தள்ளி வயிற்றுக்கு குறுக்காக வெட்டினான். பொல்லு வைத்திருந்தவன் என்னைத் தூக்கி சிறிய கத்தியால் நெஞ்சில் குத்தி மடுவுக்குள் தள்ளும் போது முதுகிலும் ஒரு குத்து குத்தினான்.

எங்கள் நான்கு பேரையும் மடுவுக்குள் தள்ளி விட்டுச் சென்றவர்கள் நான்கு பெண்களைக் கூட்டி வந்தார்கள். இவர்களுள் கர்ப்பிணிப்பெண்ணும் ஒருவர். நான்கு பேருக்கும் ஆடைகள் களையப்பட்டது. அப்போது அவர்கள் கத்தினார்கள். உடனே அவர்கள் கட்டியிருந்த கறுப்புத் துணிகளை வாய்க்குள் திணித்து பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார்கள். அவர்களுடைய மார்பகங்கள் துண்டாக்கப்பட்டது. கதறக்கதற அங்கமங்கமாகவெட்டி மடுவில் போட்டார்கள்.

இத்தனைக்கும் நான் இறந்து கிடப்பது போல் நடித்து நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். மடுவப்பகுதி இருட்டாக இருந்ததால் என்னை இராணுவத்தினர் கவனிக்கவில்லை. கடைசியாகக் கொண்டு வந்த மூன்று இளம் பெண்களும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டு பக்கத்தில் இருந்த கிணற்றுக்குள் போடப்பட்டார்கள். நான் மெதுவாக தவழ்ந்து தவழ்ந்து மேற்பகுதிக்கு வந்து வேலியைத் தாண்டிப் பின்பக்கமாக இருந்த பற்றைக்குள் ஒழிந்து கொண்டேன்.

கிட்டத்தட்ட ஒரு மணிநேர'இடைவெளியின்பின் அவ்விடத்துக்கு ரயர் ஏற்றப்பட்ட லொறி ஒன்று வந்தது. வெட்டப்பட்டுக் கிடந்தவர்கள் மேல் ரயர் போட்டு நிரப்பப்பட்டு தீமூட்டப்பட்டது. ரயர் பற்றி எரியும் வரை இராணுவத்தினர் அனைவரும் அவ்விடத்திலேயே நின்றார்கள். ரயர் பற்றி எரிந்து முடிந்ததும் சிறிது நேரத்தில் புல்டோசர் அவ்விடத்திற்கு வந்து தரையையெல்லாம் மட்டப்படுத்தியது. எல்லாம் முடியும் நேரத்தில் கிழக்கும் வெழுத்திருந்தது.

நான் கொழும்பில் நடந்த ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையிலும், மட்டக்களப்பில் நடந்த ஆணைக்குழுவிலுமாக மூன்று தடவைகள் சாட்சியம் அளித்துள்ளேன். இது வரைக்கும் இச்சம்பவங்கள் தொடர்பாக எதுவித முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை.

கை, நெஞ்சு போன்ற கத்தியால் குத்தப்பட்ட இடங்களில் வலி இருப்பதனால் எந்த வேலையையும் செய்ய முடியாத நிலையில் நான் இருக்கின்றேன். இது தொடர்பாக மேலும் சத்திர சிகிச்சை செய்ய வேண்டுமென வைத்தியர்கள் கூறியிருக்கிறார்கள் என்கிறார் அவர்.

# திருமலை வீதியோர ஆக்கிரமிப்பு?

மீளக்குடியேற்றம், குடியேற்றம் போன்ற விடயங்களில் அரசு சிறுபான்மைக்கும், பெரும்பான்மைக்கும் பாரபட்சம் காட்டிவருவது சகலரும் அறிந்தவிடயமாகும். திருகோணமலையில் இருந்து மொரவெவ வரையுமுள்ள பாரம்பரிய பல தமிழ் பிரதேசங்கள் இன்று பாழடைந்து கொண்டே இருக்கின்றன.

ஆனால் இப்பகுதியில் எப்படியோ சிங்கள மக்களைக் குடியேற்றி பாதுகாப்பதோடு, பவுசரில் தண்ணீரை காலடியில் கொண்டு போய் கொடுக்கும் அளவுக்கு பாதுகாப்பு பிரிவினர் பெரும்பான்மையினருக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

பீலியடி, இராவணன்வீதி, ஆறாம் கட்டை, கன்னியா, வெல்வெரி, வேப்பங்குளம், பன்குளம், மொரவெவ, பிள்ளையார் கோவிலடி போன்ற பகுதிகளும், வாய்க்கால்களை அண்டி வாழ்ந்த பகுதிகளும் இன்று தமிழ் மக்கள் இல்லாத பகுதிகளாகவே காட்சி தருகின்றன.

ஆனால் இப்பகுதியில் உள்ள மிஹிந்தபுரம், வில்கம் விகாரை போன்ற பகுதிகளில் பெரும்பான்மையினர் மீளக்குடியேற்றப்பட்டு சகல வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டுள்ளது. இந்த நாட்டின் பிரஜைகள் ''இலங்கையர்'' என்று அழைக்கப்பட்டுவார்கள் என ஆவணங்களில் அச்செழுத்தால் குறிக்கப்பட்டாலும் மீளக்குடியேற்றம், குடியேற்றம் போன்ற விடயங்களில் சிறுபான்மையினர் புறக்கணிப்புக்கே உள்ளாகிறார்கள்.

7ம்கட்டையில் கிறிஸ்தவர்களின் பாரம்பரிய பழம் பெரும் ஆலயமான புனித சந்தியாகப்பர் ஆலய வளவு இன்று படையினரின் முகாமாக மாறியுள்ளது. இந்த ஆலயம் படையினரின் நிர்வாக அலுவல்களுக்காகப் பாவிக்கப்படுகின்றது.

இலங்கையின் அரசியலமைப்பில் வணக்க ஸ்தலங்கள் பாதுகாக்கப் படும், கௌரவிக்கப்படும், எண்ணச் சுதந்திரம், மதச்சுதந்திரம், தனிநபர் சுதந்திரம் பாதுகாக்கப்படும் என எழுத்து வடிவிலே இருக்கின்றது. அவை நடைமுறையில் இல்லை என்பதை திருகோணமலை மாவட்டத்தில் அரச தரப்பினர் நடந்து கொள்ளும் விதத்தில் இருந்து தெட்டத்தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

இலங்கையில் எந்தவொரு பௌத்த விகாரையையாவது தரைமட்டமாக்கி விட்டு படை முகாம் அமைத்திருக்கிறார்களா? அப்படியான செய்திகளை நாம் கேட்டுள்ளோமா? ஆனால் சிறுபான்மையினரின் வணக்கத் தலங்கள் படை முகாம்களாக மாறி வருவதைக் கண்டுள்ளோம். கேட்டுள்ளோம்.

கன்னியா வில்கம விகாரை புனரமைக்கப்பட்டு, பாதுகாப்பளிக் கப்பட்டு, அதைச் சுற்றிவர பெரும்பான்மையினரை சகல வசதிகளுடன் குடியமர்த்தியவர்கள் ஏன் கிறிஸ்தவர்களின் ஆலயமான வெல்வெரி புனித சந்தியாகப்பர் ஆலயத்தை புனரமைத்து பாதுகாத்து அதை அண்டி வாழ்ந்த சிறுபான்மையினரை மீளக்குடியமர்த்தவில்லை?

கன்னியா வில்கம விகாரைப் பகுதியில் வாழும் பெரும்பான்மையினரை மிகப்பக்குவமாக திருகோணமலை நகருக்குக் கூட்டிக்கொண்டு போய் மீண்டும் பக்குவமாகக் கூட்டி வரும் படையினர் அப்பாவி சிறுபான்மையினருக்கு அப்படிச் செய்யலாமல்லவா? போக்குவரத்து இலவசமாக தம் இன மக்களுக்கு செய்யும் காருண்யம் படைத்தவர்கள் ஏன் இந்த மக்களைப் புறக்கணிக்கிறார்கள்?

ஹபரணையில் இருந்து திருமலை வரையுமுள்ள வீதிகள் இருமரங்குகளும் நன்றாகத் துப்பரவு செய்யப் பட்டு பெரும்பான்மையினர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். அது மாத்திரமல்ல அடிக்கொரு அரண்கள் அமைத்து பாதுகாப்பளிக்கப்பட்டு வருகின்றது. அது மாத்திரமல்ல, அப்பகுதிகளுக்கு பாதுகாப்பு படையினர் சிங்கபுர, சந்தாபுர போன்ற பெயர்களைச் சூட்டியும் உள்ளனர்.

இவற்றைத் தவறு என்று சுட்டிக் காட்டவோ, இதற்கு எதிராகக் குரல் கொடுக்கவோ இந்த மாவட்டத்தில் யாருமே இல்லை. இங்கு சிவில் நிர்வாகம் நடக்கின்றதா, இராணுவ நிர்வாகம் நடக்கின்றதா என்று கேள்வி கேட்கவும் யாரும் இல்லை.

அதிகாரிகள், நிர்வாகத்தில் தமிழர்களாக இருந்தாலும் ''பிச்சை வேண்டாம் நாயைப் பிடி'' என்ற நிலையில் உள்ளனர். இதனால் தவறுகள் நிரந்தர இடத்தைப் பிடித்து விட்டன. சில தமிழ் அதிகாரிகள் இரட்டை வேடத்தை அனுசரிப்பவர்களாகும். சிலர் ''ஏன் தான் நமக்கு வீண் தொல்லை'' என்றும், அனுபவிக்க வேண்டியவைகளை எந்தவித எல்லை வரம்பும் இன்றி அனுபவித்து வருகின்றனர். பாரம்பரிய பிரதேசங்களை இழந்துஅகதிமுகாமே தஞ்சம் என இவர்கள் வாழ்ந்து வருவதை வேதனையோடு கூற வேண்டியுள்ளது.

தமிழ்க் கட்சிகள் 'மௌனம் கலக நாஸ்தி' கொள்கையோடு தம் பிழைப்பில் கவனமாக இருக்கின்றன.

-துட்டகைமுனு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்